






ஸ்ரீ:




# சித்ரஸாரம்

[ஸ்ரீ கவிதார்க்கிகஸிம்ஹ,
ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர,
வேதாந்தாசார்ய, வேங்கடநாதார்யரின்
ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்துக்குச் சுருக்கு]

நெல்வாய் நைத்ருவ மாடபூஷி ஸௌம்யநாராயணாசார்யர்

2009



## அட்டைப்பட விளக்கம்

நல்லறிவின் மூலமான வேதத்தின் பொருளைச் சுருக்கிச் சொல்வது 'உபநிஷத்துக்கள்'; இவற்றின் உட்கருத்தைக் மையமாகக்கொண்டவை, 'மூன்று மந்த்ரங்கள்'. **மூலமந்த்ரம், சரம ச்லோகம், த்வயம்** என்ற இம்முப்பெரும் மந்த்ரங்களே "ரஹஸ்யத்ரயங்கள்" எனப்படுகின்றன. இவற்றின் ஸாரத்தை – உட்கருத்தை – "ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸார" க்ரந்தத்தின் மூலமாகக் கூறுவதே, ஸ்வாமி தேசிகனின் உத்தேச்யம்.

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தை சித்திரமாக சித்தரிக்க முனைந்த இந்நூலான "சித்ரஸார" ஆசிரியரால், அட்டைப்படத்தில் "மந்த்ரங்களை விளக்கும் முன், மந்த்ரத்தினால் குறிக்கப்படும் தேவதை- மந்த்ரத்தை அருளிய ஆசார்யர்-மந்த்ரம் ஆகிய மூன்றையும் அநுஸந்திக்க வேணும்" என்கிற க்ரமத்தைக் குறிப்பதாக மூன்று தனி வட்டங்களால், மூன்றும் நமஸ்காரம் செய்யப்படுகின்றன.

மேலும், வேதம்-உபநிஷத்-மந்த்ரம்-அவற்றின் ஸாரம் என்ற இந்நான்கும் 'வட்டத்துக்குள் வட்ட/உருவமாக' குறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள், எட்டெழுத்து கொண்டதான மூலமந்த்ரம், **'எண் கோணத்தாலும்'** ; கண்ணனின் கட்டளையான சரம ச்லோகம், **'உபதேச-முத்ரையாலும்'** ; அநுஷ்டான க்ரமத்தைச் சொல்லும் 6 பதங்களைக்கொண்ட த்வயம், **'அறுகோணத்தாலும்'** உருவகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதோடு, உபாயபரமான த்வயத்தின் பூர்வ கண்டம் **உள் வட்டமாகவும்**, முடிவில்லா புருஷார்த்தத்தை விளக்கும் உத்தர கண்டம் **எல்லையில்லா வெளி வட்டமாகவும்** குறிக்கப்பட்டுள்ளது.

இன்னும், ஸ்வரூபத்தை விளக்கும் மூலமந்த்ரமும், உபாயத்தை விதிக்கும் சரம ச்லோகமும், முடிந்தவைகளாகையால், முழு வட்டங்களாலும்; ' **போக்யமான**' த்வயம், உபாயத்தை அநுஷ்டிக்கும் போதும் / தொடர்ந்து எப்போதும் அநுஸந்திக்கப்படுவதாய் (*த்வயம் அர்தாநுஸந்தானேன ஸஹ ஸதைவம் வக்தா . .* ) இருப்பதால், 'முடிவு பெறாத வட்டமாயும்' சித்தரிக்கப்பட்டுள்ளன.

க்ரந்தத்தின் தனியன் ஒன்றில் *'த்ரி ஸ்ரோதஸம் அகல்மஷாம்'* (முப்பெருக்குடைய – ஸ்வர்கம், பூமி, பாதாளம் என மூன்று விதமாகப் பெருகும் - புனித கங்கை) என மூன்று மந்த்ரங்களையும் மூன்று **தாரை**யாக உவமைப்படுத்தியிருப்பது, அட்டைப்படத்தில் தனி வட்டத்தோடு சேர்க்கும் **மூன்று கோடுகளால்** காட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

## விண்ணப்பம்

ஆசார்ய ஸார்வபௌமரான ஸ்வாமி தேசிகன் ஸர்வோபஜீவ்யமாக ஸாதித்த க்ரந்தங்களில் தலை சிறந்தது "ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்" ஆகும் என்பது ஸாத்விகர்களின் ஒருமித்த கருத்து. தெளியாத மறைநிலங்கள் தெளிவதற்கு, ஆழ்வார்களின் திவ்ய ஸூக்திகள் எவ்வாறு உபகாரகமாக அமைந்தனவோ, அவ்வண்ணமே ஸ்ரீபாஷ்யாதி விஷயங்களில் விசேஷ நிலங்கள் தெளிவதற்கு, ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் பரிசயம் அவர்ஜநீயம் என ஆன்றோர் சொல்லக் கேட்டோம்.

ஸ்வாமி தேசிகனை எம்பெருமானுக்கும், அவரிடத்தில்நின்றும் உண்டான 'ரஹஸ்யத்ரய ஸாரம்' என்ற மூன்று (தத்வம்-ஹிதம்-புருஷார்த்தம் *அல்லது* அஷ்டாக்ஷரம்-த்வயம்-சரம ச்லோகம் என்ற) தாரைகளைக்கொண்ட ஸ்ரீஸூக்தியை, முப்பெருக்குடைய (ஸ்வர்கம்-பூமி-பாதாளம் என ஓடும்) புனித கங்கைக்கும் உவமைப் படுத்தியும்; "ரஹஸ்யத்ரயஸாரமாம் ப்ரஹ்மத்தை அறிந்தோம் என்பவர் அறிவிலிகள்; அறியோம் என்பவரே அறிந்தவர்" என்றும் க்ரந்தத்தின் தனியன்களில் பூர்வர்கள் அநுபவிக்கின்றனர். ஆக, இக் க்ரந்தத்தின் விஷயங்களை விவரித்தும் மாளாது; சுருக்கிச் சொல்லினும் சுவை குன்றாது. *'அணோரணீயாந் மஹதோ மஹீயான்"* என ஆரணம் அருளியது இக்க்ரந்தத்தையும் கருத்தில் வைத்தோ !!

ஸ்வாமியின் *சைலி*யோ, மூலக்ரந்தத்தில் தத்வங்களை (concepts) 'ப்ரமாண-த்ருஷ்டாந்த-உதாஹரண-ஆக்ஷேப-ஸமாதானங்களுடன் ஸாதித்திருப்பதே'. நாமோ, ப்ரமாணாதிகளில் புத்தியைச்செலுத்தி 'ப்ரமேய ஸித்தியை' இழக்கும் இளநெஞ்சராயும்; மிகச்சுருக்கமாகத் தத்வங்களைமட்டும் அறிய ஆசைகொண்ட, 'உரித்த வாழைப்பழம் நாடுபவராயும்' இருக்கிறோம். இத்தினவைத் தணிக்க, ஆசார்ய க்ருபையை அவலம்பித்து எடுத்த ப்ரயத்நமே இந்த **சித்ர ஸாரம்**. இதில், மூலக்ரந்தத்தின் ஒவ்வொரு அதிகாரத்திலும் தெளிவித்த **தத்வங்கள் மட்டும்**, வரைபடங்கள்-அட்டவணை போன்றவை மூலம் சுருக்கமாக சித்தரிக்கப்பட்டுள்ளன.

ஆதுனிக ஆஸ்திகர்களுக்கு, இது ஒரு ஆரம்பமாக அமையாதோ என்று நப்பாசை; அதே ஸமயத்தில், கற்றோர்கள் இதை கச்சிதமான கையேடாகக் கருதுவரேல், ஸ்வாமி தேசிகனுக்கு (இப்பதிப்பின் கடைசியில் ஓதப்பட்ட ஸ்ரீ திருக்குடந்தை தேசிகன் அருளிச்செய்த) **ஸ்ரீவேதாந்த தேசிக ஸஹஸ்ர நாமாவளி**யால் புஷ்பாஞ்ஜலி செய்து, க்ருதார்த்தனாகும் . . . . ஸ்ரீமதாம் ஸ்ரீ ரங்கராமாநுஜ மஹாதேசிகாநாம் அங்க்ரிரஜ: கணமும்,
கோஷ்டீபுரம் ஸ்ரீ ராமாநுஜார்ய மஹாதேசிக- திவ்ய கடாக்ஷ லப்தவானுமான

ஸௌம்யநாராயண தாஸ:




ஸ்ரீமந் நாராயணன்

## ஸ்ரீஸார ஸந்மார்க்க ஸோபாநம்

(ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார ஆத்யந்த ச்லோகங்களின் பகுதிகளால் கட்டப்பட்டது)



## ஸ்ரீஸார ஸத்மார்க்க ஸோபாநம்

(ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார ஆத்யந்த ச்லோகங்களின் தமிழ் கருத்தால் கட்டப்பட்டது)



# FOREWORD

by

'srI nrusimha seva rasikan'

**Oppiliappan Koil SrI VaradAchAri SaThakopan**

(Editor-in-Chief of SrIHayagrIvan eBooks)

---

It is adiyEn's privelege and pleasure to announce the release of the ebook Chitra Saaram in our Sri Hayagrivan series by Nelvai Madabhushi SowmyanarayanAcchAr Swamy of Mumbay.

Swamy is a C.A by profession and is a former General Manger of United India Insurance Co Ltd. He has also held position as a CEO in another corporation.

Nelvay Swamy is the thiruvadi of the revered KozhiyAlam Swamy. He is also the nephew of the legendary GhOshtipuram Swamy and the son in law of Sri Oppili Swamy of DevanAr ViLAgam, the PoorvAsrama brother of the 43rd Pattam Srimath Azhagiya Singar, Sri VaNN SaThakOpa Sri VeerarAghava Yatheendhra MahA Desikan, adiyEn's SamASrayaNa AchAryan.

Sri Nelvai Swamy is a Scholar's scholar. His is a Postgraduate Text book on Srimad Rahasya Traya Saaram and it is an exceptional/extraordinary monograph that can only be created by an Executive, who has heard and made many presentations with his audience in mind. His deep Knowledge about the Saaram of Swamy Desikan's magnificent SrI Sookti via sampradhAyic KaalakshEpam route from SadAcharyaas, His remarkable analytical power to summarize crisply difficult doctrines, His skills to conceptualize the inter-relationships between the abstract doctrines in a flow chart route, His presentation skills using graphic format as the powerful teaching tool have resulted in the creation of a scholarly book by this brilliant and gifted Teacher. He has also provided KaalakshEpam for fifty VidhyArthis over two years on Srimad Rahasya Traya Saaram and has honed/perfected his instructional skills to meet the needs of the students at all levels of Sri BhAshyakArar's Parama Vaidheeka sampradhAyam.

It has been a delight to read this book with a sense of awe for its organizational brilliance which permeates the whole monograph. Certain amount of background knowledge on Rahasyatrayams would be essential to benefit from this book but Swamy has helped a great deal by creating special flow of thought thru tutorials using the power of rich and imaginative graphics. What is amazing about this book is that it has attempted and succeeded in transforming abstruse/abstract doctrines into easily assimilable modules of knowledge through innovative ways of using the power of graphics. As they say, a picture is worth a thousand words. What is unique here is that his field of coverage is the sacred words of the great AchAryan, Swamy Desikan.

When I reflect on the adept and facile way Nelvay Swamy has handled the presentation graphics as a powerful instructional tool, I am reminded of one of the rapidly growing fields of Computer Science (viz)., Scientific Visualization. In this new field, powerful engines permit the dynamic visualization of the execution of huge software for complex application programs in main-frames. It is accepted that programming is an art and not (yet) a Science. As a result of this, various application programs developed by different programmers to solve the same problem run at different speeds. If one could only visually follow the path of the processing of the assigned task, one can flag the nodes where the program stutters and based on the knowledge gained, the programmer can make "a by pass" or develop a different route for speedier execution of an application program. What Nelvai Swamy has accomplished is a kind of successful adaptation of the power of visualization techniques to a hitherto unattempted area (Viz) study of Vedantam.

It is a pleasure to go through the 32 adhikArams of Srimad Rahasya Traya Saaram with the anjanam of graphics to navigate the ocean of Bhagavad Raamanuja darsanam.The coverage of some of the adhikArams are short and the others are longer. Let me share with you a small subset of impressions from the readings of Chitra Saaram.

- The symbolism captured in the cover of this monograph using open and closed circles, hexagon, squares and octagon to capture the essence of the three rahasyams is a rare intellectual treat.

- The inter-threading of the green padhams to form complete sentences in the ViNNappam section reminds me of the Paasurappadi RaamAyaNam. This is a masterly touch to bring out the Saara sangathy.

- Translation of the Sanskrit titles for different adhikArams into Tamil shows the author's mastery in handling Tamil language (e.g: Artha Panchakam's translation into "adippadayil alarntha aRivu").

- **Saara Nishkarsha adhikAram:** Swamy Desikan has been saluted as "Saaranishkarsha KuSalar". He has instructed us that the Saastrams are like a vast ocean and we should take out of it what is the most quintessential (Saaratamam) and discard the others (asAram, alpa sAram, Saaram. adhika sAram). Srimath RahasyatrayasAram has many vachanams and mantrams about saara vishayams like upAyam and upEyam and yet our AchAryAs have accepted only the three rahsyams as the sAratamam. Sri Nelvay Swamy has distilled here the essence of the Saara Nishkarsha adhikAram in an unparalleled graphical manner to capture the essence of Swamy Desikan's upadEsams on the Saaratamam. Incredible effort has gone into the visualization of the essence of the Saastrams. Swamy Desikan was very concerned about us understanding what is Saaratamam and took a lot of effort to comment on it in His VirOdha ParihAram. Sri Nelvay Swamy has captured graphically these upadEsams in a crisp manner.

- **PradhAna PratitantrAdhikAram:** Swamy Desikan has been revered as "PradhAna pratitantra Vith". This doctrine is unique to Srimath BhAshyakAra SiddhAntam, where PradhAna Paritantra siddhAnta doctrines such as SareerAthma bhAva sambhandham are covered. The three rahsyams help us understand the Phalans of comprehending Sareera-Aatma, Sesha-Seshi sambhandhams.These doctrines are fundamental and unique to our darsnam and are not easily understood unless a SadAchAryan's

anugraham befalls on us. The depth of Nelvay Swamy's understanding of these doctrines permits him to visualize these relationships and capture them in a brilliantly intutive manner.

- **Tattva Traya ChintanAdhikAram:** ChEtanam, achEtanam and Iswaran are the Tattva Trayam. A clear understanding of these Tattvams is essential for us to be saved from the vipareetams like SareerAtma bramam, svatantrAtma bramam and NireeSvara vaata ruchi. Concerned about the need for comprehending these tattvams in general and those of the nitya dhravyam of Prakruti in particular, NelvAy Swami has designed another outstanding graphic illustration about the inter-relationship between the 24 achEtana tattvams. Concepts about quintiplication (pancheekaraNam) are developed graphically for us to gain a clear understanding of these tattvams.

- Outstanding use of graphics to summarize the content of AparAdha parihArAdhikaram is an example of similar success with other "tough" adhikArams.

- The summary on Bhagavaan's AakArams, the status of Kruta Krutyan before and after Prapatti, the condensation of ArthAnusASana BhAgam with the use of Swamy Desikan's Kaarikai are other stellar examples of Nelvay's mastery of the subject matter.

In a monograph consisting of just 72 pages, Nelvay Swamy has brought to us the esssence of Srimad Rahasya Traya Saram with multiple chitrams.

It is a delight to read this important addition to commentary on Swamy Desikan's magnum opus and benefit from the thoughtfulness with which it has been prepared.

dAsan,

Oppiliappan Koil VaradAchAri SaThakOpan 5$^{th}$ April 2009
SrImath Azhagiya Singar Thiruvadi (Panguni - Ekadasi)

| ஸார ஸரணி | | ஸாரத்தின் பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|---|
| ஸ்ரீ குருபரம்பராஸாரம் | | "நன்றும் தீதும் நமக்கு உரைப்பாரை" நாடிப்பெறுதல் | 1 |
| அர்த்தாநுசாஸன பாகம் | | | |
| 1. | உபோத்காதாதிகாரம் | க்ரந்தத்தின் தலைவாசல் திறப்பு | 5 |
| 2. | ஸார நிஷ்கர்ஷாதிகாரம் | "எட்டிரண்டெண்ணிய சதிர்க்கும் தனிநிலை" | 7 |
| 3. | ப்ரதாந ப்ரதிதந்த்ராதிகாரம் | "துழாய்முடியான் உடம்பாய் நாமடியோம்" என்ற முக்கிய அடிப்படைக் கொள்கை | 8 |
| 4. | அர்த்த பஞ்சகாதிகாரம் | அடிப்படையில் அலர்ந்த ஐந்தறிவு | 11 |
| 5. | தத்வத்ரய சிந்தநாதிகாரம் | "அரு / உருவானவை" பற்றிய ஆய்வு | 14 |
| 6. | பரதேவதா பாரமார்த்யாதி-காரம் | "திருமாதுடன் நின்ற புராணன்" | 19 |
| 7. | முமுக்ஷுத்வாதிகாரம் | "வீடினை வேண்டும் பெரும்பயன்" | 21 |
| 8. | அதிகாரி விபாகாதிகாரம் | "நீண்டும் குறுகியும் நிற்கும்" நிலைகளை ஏற்பவர் | 23 |
| 9. | உபாய விபாகாதிகாரம் | "பழமறையின் பரம நெறி" | 24 |
| 10. | ப்ரபத்தி யோக்யாதிகாரம் | "அநந்நியராய் வந்து அடையும் வகை" | 27 |
| 11. | பரிகரவிபாகாதிகாரம் | "துணையாம் பரனை வரிக்கும் வகை" | 28 |
| 12. | ஸாங்க ப்ரபதநாதிகாரம் | "அறமே பரமென்று அடைக்கலம் வைத்தமை" | 31 |
| 13. | க்ருதக்ருத்யாதிகாரம் | "வேள்வியனைத்தும் முடித்தமை" | 33 |
| 14. | ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகாரம் | "மூன்றில் நிலையுடைமை" | 35 |
| 15. | உத்தர க்ருத்யாதிகாரம் | "கடன்கள் கழற்றிய" அடிமை | 37 |
| 16. | புருஷார்த்த காஷ்டாதிகாரம் | "நல்லடியார்க்கு ஆதரம் மிக்க அடிமை" | 39 |
| 17. | சாஸ்த்ரீய நியமநாதிகாரம் | "மேதினியில் இருப்பது விதியினாலே" | 41 |
| 18. | அபராத பரிஹாராதிகாரம் | "மாளாத வினையனைத்தும் மாளும் வகை" | 43 |
| 19. | ஸ்தாந விசேஷாதிகாரம் | "வானாடுகந்தவர் வையத்திருப்பிடம் நன்நிலம்" | 45 |
| 20. | நிர்யாணாதிகாரம் | "உடலச்சிறை வெட்டிவிட்டு வழிப்படுத்தும் வகை" | 46 |

| | ஸாரஸரணி | ஸாரத்தின் பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|---|
| 21. | கதி சிந்தநாதிகாரம் | "வானேறும் வழி கண்டோம்" | 48 |
| 22. | பரிபூர்ண ப்ரஹ்மாநுபவா-திகாரம் | "அந்தமிலாப்பேரின்பம் அருந்துதல்" / "குருக்கள் குரைகழற்கீழ் மகிழ்ந்தெழும் போகத்து மன்னுதல்" | 49 |
| | | ஸ்திரீகரண பாகம் | |
| 23. | ஸித்தோபாய *சோதநாதிகாரம்* | "திருநாரணனே மன்னிய வன்சரண்" | 52 |
| 24. | ஸாத்யோபாய *சோதநாதிகாரம்* | "வரிக்கின்றனன் குறியொன்றால்" | 57 |
| 25. | ப்ரபாவ வ்யவஸ்தாதிகாரம் | அடியார் ஆதரத்தில் "ஆரண நீதிநெறி குலையாமை" | 62 |
| 26. | ப்ரபாவ ரக்ஷாதிகாரம் | "தண்மை கிடக்க தரம்" உள்ளமை | 64 |
| | | பத-வாக்ய-யோஜனா பாகம் | |
| 27. | மூலமந்த்ராதிகாரம் | "நன்மனு ஓதினம்" | 66 |
| 28. | த்வயாதிகாரம் | "திருமால் பாதமிரண்டும் சரணெனப்பற்றி, அடிமை" கொள்ளுதல் | 74 |
| 29. | சரம *ச்லோகாதிகாரம்* | "மன்னருள் வாசகத்தால் மருளற்றமை" | 77 |
| | | ஸம்ப்ரதாய ப்ரக்ரியாபாகம் | |
| 30. | ஆசார்ய க்ருத்யாதிகாரம் | "அருளுற்ற சிந்தையினால் அழியா விளக்கேற்றினர்" | 84 |
| 31. | *சிஷ்ய* க்ருத்யாதிகாரம் | "இருளனைத்தும் மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறு" | 85 |
| 32. | நிகமநாதிகாரம் | "நிலைகள் தானுளனாய் உகக்கும் தரம்" | 86 |

| | |
|---|---|
| ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார விஷய கர்ப்பமான நாமாவளி ஸ்தோத்ரம் | 87 |




ஸ்ரீ:

**இந்நூலின் அதிகாரங்களாம் முப்பத்து மூன்றும் ஒரே விஷயத்தைச் சொல்லும் தொடர்க்கோவையே என்று காட்டும் ஸார ஸங்கதி**

( கீழ்க்கண்ட வாக்யங்களின் **பச்சைப் பதங்களை** மட்டும் சேர்த்துப் படித்தால், இக்க்ரந்தத்தின் கோர்வையான பொருள் கிடைப்பது, ரஸிக்கத்தகுந்தது )

**& & & & &**

'யச்ச்ரேயஸ்யாந் நிச்சிதம் ப்ரூஹி தன்மே *சிஷ்யஸ்தேஹம் சாதி* மாம் த்வாம் ப்ரபந்நம்' என அர்ஜுநன் வேண்டிய கணக்கிலே, பயனை விழைவோர் ஆசார்யரை அணுக வேண்டியதன் அவச்யத்தை விளக்குவது **ஸ்ரீ குருபரம்பராஸாரம்**

1.அவர் கடாக்ஷத்தால் "மூன்றினுள்ளம் நாளும் உகக்கப்பெறுவதே" இக்க்ரந்தத்தின் பயன் என விளக்குகிறது - - **உபோத்காதாதிகாரம்**

2.ஆசார்யரிடம் கற்கும் கல்விகள் பலவாயினும், "எட்டிரண்டெண்ணுவதே சதிர்க்கும் தனிநிலை" என்கிறது - - **ஸார நிஷ்கர்ஷாதிகாரம்**

3.இம்மூன்றில் முக்கியமாம் மூலமந்த்ரம், 'முதல்வனுக்கு இவ்வுலகு உடல்' –எனத்தெளிவிக்கும் என்கிறது - - - - **ப்ரதாந ப்ரதிதந்த்ராதிகாரம்**

4.இம்முக்கியத்தைச் சார்ந்ததான ஐந்தறிவு புகட்டி நிற்கிறது **அர்த்த பஞ்சகாதிகாரம்**

5.இவ்வைந்தில் 'உடம்பில் கொடு மோஹம் கெட' உதவும் முத்தத்துவத்தை விளக்கி நிற்கிறது - - - **தத்வத்ரய சிந்தநாதிகாரம்**

6.இத்தத்வம் மூன்றில் 'திருமாதுடன்நின்ற புராணனே' புகல்/ பயன் என்கிறது - - - **பரதேவதா பாரமார்த்யாதிகாரம்**

7.இவ்வளவான அறிவால், 'எனக்குரியன், எனது பரம், என்பேறென்னாது' அஞ்சிறைக்கு அஞ்சி 'பெரும் பயன் வீடினை வேண்டுபவர்' முமுக்ஷு என விளக்கமளிக்கிறது - - - **முமுக்ஷுத்வாதிகாரம்**

8.இவ்விதம் 'வீடு' வேண்டும் தகுதியுடையோர், **செய்யும் பக்தி** அல்லது ப்ரபத்திதான் இருவகையாய் நின்றபோதிலும், அவர்கள் உடலை விட்டபின் பெறும்பேறு ஒரே வகைதான் என விவரிக்கிறது - - - **அதிகாரி விபாகாதிகாரம்**

9.இவ்வதிகாரிகள் அநுஷ்டிக்க வேண்டிய மோக்ஷோபாயங்கள், பக்தி/ப்ரபத்தியாய் இரு வகை என விளக்கும் - - - **உபாய விபாகாதிகாரம்**

10.இவ்விரு உபாயங்களுக்குள், ப்ரபத்தி செய்யத் தகுதியை 15 வகையாய் எடுத்து, இத்தகுதியொழிய 'ஜாதி / ஆச்ரமம்' போன்ற வேறு தகுதியேதும் வேண்டாது, அனைத்துலகும் வந்தடைய உரியது என தேர்ந்தளிக்கிறது **ப்ரபத்தி யோக்யாதிகாரம்**

11.செய்ய விழையும் ப்ரபத்தியின் அங்கங்களை விளக்கி நிற்கிறது - - - **பரிகர விபாகாதிகாரம்**

12.இப்ப்ரபத்திக்கு அங்கி, பரம் அறுத்து 'பரமனுக்கு மிக்க அடிமை' என்ற நினைப்பே என்கிறது - - - - **ஸாங்க ப்ரபதநாதிகாரம்**

13.இப்படி ப்ரபத்தி செய்வதற்கு முன் ***'சோக****முற்றவனாய்'*, செய்தபின் ***'சோக****மற்றவனாய்'* – வேள்வி அனைத்தும் முடித்து நிற்கும் நிலையை அறிவிக்கிறது - - - - **க்ருதக்ருத்யாதிகாரம்**

14.இந்நிலையில் நிஷ்டையுடன் இருப்பதை அறியும்படியையும், அப்படிப்பட்டவர்கள் 'மேதினிமேவிய விண்ணவர்' எனவும் விவரிக்கிறது **ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகாரம்**

15.மேதினியில் இருக்குமளவும், பகவத்-ஆஜ்ஞா-அனுஜ்ஞா கைங்கர்யங்களை சங்கிலி துவக்குபோல் உகந்து செய்துவரவேண்டும் என்கிறது - **உத்தர க்ருத்யாதிகாரம்**

16.இக்கைங்கர்யங்களை பாகவதர்கள் **வரையில்** செய்யப்ராப்தம் என்கிறது - - - **புருஷார்த்த காஷ்டாதிகாரம்**

17.இப்படி, பகவத்-பாகவத கைங்கர்யங்களை *சாஸ்த்ர*ப்படியே செய்து வரச் சொல்கிறது - - - - ***சாஸ்த்ரீய* நியமநாதிகாரம்**

18.இவ்வாறு எஞ்சிய காலத்தைக்கழிக்கும் ப்ரபந்நனுக்கு, ப்ராரப்த-கர்ம வி*சேஷ*த்தினால் அறியாமலோ/ ஆபத்தில் அறிந்தோ செய்யும் பாபங்கள் ஒட்டாது; அநாபத்தில் அறிந்து செய்பவை, ப்ராய*ச்*சித்தம் செய்வதாலோ/ சிறு-தண்டனை அனுபவித்தோ கழியும் என்பதைக் கூறுகிறது - - **அபராத பரிஹாராதிகாரம்**

19.இப்படி எஞ்சிய காலத்தைக் கழிக்க, வர்ண-தர்மங்கள் நிலைத்திருப்பதாய் / பாகவதர்கள் வஸிப்பதாய் உள்ள இடமே ஏற்றது என்கிறது **ஸ்தாந வி*சேஷ*ாதிகாரம்**

20.இப்படி வர்த்திக்கும் ப்ரபந்நனுக்கு, *ச*ரீரம்விழக் குறித்த ஸமயம் வந்தவாறே, எம்பெருமான் தன்னைப் பற்றிய கடைசி நினைவை உண்டாக்கி, ஜீவனை ஸ்தூல *ச*ரீரத்தைவிட்டு ப்ரஹ்மநாடி வழியாக அர்ச்சிராதி மார்க்கத்தில் புறப்படச் செய்கிறான் என்கிறது - - - - **நிர்யாணாதிகாரம்**

21.இப்படிப் புறப்பட்ட ஜீவனை, எம்பெருமான் போகங்கள் பல அனுபவிக்கச்செய்து, விரஜா நதியைக் கடத்துவித்து, அப்ராக்ருதமான ராஜோபசாரங்களைப் பண்ணுவித்து, அழகோலத்திலே நித்ய-முக்தர்களோடு புரையப் பரிமாறும்படி செய்விக்கிறான் என்கிறது - - - கதி சிந்தநாதிகாரம்

22. இவ்விதம் இந்த ஜீவன், தேசவிசேஷத்தை அடைந்து எல்லா தேச-கால-நிலைகளிலும் எம்பெருமானுக்கு கைங்கர்யம் செய்துகொண்டு, முழுமையான பேரின்பத்தை, மாறுதலின்றி அநுபவித்துக் கொண்டே இருப்பான் என்கிறது

- - - - பரிபூர்ண ப்ரஹ்மாநுபவாதிகாரம்

23.மேலே இதுவரை விவரித்த விஷயங்களில் – குறிப்பாக ஸித்தோபாயமான எம்பெருமான் ஸ்வாதந்த்ர்யம்/ கருணை/ *சேஷித்வம்*/ லக்ஷ்மீ ஸஹிதத்வம் ஆகிய குணங்கள் பற்றிய கலக்கங்களுக்கு ஸமாதாநம் சொல்லி - அறிந்த ஜ்ஞாநத்தையும் ஸ்திரப்படுத்துகிறது - - ஸித்தோபாய *சோ*தநாதிகாரம்

24.பக்தி-ப்ரபத்தியாகிற ஸாத்யோபாயங்களைப்பற்றிய அதிகாரம்/ ஸ்வரூபம்/ பரிகர ங்கள் பற்றிய கலக்கங்களைப் போக்கி, அறிந்த ஜ்ஞாநத்தையும் ஸ்திரப்படுத்துகிறது

- - ஸாத்யோபாய *சோ*தநாதிகாரம்

25. ஸாத்யோபாயங்களின் ப்ரபாவத்தை வரையறுத்துக் கூறுகிறது -

- - - ப்ரபாவ வ்யவஸ்தாதிகாரம்

26. ஸாத்யோபாயங்களின் ப்ரபாவத்தை ரக்ஷிக்கிறது ப்ரபாவ ரக்ஷாதிகாரம்

27. அடுத்து அஷ்டாக்ஷரத்தின் - பத-வாக்ய யோஜனைகளை விவரிக்கிறது -

- - - - மூலமந்த்ராதிகாரம்

28. த்வயத்தின் பத-வாக்ய-யோஜனைகளை விவரிக்கிறது த்வயாதிகாரம்

29. சரம*ச்*லோகத்தின் பத-வாக்ய-யோஜனைகளை விவரிக்கிறது -

சரம *ச்*லோகாதிகாரம்

30. கடைசியாக ஆசார்யர்களின் செயல்பாட்டைச் சொல்கிறது -

- - - - ஆசார்ய க்ருத்யாதிகாரம்

31. *சி*ஷ்யர்களின் கடமையைக் குறிப்பிட்டுச் சொல்கிறது - *சி*ஷ்ய க்ருத்யாதிகாரம்

32. க்ரந்தத்தை *பலச்*ருதியுடன் தலைக்கட்டுகிறது - நிகமநாதிகாரம்

(இதுவரை குறிப்பிட்ட பச்சைப் பதங்கள் மட்டும் எடுத்தால் இவ்வாறு வாக்யங்க ளாக அமைவதைக் காணலாம் :-)

⇔ ஆசார்யரை அணுக, அவர் கடாக்ஷத்தால் கற்கும் மூலமந்த்ரம், ஐந்தறிவு புகட்டி, இவ்வைந்தில் முத்தத்துவத்தை விளக்கி, இத்தத்வம் மூன்றில், புராணனே புகல்/ பயன் என்கிறது.

⇔ வீடினை வேண்டுபவர் செய்யும் பக்தி அல்லது ப்ரபத்திதான், மோக்ஷோபாயங்கள். ப்ரபத்தி செய்ய அனைத்துலகும் உரியது என அங்கங்களை விளக்கி, அங்கி பரமனுக்கு அடிமை என்ற நினைப்பே என்கிறது.

⇔ இப்படி வேள்விமுடித்து நிஷ்டையுடன், மேதினியில் இருக்குமளவும் கைங்கர்யங்களை பாகவதர்கள்வரையில், சாஸ்த்ரப்படியே செய்து காலத்தைக் கழிக்கும் ப்ரபந்நனுக்கு பாபங்கள் கழியும்.

⇔ காலத்தைக் கழிக்க, பாகவதர்கள் வஸிப்பதாய் உள்ள இடமே ஏற்றது.

⇔ சரீரம்விழ, எம்பெருமான் ஜீவனை அர்ச்சிராதி மார்க்கத்தில் புறப்படச் செய்கிறான்.

⇔ புறப்பட்ட ஜீவனை விரஜா நதியைக் கடத்துவித்து, அழகோலத்திலே நித்ய-முக்தர்களோடு புரையப் பரிமாறும்படி செய்விக்கிறான்.

⇔ ஜீவன், தேசவிசேஷத்தை அடைந்து எம்பெருமானுக்கு கைங்கர்யம் செய்துகொண்டு, முழுமையான பேரின்பத்தை அநுபவித்துக் கொண்டே இருப்பான்.

⇔ மேலே, ஸித்தோபாயமான எம்பெருமானைப் பற்றியும், ஸாத்யோபாய ங்களைப்பற்றியும் அறிந்த ஜ்ஞாநத்தையும் ஸ்திரபபடுத்துகிறது.

⇔ ஸாத்யோபாய ப்ரபாவத்தை வரையறுத்து / ரக்ஷிக்கிறது.

⇔ அடுத்து அஷ்டாக்ஷர – த்வய- சரமச்லோகத்தின் பத-வாக்ய-யோஜனை களை விவரிக்கிறது.

⇔ கடைசியாக ஆசார்ய / சிஷ்யர்களின் கடமையைக் குறிப்பிட்டு, க்ரந்தத்தை பலச்ருதியுடன் தலைக்கட்டுகிறது.



## க்ரந்தத்தில் கையாண்ட சில பதங்களின் லக்ஷணம்

### ப்ரதாந ப்ரதிதந்த்ராதிகாரம்

த்ரவ்யம்- என்பது, சேதநம்/அசேதநம்/ஈச்வரன் என்ற பிரிவையுடைய அந்த வஸ்துவே.

அத்ரவ்யம் – என்பது, த்ரவ்யத்தின் (குணம் போன்ற) தன்மை/ பண்புகள்.

ஸத்தா – ஸ்வரூபம்; வஸ்துவின் முதல் க்ஷண ஸம்பந்தத்தைச் சொல்வது.

ஸ்திதி - வஸ்துவின் மேன்மேலான க்ஷண ஸம்பந்தத்தைச் சொல்வது.

ப்ரவ்ருத்தி - த்ரவ்யத்தின் செயல்.

தர்மம் – த்ரவ்யத்தின் அடையாளம் / லக்ஷணம்.

தர்மி – தர்மத்தை உடைய த்ரவ்யம்

ஸ்வரூபநிரூபக தர்மம் – எந்த தர்மம் அறியப்படாவிட்டால், தர்மி ஸ்வரூபமே அறியமுடியாதோ, அது.

நிரூபித ஸ்வரூப விசேஷணம் – எந்த தர்மம், தர்மிஸ்வரூபத்தை, மற்றவைகளைவிட வேறாகத் தெரிவிக்கிறதோ

ஆத்மா – ஒரு த்ரவ்யத்துக்கு எக்கால/ எந்த நிலையிலும் தாரகனாய், நியந்தாவாய் சேஷியாயிருக்கை.

சரீரம் – ஒரு சேதநனுக்கு, எக்கால/ எந்த நிலையிலும் ஆதேயமாய் விதேயமாய் சேஷமாயிருக்கை.

### தத்வத்ரய சிந்தநாதிகாரம்

அசேதநத்வம் – ஜ்ஞாநத்துக்கு ஆச்ரயமாய், பிறர்க்கே தோன்றுவதாய் இருப்பது.

சேதநத்வம் – ஜ்ஞாநத்தை உடையதாயிருக்கை.

ஜ்ஞாநத்வம் – தன்னுடையவோ/ வேறொன்றினுடையவோ இருக்கையை அறியச் செய்கை.

ஜடத்வம் – ஸ்வயம் ப்ரகாசம் அற்றிருக்கை

ஸ்வயம் ப்ரகாசத்வம் – தான் தெரியும்படிக்கு, வேறொரு ஜ்ஞாநத்தின் உதவியின்றியும், ப்ரகாசிப்பது.

ப்ரத்யக்த்வம் – தனக்கு, தான் தன் குணாதிகளோடு தோற்றுகை.

விஷயித்வம் – தன்னை ஒழிந்ததொன்றைக் காட்டுதல்.

ஆத்ம வர்க லக்ஷணம் – சேதநத்வமும் ப்ரத்யக்த்வமும்

ஈச்வர லக்ஷணம் - விபுத்வ/ ஸ்வாமித்வத்தோடு சேதநனாயிருக்கை

ஜீவ லக்ஷணம் – அணுவாயும் சேஷனாயும் இருக்கை

அசேதந லக்ஷணம் – ஜ்ஞாநாச்ரயமன்றிக்கே (மற்றவர்க்கே தோன்றக்கடவனவாக) இருக்கை.

## ப்ரபத்தி யோக்யாதிகாரம்

அதிகாரம் - *பல*/ உபாயத்தில் இழிபவனுக்கு *பல*த்தில் அர்த்தித்வமும் உபாயத்தில் ஸாமர்த்யமும்

*பலம்* – அதிகாரமுடையவனுக்கு ப்ரயோஜநமாய் அடையப்படுவதாக இருப்பது.

அர்த்தித்வம் – அடையவேண்டுமென்ற ஆசை.

உபாயம் – *பல*த்தை அடைய செய்யவேண்டியதாக விதிக்கப்பட்டது.

ஸாமர்த்யம் – *சாஸ்த்ர*த்தை அறிகை/ அறிந்தபடி அநுஷ்டிக்க வல்லனாகை/ *சாஸ்த்ர*ம் சொன்ன ஜாதி -குணாதிகள் உடைமை

ஆகிஞ்சன்யம் – வேறொரு உபாயத்தை (உபாஸநத்தை) செய்வதில் ஸாமர்த்ய மில்லாமை.

அநந்ய கதித்வம் – (மோக்ஷத்தைத் தவிர்த்து) வேறு **பலனை** நாடாமை/ தான் விரும்பும் பலனையடைய வேறு **தெய்வத்தை** நாடாமை.

ஸ்ரீ:

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம்

## தனியன்கள்

**ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவி தார்கிக கேஸரீ | வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ||**

**ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம் | ஸ்ரீமத் வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்த தேசிகம் ||**

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் – ஓரொன்று
தானே அமையாதோ **தாரணி**யில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

விகாஹே நிகமாந்தார்ய விஷ்ணுபாத ஸமுத்பவாம் |
ரஹஸ்யத்ரய ஸாராக்யாம் த்ரிஸ்ரோதஸம் அகல்மஷாம் ||
அவிஜ்ஞாதம் விஜாநதாம் விஜ்ஞாதம் அவிஜாநதாம் |
ரஹஸ்யத்ரய ஸாராக்யம் பரம் ப்ரஹ்மாஸ்து மே ஹ்ருதி ||



www.srihayagrivan.org www.sadagopan.org

ஸ்ரீ:

***நமோ ராமாநுஜார்யாய ஸௌம்யமூர்த்தி ஸுஸூநவே |***
***விசித்ர சித்ரஸாரோயம் யஸ்யாநுக்ரஹ வாரிஜா ||***

## அவதாரிகை

***வேதே ஸஞ்ஜாதகேதே முநிஜநவசனே ப்ராப்த நித்யாவமானே***
***ஸங்கீர்ணே ஸர்வவர்ணே ஸதிததநுகுணே நிஷ்ப்ரமாணே புராணே |***
***மாயாவாதே ஸமோதே கலிகலுஷவசாத் சூன்யவாதே விவாதே***
***தர்ம த்ராணாய யோபூத் ஸ ஜயதி பகவான் விஷ்ணு கண்டாவதார : ||***

ஆசார்ய ஸார்வபௌமனான ஸ்வாமி தேசிகன் காலத்தில், கலியின் ப்ரபாவத்தினால் வேதம் மிகவும் துக்கம் அடைந்திருந்தது. ரிஷிகளின் வசநங்கள் மதிக்கப்படவில்லை. வர்ணங்கள் சுருக்கமடைந்திருந்தன. புராணங்கள் ப்ரமாணங்களாக ஒப்புக்கொள்ளப்படவில்லை. மாயாவாதம், சூந்யவாதம் இவைகள் தலை தூக்கியிருந்தன. இந்த நிலையில் ச்ரிய:பதியான எம்பெருமான் தர்மத்தைக் காப்பாற்றவும், நிலை நாட்டவும் கருதி, **தானே தூப்புல் வள்ளலாய் அவதரித்து**, ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் என்னும் இந்த மஹாப்ரபந்தத்தை அருளிச்செய்தான்.

### மஹாப்ரபந்தத்தின் அவதாரம் :

ஸ்ரீ எம்பெருமானார் காலம் வரையில் ரஹஸ்யார்த்தங்கள் காலக்ஷேப ரூபமாகத்தான் உபதேசிக்கப்பட்டு வந்தன. பின்னர், மற்ற மதத்தினரும், ஸ்ரீராமாநுஜ ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஒருசில பிரிவினரும், எம்பெருமானார் திருவுள்ளத்துக்கு ஒவ்வாததாகவும் – விருத்தமாகவும் வ்யாக்யானங்களை க்ரந்தமாகச் செய்தபடியால், அவற்றை செப்பனிட/கண்டிக்கவேண்டி ஸ்வாமி தேசிகன், இந்த க்ரந்தத்தை அருளினார். இது, எல்லோரும் அனுபவிக்கும்படியான எளிய மணிப்ரவாள நடையில் அஷ்டாக்ஷர-த்வய-சரம ச்லோகமென்னும் மூன்று மந்த்ரங்களின் ஸாரத்தை விவரிப்பதாக அமைந்துள்ளது.

### க்ரந்தத்தின் ஏற்றம் :

வேதாந்த ஸாரதமங்களான ரஹஸ்யங்களின் அர்த்தம் விவரிக்கப்படுவதாலும், ஸ்ம்ருதி-இதிஹாஸ-புராணாதிகள் ப்ரமாணங்களாக உதாஹரிக்கப்படுவதாலும், இந்த க்ரந்தத்துக்கு வேதம் போன்ற எல்லா சாஸ்த்ரங்களோடு சேர்த்தியுண்டு. மேலும். அங்கங்களோடுகூடிய பக்தியோகத்தை ப்ரதானமாகச் சொல்கிற ஸூத்ர பாஷ்யங்

களைக் காட்டிலும், எளிதான ப்ரபத்தியின் ஸ்வரூபாதிகளைச் சொல்லுவதால், இந்த க்ரந்தம் எல்லோராலும் கைக்கொள்ளத்தக்கது. இத்தோடு, ஒவ்வொரு ஸ்ரீ வைஷ்ணவனும் அவச்யம் காலக்ஷேபம் பண்ணவேண்டிய க்ரந்த சதுஷ்டயத்தில் முக்யமானதுமாகும்.

**வ்யாக்யானங்கள் :**

ப்ராசீனமான ஐந்து வ்யாக்யானங்கள் இதற்கு உண்டு. பிறகு, ஸ்ரீமத் கரூர் ஸ்வாமி, ஸ்ரீமத் சேட்லூர் ஸ்வாமி, ஸ்ரீமத் இஞ்சிமேட்டு அழகியசிங்கர், ஸ்ரீமத் உத்தமூர் ஸ்வாமி முதலானோர் வ்யாக்யானமும் இன்னும், எளிய தமிழில் ஸ்ரீமத் வில்லிவலம் அழகியசிங்கர், ஸ்ரீமத் நவநீதம் ஸ்ரீராம தேசிகாசார்யர் போன்ற ஆசார்யர்கள் அருளிய விவரணங்களும் உண்டு.

**க்ரந்தத்தின் அமைப்பு :**

இதன் 32 அதிகாரங்கள் அடங்கிய 4 பாகங்களும் அவைகளின் பொருளடக்கமும் :

| பாகம் | அதிகாரங்கள் | பொருளடக்கம் |
|---|---|---|
| அர்த்தாநுசாஸநம் | 22 | தத்வ-ஹித-புருஷார்த்த / சித்-அசித்-ஈச்வர விவரணம் |
| ஸ்திரீகரணம் | 4 | சங்கா-பரிஹாரமும், விவரத்தை நிலைநாட்டலும் |
| பதவாக்ய யோஜனை | 3 | மூன்று ரஹஸ்யங்களின் விளக்கம் |
| ஸம்ப்ரதாய ப்ரக்ரியா | 3 | ஆசார்ய-சிஷ்யனின் கடமைகளும் க்ரந்தத்தைத் தலைக்கட்டலும் |

மேலும், ஒவ்வொரு அதிகாரமும் – முதலில் ச்லோகரூபமாக கீழே சொன்ன விஷயம், மேலே சொல்லப்போகும் விஷயம், பிறகு அந்தந்த அதிகாரத்தின் விஷயம், அதற்கு ப்ரமாணங்களாக ஸ்ம்ருதி-இதிஹாஸ- ஸம்ஸ்க்ருத திவ்யஸூக்திகள், ஆழ்வாராதிகளின் அருளிச்செயல்கள், சுருக்கமாக ஒரு தமிழ்ப்பாட்டு, கடைசியில் சுருக்கமாக ச்லோகம் என்கிற – க்ரமத்திலேயே அமைந்துள்ளது.



ஸ்ரீமத் பரகால மட ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவர் மற்றும் டோலை கிருஷ்ணன்



ஸ்வாமி நிகமாந்த தேசிகன் - திருவஹீந்திரபுரம்

ஸ்ரீ:

# ஸ்ரீ குருபரம்பராஸாரம்

"நன்றும் தீதும் நமக்கு உரைப்பாரை" நாடிப்பெறுதல்

***குருப்ய: தத்குருப்யச்ச நமோ வாகமதீமஹே | வ்ருணீமஹே ச தத்ராத்யௌ தம்பதீ ஜகதாம் பதீ***

*நன்றும்/ தீதும் உரைப்பார் யார் ?* — எம்பெருமானும்/ அவன்தன் அவதாரமே யான, நம் ஸம்ப்ரதாய ஆசார்யர்களும்.

*ஏன் நாடவேண்டும் ?* — ஏனெனில், ஆசார்யன் உபதேசித்த வித்யைதான், நிலைக்கும்.

*நாடிப்பெற, ப்ரமாணம் என்ன?*

1. விதியுள்ளது; ஆக **நித்ய**மாகிறது
2. ப்ராயச்சித்தம்; ஆக **நைமித்திக**மாகிறது
3. ஜ்ஞான ஸாதனம்; ஆக **காம்ய**மாகிறது

*எவர்க்குத் தேவை?* — பாபியான க்ஷத்ரபந்துவாகிலும் / புண்ணியனான புண்டரீகனே ஆகிலும்;

*எதற்குத் தேவை?* — மோக்ஷோபாயமறிய; செய்து எல்லையில்லா ப்ரஹ்மாநந்தம் அநுபவிக்க;

*பெற்று, இனிச் செய்வது*

1. ஆசார்யர்களைப் போற்றுவது
2. உபதேசித்த மந்த்ரங்களை மறைத்துக் காப்பது.

*எம்பெருமான் பரமாசார்யனாவது எப்படி ?*

-ஹம்ஸ/ மத்ஸ்ய/ ஹயக்ரீவ/ நாராயண/ கீதாசார்யனாக அவதரித்து

-வ்யாஸாதிகள், ஆழ்வார்களை அநுப்ரவேசித்து

-ஸநகாதி (ஜீவர்)களை நியமித்து

-ஸநக, ஆழ்வாராதிகளுக்கு அருளால் உபதேசித்து

வேதாந்த ஸம்ப்ரதாயம் தொடர்ந்து வரும்படிக்கு எம்பெருமான் செய்யும் உபகாரங்கள்

1. தானே ப்ரஹ்மாவுக்கு வேதங்களை உபதேசித்தல்
2. ப்ரஹ்மாவிடமிருந்து மதுகைடபர்களால் அபஹரிக்கப்பட்ட வேதங்களை மீட்டல்
3. ப்ரஹ்மா மூலம் *சாஸ்த்ர* ப்ரவசனம் செய்வித்தல்

4. ஸநத்குமாரர்களுக்கு ஜ்ஞானம் கொடுத்து, அவர்கள் மூலம் சாஸ்த்ர ப்ரவசனம் செய்வித்தல்
5. நாரதர்-பராசரர்-சுகர்-சௌநகர் மூலம் சாஸ்த்ர ப்ரவசனம் தொடரச்செய்தல்
6. வ்யாஸரை அநுப்ரவேசித்து, ப்ரஹ்ம ஸூத்ரம்/ மஹாபாரதம் அருளச்செய்வித்தல்
7. தானே ஹம்ஸ, மத்ஸ்ய, ஹயக்ரீவ, நாராயண, கீதாசார்யனாக அவதரித்து உபதேசித்தல்
8. அறிவில் சிறந்த பீஷ்மர் முதலோரையிட்டு சாஸ்த்ரங்களை மூதலிப்பித்தல்
9. தானே அருளிய ஸ்ரீ பாஞ்சராத்ரத்தை, ஸங்கர்ஷணனாக த்வாபரத்தில் வெளியிடுதல்
10. பராங்குச-பரகாலாதி அபிநவ தசாவதாரம் செய்து தமிழ்மறை அருளச்செய்வித்தல்
11. பாஷண்டிகளிடமிருந்து ஸம்ப்ரதாயத்தைக் காக்க அவ்வப்போது ஆசார்யர்களாக அவதரித்துக்கொண்டேயிருத்தல் . . . . . . . . . .

## விசேஷ விஷயங்கள்

1.குருபக்தி உடையவர்க்கே ஜ்ஞானம் உண்டாகும். ஆசார்யன் எல்லோர்க்கும் ஒன்றுபோல் உபதேசிக்கும் போதிலும் சிஷ்யர்களுக்குள் ஜ்ஞானத்தில் தாரதம்யம் இருப்பதற்கு, குருபக்தியில் ஏற்றத்தாழ்வே காரணம்.

2. வருவது விசாரியாதே சிஷ்யனுக்கு உபதேசித்தால், ஆசார்யனின் நிஷ்டை குலையும்.

3.குரு என்றால் பரம குருக்களையும்/ ஸாமான்யமான குருக்களையும் குறிக்கும்

4.மந்த்ரம் என்றால் மந்த்ரார்த்தங்களான ரஹஸ்யங்களையும் குறிக்கும்.

5.மந்த்ர/ மந்த்ரார்த்தங்களை, உபதேசிக்கும்போதும்/ உபதேசம் பெறும்போதும், எம்பெருமான் தொடங்கி தம் ஆசார்யர்வரை "இறங்கு முகமாகவும்"; மந்த்ரார்த்தங்களை விமர்சிக்கும்போது, ஆசார்யர் தொடங்கி எம்பெருமான் வரையில் "ஏறு முகமாகவும்", குரு பரம்பரா-பஜனம் செய்வது வழக்கம்.

## நம் வேதாந்த ஸம்ப்ரதாய குருபரம்பரை

எம்பெருமான்

பெரிய பிராட்டி

ஸேனை முதலியார்

நம்மாழ்வார் (மதுரகவிகள் முதலாக உண்டான ஸம்ப்ரதாய பரம்பரையாலும்; திருவாய்மொழி முகத்தாலும்; யோக தசையிலே ஸாக்ஷாத்க்ருதராயும்)

[ ஆசார்யர்கள் → அவரை ஆச்ரயித்தவர்கள் → ஆசார்யர் அருளிய க்ரந்தங்கள்]

| | | |
|---|---|---|
| ஸ்ரீமந்நாதமுனிகள் ⇩ ⇨ | உய்யக்கொண்டார் முதல் எண்மர் | 1.ந்யாய தத்வம் 2.யோக ரஹஸ்யம் |
| உய்யக்கொண்டார் ⇩ ⇨ | மணக்கால் நம்பி முதலான ஐவர் | |
| மணக்கால் நம்பி ⇩ ⇨ | ஆளவந்தார் முதலான ஐவர் | |
| ஆளவந்தார் ⇨ ⇩ | பெரியநம்பி முதலான பதினைவர் | 1. ஆகம ப்ராமாண்யம் 2. புருஷ நிர்ணயம் 3. ஆத்ம ஸித்தி 4. ஈச்வர ஸித்தி 5. ஸம்வித் ஸித்தி 6. கீதார்த்த ஸங்க்ரஹம் 7. ஸ்தோத்ரம் 8. சதுச்ச்லோகீ |
| பெரியநம்பி ⇨ ⇩ | எம்பெருமானார் முதலான அறுவர் | |
| எம்பெருமானார் ⇨ ⇩ | ஆச்ரயித்த முதலிகள் அநேகம் | 1.ஸ்ரீ பாஷ்யம் 2. வேதாந்த தீபம் 3. வேதாந்த ஸாரம் 4. வேதார்த்த ஸங்க்ரஹம் 5. கீதா பாஷ்யம் 6. சரணாகதி கத்யம் 7. ஸ்ரீரங்க கத்யம் 8. வைகுண்ட கத்யம் 9. நித்யம் |

திருமடைப்பள்ளி ஆச்சான்

கிடாம்பி ராமானுஜப்பிள்ளான்

கிடாம்பி ரங்கராஜாசார்யர்

அப்புள்ளார்

ஸ்வாமி தேசிகன்

[அருளிய க்ரந்தங்கள் 117 ]



ஆசார்ய தேவோ பவ

**(இடமிருந்து வலமாக:** ப்ரக்ருதம் ஸ்ரீமத் பரவாக்கோட்டை ஆண்டவன் ஸ்வாமி (ஸ்ரீமத் பௌண்டரீகபுரம் ஆண்டவன் ஆச்ரமம்), ப்ரக்ருதம் ஸ்ரீமத் ஸ்ரீரங்கப்ரிய மஹாதேசிகன் ஸ்வாமி (ஸ்ரீமதஷ்டாங்க விக்யான மந்திரம்), ப்ரக்ருதம் ஸ்ரீமதழகிய சிங்கர் ஸ்வாமி (ஸ்ரீமதேஹாபில மடம்), ப்ரக்ருதம் ஸ்ரீமத் அபிநவ ரங்கநாத ப்ரஹ்மதந்த்ர ஸ்வாமி (ஸ்ரீமத் பரகால மடம்), ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவன் ஸ்வாமி (ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமம் (பெரியாச்ரமம்), ஸ்ரீரங்கம்))

## *1.* உபோத்காதாதிகாரம்

*க்ரந்தத்தின் தலைவாசல் திறப்பு*

**ஆபகவத்த: ப்ரதிதாம் அநகாம் ஆசார்ய ஸந்ததிம் வந்தே |**
**மநஸி மம யத்ப்ரஸாதாத் வஸதி ரஹஸ்யத்ரயஸ்ய ஸாரோயம் ||**



பரமபத வாசல்

*__நாம்__ ஏன் ரஹஸ்யத்ரயத்தை அப்யஸிக்க வேண்டும் ?*

-"*நாம்*" எனக்குறிக்கப்படும் ஜீவாத்மா, *சரீர*த்தைவிட வேறுபட்டவன்; பரமாத்மாவுக்கு, கௌஸ்துப ரத்நம்போல் மிகவும் இனியவன்/ குமாரன் / *சிஷ்ய*ன் / ப்ரேஷ்யன் / *சேஷபூத*ன் / தாஸபூதன்;

-ஸ்வரூபத்தால், எம்பெருமானுக்கும்-பிராட்டிக்கும் எல்லா இடங்களிலும்/ காலங்களிலும்/ நிலைகளுக்கு ஏற்றவாறும் கைங்கர்யங்களை, நித்யஸூரிகள்போல் தானும் செய்ய இட்டுப்பிறந்துவைத்தவன்; ஆனால் ஸ்திதியில், அநாதி மாயையாலே ப்ரக்ருதி ஸம்பந்தத்தை அடைந்து, இப்போது தத்வ-ஹித விஷயங்களில் அறிவு இழந்த நிலையில் நிற்கிறான்.

*நாம் __ஏன்__ ரஹஸ்யத்ரயத்தை அப்யஸிக்க வேண்டும் ?*

இப்படி அறிவிழந்து நிற்பதை உணர்ந்து, அந்நிலை மாறி ஸ்வரூபஞானம் பெற;

*நாம் ஏன் __ரஹஸ்யத்ரயத்தை__ அப்யஸிக்க வேண்டும் ?*

இந்த ரஹஸ்யங்களில், எம்பெருமானைப்பற்றியும்/ நம்மைப்பற்றியும்/ எம்பெருமானுக்கும்-நமக்கும் உள்ள உறவைப்பற்றியும் அவ*ச்ய*ம் அறிந்துகொள்ளவேண்டிய :

1. எம்பெருமான்-அவனைச் சேர்ந்தவைகள், இவற்றின் தன்மை/ நிலைமை / உறவு;
2. ஸுக-துக்க அனுபவம் / மோக்ஷாநுபவம்;
3. மோக்ஷாநுபவம் பெற வழிகளும் / அவற்றின் முறைகளும்;
4. மோக்ஷாநுபவத்தைப் பெறவிடாமல் தடுக்கும் விரோதிகள்;

ஆகிய **அர்த்த பஞ்சகங்**களும் சொல்லப்படுவதால்.

*நாம் ஏன் ரஹஸ்யத்ரயத்தை **அப்யஸிக்க** வேண்டும் ?*

-அப்யஸிப்பது என்பது, ஸத்ஸம்ப்ரதாய ரஹஸ்யார்த்தங்களை ஆசார்யன் மூலம் உபதேசிக்கப் பெறுகை; இப்படிப் பெற்ற வித்யைதான் பயனுள்ளதாக ஆகும்.

-ஆசார்யர்கள்தான், (கன்றுக்குப்பாலூட்டும் பசுபோல்) நமக்கு மிகுதி-குறைவற / தெரியாமை-ஐயம்-திரிபு இன்றி. அப்யாஸம் செய்விப்பார்கள்.

## விசேஷ விஷயங்கள் :

1.ஆசார்ய-அநுக்ரஹத்தினால்தான், நம் மனதில் 'ரஹஸ்யத்ரயத்தின் ஸாரம்' நன்கு நிலைத்து நிற்கும்;

2.இப்படி ஆசார்யனைப் பெறுவதற்குக் காரணம் : எம்பெருமானின் நல்லெண்ணம் → தற்செயலாக நேரும் புண்ணியம் → எம்பெருமானின் கடாக்ஷம் → எம்பெருமானிடம் த்வேஷம் இல்லாமை → அவனைப் பற்றிய விஷயங்களையே விரும்புவது → நல்லோருடன் நெருங்கிப் பழகுதல் ஆகியவையாம். தற்செயலாக நேரும் புண்ணியம் : அஜ்ஞாதம், யாத்ருச்சிகம், ஆநுஷங்கிகம், ப்ராஸங்கிகம், ஸாமாந்ய புத்திமூலம் என ஐவகையாகும்.

3.ஆசார்யர்கள், ஸ்ரீமந்நாராயணனுடன் நமக்கு உண்டான குடல் துவக்கைத் தெளிவித்து, அவனை அடையும் உபாயங்களிலே நம்மை மூட்டுகிறார்கள்.





## 2. ஸார நிஷ்கர்ஷாதிகாரம்

### *“பலகற்ற மெய்யடியார்”*

ஒன்றை அறிவதற்கு ஸாதனமான மூன்றில், முதல் இரண்டான ப்ரத்யக்ஷ-அநுமானங்களால், நாம் பெறவிரும்பும் பரமபதம் / அதை அடையும் வழிகள், இவைகளை அறியமுடியாது. ஆதலால், 'ஒருவராலும் செய்யப்படாதது' எனும் பெருமையுடைய, சப்தமான **வேத-சாஸ்த்ரமே** அறிவதற்கு உறுதுணை. ஆனால் வேதமோ, கரை காணமுடியாக் கடல் ; நாமோ, அளவுபட்ட சக்தி/ஆயுளை உடை யவர்; மற்றும், அறிவதற்கு இடையூறுகளோ ஏராளம்; ஆக, இந்நிலையில், வேதத்தில் **மிகவும் ஸாரதம**மானவற்றை நாடிப்பெறுவதே, முமுக்ஷு வான நமக்கேற்ற செயலாகும்.

**சாஸ்த்ரத்தில் ஸாரதமத்தை வடிகட்டும் வகை**




3. ப்ரதாந ப்ரதிதந்த்ராதிகாரம்
ஸ்ரீ பாஷ்யகார வைதிக ஸம்ப்ரதாயத்தின்
முக்கிய அடிப்படைக் கொள்கைகள்
(லக்ஷணங்களுக்கு viii பக்கம் பார்க்க)
மந்த்ரங்கள்
அறிவிக்கும்
-நாராயண
(தத்புருஷம்)
-த்வய முழுதும்
-அஹம்/மாம்
நாராயண
பதம்
(பஹுவ்ரீஹி
ஸமாஸத்தால்
-'அ'வின்மேல்
லுப்த சதுர்த்தி
-'ஆய' விகுதி
-'ஏக' பதம்
-ப்ரணவம்/
நம: பதம்
-'சரண' பதம்
-'மாம் ஏகம்'
மந்த்ரங்கள் அறிவி
க்கும் அர்த்தங்கள்
ஜீவன் பகவானைத் தவிர ஆதாரமேது மில்லாதவன்
ஜீவன் பகவானைத் தவிர வேறு எவராலும் இயக்கப் படாதவன்
ஜீவன் பகவானு-க்கே ப்ரயோ-ஜனமாக இயங்கு பவன்
ஜீவன் பகவானைத் தவிர உபாய மேதும் இல்லாதவன்
எம்பெருமான் ஆத்மாவாக ஆவதெப்படி
த்ரவ்யங்களுக்கு ஸ்வரூப த்தால் ஆதாரமாகி; குணங்க ளுக்கு த்ரவ்ய-வழியாய்
நித்ய/ அநித்ய வஸ்துக்களை, தன் நித்ய/ அநித்ய ஸங்கல்ப-த்தால் நியமித்து
வஸ்துக்களை தன் ப்ரயோ-ஜனத்துக்காக ஏற்று மேன்மை பெறும் சேஷியாகி
ப்ரதாநப்ரதிதந்த்ரம்
எல்லாப் பெயரும் எம்பெருமானையே குறிப்பது
எம்பெருமானுக்கு கைங்கர்யம் செய்வதே புருஷார்த்தம்
பிராட்டியும் எம்பெருமானும் சேர்ந்தே சேஷிகள்/ உபாயம்
பக்தி/ ப்ரபத்திக்கு அல்லது மோக்ஷம் கிட்டாது
எம்பெருமானுக்கும் ⇔ சேதநாசேதநங்களுக்கும் இடையுள்ள
ஆத்மா ⇔ சரீரம் என்ற ஒழிக்கவொழியா உறவு

## விசேஷ விஷயங்கள்

1.எம்பெருமானின் **இச்சை**, வஸ்துக்களை அவருடைய **ஸ்வரூப**த்தை ஆச்ரயித்தே இருக்கச் செய்கிறது.

2. பகவானின் ஆதாரத்வ/ *சேஷித்வ*/ நியந்த்ருத்வத்தால், சேதநனுக்கு **'அவனைப் பிரியாத தன்மை/ புருஷார்த்தத்தில் ஆசை/ உபாய-விசேஷ அறிவு'** இவை முறையே ***பலி***க்கின்றன.

3. சேதநாசேதநங்கள் இரண்டிற்கும் பொதுவானது - எம்பெருமானின் **நிருபாதிக-*சேஷி*த்வ**மும், அவனுக்கு **நிருபாதிக-*சேஷ*மா**யிருப்பது என்பதும். அவற்றுள் சேதநர் விஷயத்திலோ, புருஷார்த்தம் தருவதால் பகவான் **ஸ்வாமி**யாகிறார்; கைங்கர்யரூப புருஷார்த்தம் பெறுவதால், **சேதநன் தாஸ**னாகிறான்.

4. இயற்கையாகவே - தன்னைக் காத்துக்கொள்ள தகுதியும்/ *சக்தி*யும் இல்லாதவர்கள் சேதநர்; எம்பெருமானோ சேதநனைக் காப்பதற்கு, கடமையும் / *சக்தி*யும் படைத்தவன்; அப்படிக் காக்கும்போது கர்ம *வச்ய*ரை **'ஒரு உபாயத்திலே மூட்டியே ரக்ஷிப்பது'** என்பது, எம்பெருமானது தீர்ந்த ஸங்கல்பம்.

5.ஸித்தோபாயமான பகவானை *வசீ*கரிக்க விதிப்பது **சரம *ச்*லோகம்**. ஸாத்யோபாய மான ப்ரபத்யநுஷ்டாநத்தை விளக்குவது **த்வயம்**. அநுஷ்டிக்கும்போது அநுஸந்திக்க வேண்டிய பெரிய அர்த்தங்களை (சிறிய கண்ணாடி பெரிய உருக்களைக் காட்டுவது போல்) சுருங்கத் தெரிவிப்பது **திருமந்த்ரம்**.

6. திருமந்த்ரம் (=ப்ரணவம்+நம:+நாராயண+ஆய) நினைவில் நிற்க, அப்புள்ளார் அருளிச்செய்த விரகு :

i) ப்ரணவம் [ அ+ஆய+உ+ம = **ஓம்** =
**அ** = **எம்பெருமான்**
**அ+ஆய** = எம்பெருமானுக்கு
**அ+ஆய+உ** = எம்பெருமானுக்கே
**அ+ஆய+உ+ம** = எம்பெருமானுக்கே **ஜீவன் (*சேஷ*ன்)]**

i) "**அர்ஜுனரதம்**" காண்க ("அர்ஜுனரத"த்தில் முன்னால் எம்பெருமான்; பின்னால் ஜீவனான அர்ஜுனன் அமர்ந்திருப்பதுபோல், ப்ரணவத்தில் முன்னால் 'அ'காரம்; பின்னால் 'ம'காரம் )

[அன்றியும், "உ" = பிராட்டி என்றால் :
**அ+ஆய+உ+ம** = எம்பெருமானுக்கும் + **பிராட்டிக்குமே ஜீவன் (*சேஷ*ன்)]**

= "**ஸீதா/ லக்ஷ்மணனுடன் ஸ்ரீராமன் காட்டில் ஸஞ்சரித்தது**" காண்க. (முன்னால் ஸ்ரீராமன்; அடுத்து ஸீதா; பிறகு ஜீவனான லக்ஷ்மணன்)

ii) நம: = எனக்கு ஸ்வாதந்த்ர்யம் இல்லை; சேஷித்வமும் இல்லை.

= "பரத-சத்ருக்னனின் அடிமைப்பணி" காண்க பரதன் ஸ்ரீராமபாதுகைக்குக் கைங்கர்யம் செய்தமை; தொண்டன் பரதனுக்கே, சத்ருக்னன் தொண்டு செய்தமை)

iii) நாராயண = ஆதாரத்வம்/ வ்யாபகத்வம் கொண்ட எம்பெருமான்

i) "தன்னுடைச்சோதிக்கு ஸ்ரீராமனைத் தொடர்ந்த சராசரங்கள்" காண்க. (ஆதாரமான எம்பெருமான் இல்லையேல், ஆதேயமான சராசரங்கள் நிலைக்கமாட்டாமை; [நான் உன்னையன்றியிலேன்])


ii) சராசரங்களை தன்னுடைச்சோதிக்கு உடன் அழைத்துச் சென்ற ஸ்ரீராமன்" காண்க (எங்கும் பரக்கும் எம்பெருமான், வ்யாபகத்வம் வீணாகாமல் இருக்க, சராசரங்களை இட்டுச்சென்றார்; [நீ என்னையன்றி இலை – மழிசைப்பிரான் ])

iv) ஆய = கைங்கர்ய-ரூபமான புருஷார்த்தம்

"சேஷியுகந்த கைங்கர்யம் செய்த இளைய/ திருவடிநிலை ஆழ்வார்" காண்க (சொன்னவண்ணம் கானகத்திற்கு தொடர்ந்த லக்ஷ்மணன் 'ப்ரவ்ருத்தி'யாகவும்; சொன்னவண்ணம் நாடு திரும்பிய மரவடிகள் 'நிவ்ருத்தி'யாகவும் கைங்கர்யம் செய்தமை)




சொன்னவண்ணம் நாடு திரும்பிய மரவடிகள்
(கும்பகோணம் ஸ்ரீராமர் கோவில் சுவர்ச் சித்திரங்கள்)




| அர்த்த பஞ்சகம் | ஸ்வரூபம் / குணம் | மந்த்ரங்களில் பொதிந்து கிடக்கும் இடங்கள் |
|---|---|---|
| அடையப் படும் ப்ரஹ்மம் | -பெரியபிராட்டியோடு ஸதா கூடியிருத்தல்<br>-ஸத்ய-ஜ்ஞான-அனந்த-ஆனந்த-அமலம்<br>-கெட்ட குணங்கள் இல்லாமலிருத்தல்<br>-விபுவாக இருத்தல்<br>-ப்ராப்ய/ ப்ராபக உபயுக்த குணமுடைமை<br>-திவ்ய மங்கள உருவமுடைமை<br>-போக-லீலா விபூதிகளை உடைமை<br>-லீலையாக உலகை நடத்துதல் | -ப்ரணவம்/ நாராயண பதம்; (அஷ்டாக்ஷரம்)<br>-ஸ்ரீமந்நாராயண பதங்கள்; (த்வயம்)<br>-மாம்/ அஹம் பதங்கள் (சரம ச்லோகம்) |
| அடையும் ஜீவன் | - அணு-ஜ்ஞான-ஆனந்த-அமலமயம் ஆதல்<br>-பெருமானுக்கே அடிமையாகவேயாதல்<br>-பெருமானால் தூண்டப்பட்டே இயங்குதல் | -ப்ரணவ/நமஸ் ஸுக்களில் மகாரம் / நார பதங்கள்; (அஷ்டாக்ஷரம் / த்வயம்)<br>-ப்ரபத்யே/ வ்ரஜ/ த்வா/ மாசுச: பதம் (சரம ச்லோகம்) |
| அடைவதற்கு | -ஸ்வரூப-ரூபாதிகளுடன்கூடிய பகவானை ப்ரீதியோடு இடையற த்யாநித்தல் | -நம: / அயன பதங்கள்; (அஷ்டாக்ஷரம்) |

| அர்த்த பஞ்சகம் | ஸ்வரூபம் / குணம் | மந்த்ரங்களில் பொதிந்து கிடக்கும் இடங்கள் |
|---|---|---|
| உபாயம் | -அங்கங்களோடு கூடியதாக, தன்னையும் / தன்னைக்காக்கும் பொறுப்பையும் / பலனையும் பகவானிடம் ஸமர்ப்பித்தல் | -*த்வயத்தின் முற்பகுதி;*<br>-*சரம ச்லோகத்தின் முற்பாதி* |
| அடைவதால் பலன் | -பெருமானின் ப்ரீதிக்காகவே, அவனுக்கே எல்லையில்லா அடிமைப்பணி செய்து கிடத்தல் | -4-*ம்வேற்றுமைஉருபுகள்;* (அஷ்டாக்ஷரம்/த்வயம்)<br>-த்வயத்தில் *நம:* பதம்;<br>-*ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி* எனும் வாக்யம் (சரம ச்லோகம்) |
| அடைய விடாமல் **தடை செய்யும் விரோதிகளும்** | -அவித்யா-கர்ம-வாஸனா-ருசி-ப்ரக்ருதி ஸம்பந்தம் காரணமாக, நாம் "பெருமானின் கட்டளையை மீறியதால்" பிறந்தவனின் **நிக்ரஹ ஸங்கல்பம்.** [இதற்குக் காரணமான கெட்டவை/மோக்ஷத்துக்கான நல்லவை **'ஆர் பக்கலிலே கிடக்குமென்று தெரியாது'.**] | -மந்த்ரங்களில், விதிக்கிற அர்த்தங்களுடைய **பிரித்து அறிவிக்கும், திறனிலும் [** சேதநனின் வைலக்ஷண்யமான, அநந்ய *சேஷத்வ*த்தை 'தாதர்த்ய'த்தால் சொல்லும் / ப்ரணவ லுப்த சதுர்த்தி, ஜ்ஞாநத்வாதிகளை மந – ஜ்ஞானே என்பதால் அறிவிக்கும் மகாரம் / நிர்விகாரத்வத்தை ரீங் –க்ஷயே என்பதால் அறிவிக்கும் நர *சப்த*ம் ஆகியவற்றின் வ்யவச்சேத சக்தி ]<br>-மகாரங்களில், அதன் 6-ம் வேற்றுமையான **மம** என்பதிலும்;<br>**-ஸர்வ பாப பதத்திலும்** (சரமச்லோகம்) |
| +<br>**அவற்றின் செயல்களும்**<br>*[32 அடி அகலமுள்ள ஸம்ஸாரமாம் கிணற்றை தாண்டுவார் முன்னடியில் விழுந்த தோடு முப்பதாம் / * முப்பத்து ஓராம் அடியிலே* | இது பத்தனுக்கு :<br>- **அறிவின் குறையை** உண்டாக்கும்; **ப்ரக்ருதி**யோடு **ஸம்பந்தம்** உண்டாக்கும்<br>- புலன்களோடு சேர்த்து பரதந்த்ரனாக்கும்;<br>- *சாஸ்த்ர*த்தில் சேரா **'திரிபவை'**யாக்கும்;<br>-மனிதரானால், **பாஹ்ய-குத்ருஷ்டிகளால் கலக்குவிக்கும்;**<br>-அல்லது, அறிவின்மை / மாறான அறிவு இவற்றால் **உலகியல்பில் ஈடுபடுத்தும்;**<br>-இட்டதை செய்யாமல், கூடாதன செய்து, **பெருமான் கட்டளையை** மீறச்செய்யும்;<br>-இதனால் **கர்ப்ப-ஜன்ம-மூப்பு-மரண-நரகம் ஆகிய சக்ரத்தில் உழற்றும்;**<br>-அற்ப *பல*னுக்காக *'கட்டுண்டவர்'* காலில் விழப்பண்ணும்;<br>-அவரளிக்கும் **சிறுபயனில் மயக்குவிக்கும்;**<br>-தாழ்ந்த தேவதைகள் / அசேதந உபாஸநம் | |

| அர்த்த பஞ்சகம் | ஸ்வரூபம் / குணம் | மந்த்ரங்களில் பொதிந்து கிடக்கும் இடங்கள் |
|---|---|---|
| *விழுந்த தோடு ஒத்த* (ஸம்ஸாரத் தைக் கடக்க மாட்டாத) *செயல்]* | போன்றவையில் மூட்டி அற்ப பயன் மூலம் **யோகத்தைக் கலைக்கும்;**<br>**-ஆத்ம உபாஸகரை, அதிலேயே நிறுத்தும்;**<br>-ப்ரஹ்மத்தை ஆத்மாவாகக்கொண்ட தன் ஆத்மா/ தன் ஆத்மாவை *சரீர*மாகக் கொண்ட ப்ரஹ்மம் என உபாஸிப்பவரை **ஆத்மானுபவத்திலோ/ அஷ்டைச்வர்ய போகத்திலோ/ வஸு-பதம் முதலியவற் றிலோ/ தேஹ- இந்த்ரியங்களிலோ கால் தாழப்பண்ணும்** | |

## விசேஷ விஷயங்கள்

-மந்த்ரத்ரயத்தால் நாம் அறிவது : உயர்ந்தவனான ***எம்பெருமானுக்கு*** ஏற்றவனான ***நான்***, உரிமையாகக் கிடைக்கக்கூடிய பகவத்கைங்கர்யத்தை, ***அஹங்காரம்*** முதலியவைகளால் இழந்து நிற்கும் நிலையில். இனிச்செய்யவேண்டியது, *சேஷி*களான தம்பதிகளிடம் ***சரணாகதி*யே.**

(அர்த்த பஞ்சகத்திலுள்ள "எம்பெருமான் – நான் – அஹங்காரம்" என்ற மூன்றே, **தத்வ-த்ரய**மாகும்)

-'இப்படி நிற்கும் "பகவானின் நிக்ரஹ"மாகிற விரோதியை நீக்கும் பரிஹாரம், *'தஸ்ய ச வசீகரணம் தச்சரணாகதிரேவ'* (எம்பெருமானை அடையவழி, அவனை *சரண்* புகுவதே)' – என்கிறார் ஸ்ரீபாஷ்யகாரர்.




ஸ்ரீபாஷ்யகாரர் - திருக்கச்சி

## 5. தத்வத்ரய சிந்தநாதிகாரம்

### "அரு / உருவானவை" பற்றிய ஆய்வு

(லக்ஷணங்களுக்கு viii பக்கம் பார்க்க)




*-பகவானுக்கு, மற்ற தத்வங்களெல்லாம் எவ்வித அஸ்த்ர/ பூஷணங்கள் என்பது, குறிக்கப்பட்டிருக்கிறது

-ப்ரக்ருதி தத்வங்களுக்கு முன் குறித்த எண்கள் 'கவர்கம்' முதலான 25 எண்களைச் சொல்கின்றன.

மூன்று தத்வங்களின் பிரிவுகளும், ஸ்வரூப-ஸ்திதி-ப்ரவ்ருத்தி பேதங்களும் :

| தத்வம் | ஸ்வரூபம் | ஸ்திதி | ப்ரவ்ருத்தி |
|---|---|---|---|
| ஜீவன் | -அணு-ஜ்ஞான-ஆனந்த-அமலமயம்<br>-பெருமானுக்கே அடிமையாகவே இருத்தல்<br>-சேதந த்ரவ்யம்<br>-தன்னையறிதல் (ப்ரத்யக்த்வம்)<br>-நித்யத்வம் | அப்படியே நீடித்தல் | -பெருமானால் தூண்டப்பட்டே இயங்குவது<br>-அதன் பலனை அனுபவித்தல் |
| - பத்தன் | -அவித்யா-கர்ம-வாஸனா-ருசி- ப்ரக்ருதி ஸம்பந்தம் உடைமை | -கர்மத்துக்கேற்ப ஈச்வரன் கொடுத்த சரீரத்தை தன் ஸ்வரூப / தர்மபூத ஞானத்தால் தரித்தல்;<br>-மோக்ஷப்ராப்திவரை உலகில் உழல்வது | -புண்ய/ பாப/ வீண் செயல் செய்தல் |
| -முக்தன் | -ஈச்வர-நிக்ரஹத்தால் வந்த ஸம்ஸாரபந்தம், பக்தி/ப்ரபத்தியால்நீங்கி, ஸ்வரூபமடைதல் | -உண்டான நிஜஸ்வரூபத்துக்கு முடிவு இல்லாமை | -முழு ப்ரஹ்மாநுபவம்;<br>-விளையும் பகவத் கைங்கர்யம் |
| -நித்யன் | -ஒருபோதும் ஸம்ஸார பந்தமின்றி நிஜஸ்வரூபத்தோடு ஸதாஈச்வனுக்கு சேஷனாதல் | -எப்போதும் ஈச்வரனை அநுபவித்தல் | -வரையறுக்கப்பட்ட ப்ரவாஹ-நித்யமான பகவத் கைங்கர்யம் |
| தர்மபூத ஜ்ஞானம் | -பொருளைக்காட்டும் போது தான்சார்ந்திருக்கும் ஆத்மாவுக்கு, தானே தோன்றுதல்;<br>-மற்ற வஸ்துக்களைக் காட்டும் திறன்உடைமை (விஷயித்வம்);<br>-அசேதந த்ரவ்யம்;<br>-பிறர்க்கேதோன்றும்/ பிறர்க்காக இருக்கும் | -ஈச்வர/நித்யருக்கு நித்யவிபுவாயிருப்பது<br>-முக்தனுக்கு, முக்தி யடைந்தவுடன் விரிந்து பிறகு விபுவாகவே நீடித்தல்;<br>- பத்தனுக்கு,வினைக்கு ஏற்ப விரிந்து/ சுருங்கியிருத்தல் | -பொருளைகாட்டடல்;<br>-ப்ரயத்ந நிலையடைந்து உடல்/ புலனை ஏவுதல்;<br>-பொருளை அநு கூல/ ப்ரதிகூலமாக காட்டி, பத்தனை அநுபவிப்பித்தல்<br>-பத்தனுக்கு விரிந்து/ சுருங்கியிருத்தல் |

| தத்வம் | ஸ்வரூபம் | ஸ்திதி | ப்ரவ்ருத்தி |
|---|---|---|---|
| மூல ப்ரக்ருதி | -அசேதந த்ரவ்யம்;<br>-பிறர்க்கே தோன்றும்/ பிறர்க்காகவே இருக்கும்<br>-ஜடமாகயிருப்பது;<br>-ஸத்வ-தஜஸ்-தமஸ்ஸின் இருப்பிடமாவது;<br>-அழிவற்றது | -நித்ய விபூதி தவிர மற்ற இடங்களில் எல்லையற்று நிற்றல்;<br>-ப்ரக்ருதி முதலான 24 தத்வங்களாதல் ; | -ஸதா மாறுபடுதல்;<br>- பத்தரின் இன்ப/ துன்பங்களுக்கும், ஈச்வரனின் லீலா-ரஸத்துக்கும் காரணமாதல்; |
| காலம் | -அசேதந த்ரவ்யம்<br>-ஜடம்<br>-ஆதி/ அந்தம் அற்றது<br>-விபு | -நித்யமாக இருப்பது | -லீலாவிபூதியில் கலா போன்ற பிரிவால் ச்ருஷ்டி ஸ்திதி-ஸம்ஹார ஸாதநமாதல்; நித்யவிபூதியில் மாறுதலுக்கு காரணம் ஆகாது இருத்தல் |
| சுத்த ஸத்வம் | -அசேதந த்ரவ்யம்<br>-ஸ்வயம் ப்ரகாசமானது<br>-ரஜஸ்-தமஸ் கலவாத ஸத்வ குணத்துக்கே இருப்பிடம்<br>-அழிவற்றது | - நித்யவிபூதியில் எல்லையற்றிருத்தல்<br>-பரமபதத்தில் விமானாதிகளும், ஈச்வர/ நித்ய / முக்தர் திருமேனியுமாதல்;<br>-நித்யமாயிருத்தல் | - ஈச்வர/ நித்ய/முக்தர்கள் இச்சையால் மாறுதலடைந்து ஈச்வரனுக்கு போக ஸாதநமாய்; நித்ய/ முக்தருக்கு கைங்கர்ய ஸாதநமாய் இருத்தல் |
| ஈச்வரன் | -ஸத்ய/ஞான/அனந்த / ஆனந்த /அமல/லக்ஷ்மீ பதியாயிருத்தல்<br>-சுத்தஸத்வ திவ்யமங்கள விக்ரஹனாயிருத்தல்;<br>-எக்கால/ நிலையிலும் பிராட்டியைப் பிரியாமை<br>-ஜ்ஞாநாதி பரத்வ/ஸௌசீல்யாதி ஸௌலப்ய குணங்களோடிருப்பது;<br>-விபுவான சேதநனாயும்/ ஸ்வதந்த்ரனாகவும்/ ஸர்வ-சேஷியுமாதல் | -பர/வ்யூஹ/விபவ/ அர்ச்சா / ஹார்த்த ரூபங்களை உடைமை | -உலகைப் படைத்தல் / காத்தல்/ அழித்தல்;<br>-சேதநர்க்கு மோக்ஷம் தருதல் |

## விசேஷ விஷயங்கள்

1.கர்ம பலனை அநுபவிக்க ஒருவஸ்துவுக்கு, 'ஸ்வரூப/ ஸஹகாரி யோக்யதை' என இரண்டும் இருக்கவேணும். இந்த யோக்யதை, பத்தனைத்தவிர மற்றவர்க்கில்லை என்பதை இவ்வாறு அறியலாம் :

| யோக்யதை / தத்வம் | பரதந்த்ரனான ஸ்வரூபத் தகுதி | தவறு செய்யக் காரணமுடைமை (ஸஹகாரி) |
|---|---|---|
| ஈச்வரன் | சேதநனானாலும்,பரதந்த்ர***னில்லை***; ஸ்வதந்த்ரன் | தனக்கு மிக்கார் இல்லாமையால், அவரின் 'ஆணைமீறுதல்'இல்லை; அதனால் அபராதத்துக்கு வாய்ப்பு ***இல்லை*** |
| அசேதநம் | பரதந்த்ரமானாலும் சேதந***மில்லை***; | தனக்கு மிக்கார் உள்ளபோதிலும், அறிவில்லாமையால், அபராதத் துக்கு வாய்ப்பு ***இல்லை*** |
| நித்யர் | பரதந்த்ர-சேதநனாகையால் ஸ்வரூப யோக்யதை **உண்டு** | மிக்காரான ஈச்வரன் உண்டு; ஆனால், அவனுக்குப் பிடிக்கா ததை செய்வது ***இல்லை*** |
| முக்தர் | பரதந்த்ர-சேதநனாகையால் ஸ்வரூப யோக்யதை **உண்டு** | பத்த தசையில் யோக்யனானா லும் முக்ததசையில், விபரீத அநுஷ்டானம் ***இல்லை*** |
| **பத்தன்** | பரதந்த்ர-சேதநனாகையால் ஸ்வரூப யோக்யதை **உண்டு** | பத்த தசையில் விபரீத அநுஷ்டான வாய்ப்பு **உண்டு** |

2. வஸ்துக்களின் ஸ்வரூப-ஸ்திதி-ப்ரவ்ருத்திகள், **எம்பெருமானுக்கு வசப்பட்** டவை. அவை ஸ்வபாவத்தால் 'அநுகூலமாகவே' இருக்கும். ஆனால், கர்மங்களுக்கு ஈடாகப் பலன்கொடுக்கும் பகவானின் ஸங்கல்பத்தால், **பத்த**னுக்கு (வஸ்துக்களை தனக்கென்றுகொள்வதால்) **அல்ப அநுகூலமாயோ / ப்ரதிகூலமாயோ/ உதாஸீந மாயோ** இருக்கும். ஸ்வாமி சேஷமென்று கொண்டால் அநுகூலம்.

**பத்த**னுக்கு ஸ்வாத்மஸ்வரூபம் எப்போதும் அநுகூலமாகத்தோன்றுவது, ஈச்வர இச்சையினாலே. இதனால், ஸ்வாத்மஸ்வரூபத்தோடே ஸம்பந்தப்பட்ட ஹேயமான சரீரத்தையும் ஏகத்வப்ரமத்தினாலும் கர்மவச்யத்வத்தாலும் அநுகூலமாக **ப்ரமிக்கி** றான், **ஜ்ஞாந ஹீனன்.**

3.ஜீவன், ஈச்வரனுக்கு ***சேஷன்*** என்பதை, 'அ'காரத்தின்மேல் அழிந்துகிடக்கும் "நான்காம் வேற்றுமை உருபினாலும்; **பகவானுக்கே *சேஷன்*** என்பதை 'உ'காரத்தா லும், அறியலாம். பகவானுக்கு என்று சொன்னதில், பாகவதர்களும் அடக்கம்.

4. ஈச்வர கைங்கர்யம், நித்யருக்கு வரையறுக்கப்பட்டவை; முக்தருக்கு அவ்வப் போது பகவான் ஆஜ்ஞாபிப்பவை. இருந்தபோதிலும், இருவருக்குள் **கைங்கர்ய-*பல*னில் வாசியில்லை.**

5. ஜ்ஞானம், 'தர்மி/ தர்ம'மென இருவகைப்படும். இரண்டிற்கும் ஸாமாந்ய லக்ஷணம், ஜ்ஞான த்வமும் ஸ்வயம்ப்ரகாசத்வமும்; தர்மியான ஆத்ம ஸ்வரூபத்துக்கு ப்ரத்யக்த்வம் (தன் ப்ரகாசத்துக்குத் **தானே *பலி***யாயிருக்கை) விசேஷம்; தர்மபூத ஜ்ஞாநத்துக்கு **விஷயித்வம்** (தன் ப்ரகாசத்துக்குத் **தன் தர்மியே** *பலி*யாய் இருக்கை) ஏற்றம்.

தர்மபூத ஜ்ஞாநம், த்ரவ்யமாக இருந்தபோதிலும், வேறொரு த்ரவ்யத்துக்கு விசேஷணமாகவும் இருக்கும்; இது, ஒளியானது தான் ஒரு த்ரவ்யமாகவும், அதே ஸமயத்தில் தீபம் முதலியவற்றிற்கு விசேஷணமாகவும், இருப்பதைப் போன்றதாகும். ஆக, அத்ரவ்யங்கள்தான் விசேஷணங்களாக இருக்க முடியும் என்பதில்லை; த்ரவ்யங் களும் விசேஷணங்களாகலாம். இதுபோலத்தான், சேதநாசேதந த்ரவ்யங்கள், ஈச்வரனுக்கு விசேஷணங்களாக அமைகின்றன.

6. *சுத்தஸத்வம், ஸ்வயம்ப்ரகாசமானால் தர்மிஜ்ஞாநத்தைப்போன்று சேதநவர்கத்தில் சேருமோ* என்றால், '**இல்லை**'; எப்படி தர்மபூதஜ்ஞாநத்தை, ஜ்ஞாத்ருத்வமில்லாத காரணத்தால் அசேதநமாக சொல்கிறோமோ, அதேபோல ஜ்ஞாத்ருத்வமில்லாததால் சுத்தஸத்வமும் அசேதநமாக கருதப்படுகிறது.

7.மற்ற தத்வங்களெல்லாம் ஈச்வரனுக்கு, "மணிவரம்" முதலான அஸ்த்ர-பூஷண ங்களாய் நிற்கும் நிலையை, இவ்வதிகாரத்தின் ஆரம்பத்தில் குறிக்கப்பட்ட வரை படத்தில் காணலாம்.

8.'பர'னான பகவானுக்கு, 'வ்யூஹ-விபவ-அர்ச்சா-ஹார்த்த'மென மற்ற அவதார ரூபங்கள் உண்டு. இந்த அவதாரங்களெல்லாம் :

-சித்/ அசித்தைவிட விலக்ஷணமானவை (*ஸத்யமானவை*);

-ஜ்ஞானத்தில் **சுருக்கமில்லா**தவை;

-**ஸு்த்த-ஸத்வமய**மானவை;

-ஈச்வர இச்சையையே **காரண**மாகக் கொண்டவை;

-தர்மத்தைக் காக்கவேண்டிய **கால**த்தை எதிர்பார்த்து நிற்பவை;

-ஸாதுக்களைக் காப்பதையே **ப்ரயோஜன**மாக உடையவை;

இந்த **அவதார ரஹஸ்ய**த்தை அர்த்தத்தோடு அநுஸந்திப்பவர், இந்த ஜன்மத்தின் முடிவிலேயே (***தன் தகுதிக்கேற்ற உபாயத்தின் நிறைவாலே***) முக்தராவார்.

**ஆக தத்வங்களைப்பற்றி இந்த அளவு ஸாராம்சத்தை, 'கடுகக்கேட்டு, விரிவான *சாஸ்த்ர* அப்யாஸத்தை விட்டுவிட்டு, மோக்ஷத்துக்கான உபாயத்தில் நாம் கடுக மூளவேண்டும்.'**

## 6. பரதேவதா பாரமார்த்யாதிகாரம்

*"திருமாதுடன் நின்ற புராணன்"*

மோக்ஷமளிக்க, பரதத்வமான ப்ரஹ்மத்தினால்தான் இயலும். ஆகையால், மோக்ஷத்தில் ஆசையுள்ள நமக்காக, அந்த ப்ரஹ்மம் **'இன்ன தேவதா விசேஷம்'** என்பது இங்கு ஆராயப்படுகிறது.

நிராகரித்தல் முறையில் (வ்யாவ்ருத்தி) 'மற்றவர்/ மற்றவை தேவதை இல்லை' என நிரூபித்தல் :

| மற்றவர் கொள்கை | நிராகரித்ததற்குக் காரணம் |
|---|---|
| *1.எல்லா வஸ்துக்களுமே, ப்ரஹ்ம த்ரவ்யம்தான்* (பாஸ்கர-யாதவ மதங்கள்) | சேதந அசேதநங்கள் / அவைகளின் பிரிவுகள், இவைகளுக்குள் ஒன்றுக்கொன்று உள்ள வாசி, ப்ரமாணங்களால் ஸித்தம். |
| *2.எல்லா தேவதைகளுமே ப்ரஹ்மம் (ஔபாதிக-பேத வாதம்)* | ஜீவ-ஈச்வரனுக்குள் இயற்கையாய் அமைந்த வாசியும்; ஜீவர்களான தேவதைகளுக்குள் ஸுக-துக்கங்கள் வெவ்வேறாக ப்ரமாண ஸித்தமுமாகையால்; |
| *3.முக்கியமாம் மூவரும்* (ப்ரஹ்மா-விஷ்ணு -ருத்ரன்)*ஸமம்*<br>*4.அம்மூவரும் ஒரே தத்வம்*<br>*5.மூவரைக்காட்டில் மேலான ஒருவன் தான் ப்ரஹ்மம்*<br>*6.மூவரில் ப்ரஹ்மாவோ/ ருத்ரனோ தான் ப்ரஹ்மம்* | -ப்ரஹ்மா / சிவன் முதலானோர் 'கார்யங்கள்'; கர்மத்தால் கட்டுண்டவர்; மற்ற தேவதைகள் :-<br>• நாராயணனின் மாயைக்கு உட்பட்டவர்கள்<br>• அறிவின் ஏற்றச்சுருக்கம் உடையவர்கள்<br>• நாராயணனுக்கு ஏவல்/ தேவை செய்பவர்கள்<br>• 'சுபாச்ரயத்வம்' (ஸம்ஸாரம் நீங்க ஆச்ரயிக்கப் படும் தன்மை) இல்லாதவர்கள்<br>• நாராயணனை அண்டினவர்கள்<br>• நாராயணனின் உடைமை/ சரீரம்/ சேஷம்<br>• 'நாராயணனே பரன்' என்று ஒப்புக்கொண்டவர்கள் |

**ஸ்ரீமந்நாராயணனே பரதத்வம்** என நேர் (அநுவர்த்தமான) வழியில் நிரூபித்தல்

1.நாராயணனே ஆதியாய், ஸர்வ ஜகத்துக்கும் காரணன் என்று பல ப்ரமாணங்கள் நிரூபிக்கின்றன.

2.அவன் 'ஒத்தாரும்-மிக்காரும்' இல்லாத நித்யன்.

3.அவனே வேதங்களின் ஸாரத்தை உள்ளடக்கிய ப்ரணவத்தால் குறிக்கப்படுபவன்.

4.'பிராட்டியை உடைமையால் அவனே தேவன்', என வேதங்களால் ஓதப்படுபவன்; ஆக இந்த திவ்ய- மிதுநமே (இரட்டையரே) ப்ராப்யரும்/ சரண்யரும் ஆவர்.

| நாராயணன் | Vs மற்ற தேவதைகள் |
|---|---|
| 1.பிறக்கும்போது மதுஸூதன-கடாக்ஷம் பெற்றவர் மோக்ஷத்தை விரும்புவர் | பிறக்கும்போது ப்ரஹ்மாவோ / சிவனோ பார்த்தால் ரஜோ/தமோகுணமுடையவராவர் |
| 2.முமுக்ஷுவுக்கு மதுஸூதநனே உபாயம் | மற்ற தேவதைகளுக்கும் மாதவனே உபாஸ்யன் |
| 3.சரணமடைந்தோரை ஒருபோதும் கைவிடான் | நாராயணனால் தண்டிக்கப்படுபவரைக் காக்க ஒரு தேவரும் சக்தரல்லர் |
| 4.ஆச்ரிதற்கு, மோக்ஷமும் / (கேட்காமலேயே) மற்ற பலன்களும் கொடுப்பான் | அளிக்கும் பலன்கள் அல்பங்களாயும்/ விஷம் கலந்த தேன்போலுமிருக்கும் (அதுவும் பகவததீனம்) |

இவ்வர்த்தங்கள் மந்த்ரங்களில் அஹம்' பொதிந்த இடங்கள் { 'அ'காரம்/ நாராயண பதங்கள்/ 'மாம்-சப்தங்கள்




'ஆதிப்பிரான் நிற்க மற்றெத்தைய்வம் நாடுதிரே'
(திருவாதிப்பிரான் - ஆழ்வார் திருநகரி)

## 7. முமுக்ஷுத்வாதிகாரம்

### *“வீடினை வேண்டும் பெரும்பயன்”*

அறியவேண்டியதில் இரண்டாவதான, “உபாய”த்தைப் (**ஹிதம்**) பற்றி மேல் 6 அதிகாரங்களால் விளக்குமுன், கீழ் 6 அதிகாரங்களால் உபதேசித்த 'தத்வ' விஷயங் களை இங்கு சுருக்கிச் சொல்வதன் மூலம் '**மோக்ஷம் பெறத்தகுதியுடைமை**' வளரும் 7 படிகளை இப்படி அடுக்குகிறார் :

i. தனக்கும்-ஈச்வரனுக்கும் இடையேயுள்ள 'சரீரம்-ஆத்மா'என்ற **உறவைஅறிதல்** (ப்ரதாநப்ரதிதந்த்ரம்)

ii. தேஹ-இந்த்ரியங்களைவிட மாறுபட்ட **ஆத்ம-வைலக்ஷண்யத்தை அறிதல்** (உபோத்காதாதிகாரம்)

iii. தன் கர்மாவுக்கு தகுந்தபடி - வேறு சரீரத்தை அடைவது/ பரலோகம் செல்வது இவற்றை அறிந்து - நரகம் அடை தல்/ மறுபடிப் பிறத்தல் இவைகளுக்குக் காரணமான **செயல்களில் முயலாதிருத்தல்**

iv. தான் பகவானுக்கு ஆதேய-விதேய-சேஷனாயிருப்பது (ப்ரதாநப்ரதிதந்த்ரம்); அணுவாய் அல்ப சக்தனாய்/ கர்ம பலமான துக்காதிகளை அநுபவிப்பவனாய் நிற்பது (தத்வத்ரயசிந்தனம்); மேலும் மற்ற தேவதைகளின் 'மோக்ஷமளிக்கும் திறனில்லாமை' (பரதேவதாபாரமார்த்யம்); இவ்வளவால், தன்னைவிட உயர்ந்தவனான ஈச்வரனுக்கு கைங்கர்யம் செய்யும் தன் **தகுதி, இவற்றையறிதல்**

v. இப்படிப்பட்ட தன் நிலையை, **திருமந்த்ரத்தில்** அநுஸந்தித்து, **அஹங்கர-மமகாரங்களை** பின் வருமாறு **ஒழித்து**, தீர்ந்த **அறிவு பெறுகை** (அர்த்தபஞ்சகாதிகாரம்) :-

| அஹங்கார-மமகாரங்கள் | அவை நீங்கும் வழியும் / திருமந்த்ரத்தின் பகுதியும் |
|---|---|
| 1.*சரீரத்தையே ஆத்மாவாக எண்ணுதல்* ***அஹங்காரம்;*** *சரீரத்தோடு தொடர்புள்ள மனைவி/ மக்கள்/ வீடு போன்றவற்றை தனதாக எண்ணுதல்* ***மமகாரம்*** | ப்ரணவத்தின் 'ம', ஜீவனைக் குறிக்கும். 'மன = ஜ்ஞானே/ அவபோதனே', 'மஸ=பரிமாணே' என தாதுவின் பொருளால், ஜீவன் **ஜ்ஞாந ஸ்வரூபன்/** பொருளை **அறிபவன்/ அணுவானவன்;** ஆக, **சரீர த்தைவிட வேறானவன்,** எனத் தெளிந்து, நீங்கும். |
| 2.*'நான் எனக்கே உரியவன்' என்ற எண்ணம்* ***அஹங்காரம்;*** *என்னுடைய குணம் போன்றவை எனக்கே உரியன என எண் ணுவது* ***மமகாரம்*** | ப்ரணவ 'அ'காரத்தின்மேல் மறைந்துகிடக்கும் 4-ம் வேற்றுமைஉருபு (தாதர்த்யம்), 'அ' என்னும் பகவா **னுக்கு**, நானும் என்னைச் சேர்ந்தவைகளும் ***சேஷம்*** என்பதால், 'அஹ'ங்கார/ 'மம'காரங்கள் நீங்கும். |

| அஹங்கார-மமகாரங்கள் | அவை நீங்கும் வழியும் / திருமந்த்ரத்தின் பகுதியும் |
| --- | --- |
| 3.*பகவானுக்கன்றி வேறொரு வர்க்கு நான் சேஷன் என்ற எண்ணம் **அஹங்காரம்**; பகவானைத்தவிர வேறொருவர் என க்கு சேஷி என எண்ணு வது **மமகாரம்*** | ப்ரணவத்தின் 'உ'வுக்கு 'அவனுக்கே' என்று (அவதா ரணம்) பொருள்; இதனால், பகவா**னுக்கே** நான் ***சேஷன்***, எனக்கு பகவா**னே** ***சேஷி***, எனத் தெளிந்து, 'அஹ'ங்கார/ 'மம' காரங்கள் நீங்கும். |
| 4.*என்னைக் காப்பதில், எதையும் எதிர்பாராது, நானே ஸ்வதந்த்ரன் (நிருபாதிக சேஷீ) என்பது **அஹங்காரம்**; காப்ப தில் எனக்கு ஸ்வாதந்த்ர்யம் உண்டு என்பது **மமகாரம்*** | 'ந, ம:'வின் நிஷேதத்தில்(விலக்குவதில்) என்னைக் காப்பதில் **ந மம ஸ்வாதந்த்ர்யம்**' என்று அநுஸந் திப்பதால், 'அஹ'ங் கார/ 'மம'காரங்கள் நீங்கும். |
| 5.*மோக்ஷகைங்கர்யங்களை நானே ஸ்வதந்த்ரமாகச்செய்து, பலனையும் நானே அநுபவிப் பேன் என்பது **அஹங்காரம்**; அவைகளை நானே செய்வேன்/ பலனும் எனக்காக என்பது **மமகாரம்*** | 'நாராயணாய' என்பதுடன் 'ந, ம:' வைச் சேர்த்து அநுபவித்தால், மோக்ஷகைங்கர்யங்களும் **பகவானா லேயே** செய்விக்கப்படுகின்றன; அதுவும், **அவன் ப்ரீதி**க்காக**வே** செய்யப்படுகின்றன எனத்தெளிவ தால், 'அஹ'ங்கார/ 'மம'காரங்கள் நீங்கும். |

vi. (ஸ்வர்க்கம் உள்ளிட்ட) 'அசித்' அநுபவத்தின் [துக்கமூலத்வம்/துக்க மிச்ரத்வம்/ துக்கோதர்க்கத்வம் / அல்பத்வம்/ அஸ்திரத்வம்/ விபரீதாபிமாந மூலத்வம் ஆகிய] தோஷம் தெரிந்து விட்டாலும்; **ஆத்மாநுபவ**மும் (ஸ்வாபாவிக ஆனந்த விருத்தமாகி), **பகவதநுபவ**த்தின் வைலக்ஷண்யத்தை ஒப்பிட்டால், **"தாழ்ந்ததே"** எனத் தெளிவது (ஸார நிஷ்கர்ஷாதிகாரம்)

vii. இவ்வளவால், ப்ரவ்ருத்தி (மற்ற *பல*னை வேண்டிச்செய்யும்) தர்மங்களினின்று நிவ்ருத்தராய், நிவ்ருத்தி (மோக்ஷம் வேண்டிச் செய்யும்) தர்மமான **உபாய அநுஷ்டான**த்தில் கடுக மூள முனைபவனே "**முமுக்ஷு**"

* * *



## 8. அதிகாரிவிபாகாதிகாரம்

*"நீண்டும் குறுகியும் நிற்கும் நிலைகளை ஏற்பவர்"*

**உபாயத்தில் தகுதியுடையோர்**

| ஸத்வாரக ப்ரபத்தி நிஷ்டன் | அத்வாரக ப்ரபத்தி நிஷ்டன் |
| --- | --- |
| (ப்ரபத்தியை அங்கமாகவைத்து பக்தியோகம் செய்பவன்) அல்லது உபாய ரூபமாக பக்தி செய்பவன் (மதுவித்யை முதலா) 31 வித்யா ரூபம் | (நேரிடையாக ப்ரபத்தி செய்பவன்) அல்லது பலரூபமாக பக்தி (அதேப்ரயோஜனமாக) செய்பவன் |

| | உக்தி நிஷ்டை | ஆசார்ய நிஷ்டை |
| --- | --- | --- |
| *வகைகள்* | உக்தி நிஷ்டை | ஆசார்ய நிஷ்டை |
| *செயல் முறை* | *பகவானைத்தவிர வேறு கதியில்லாத வனாய்,* ஆசார்யன் சொல்லும் ப்ரபத்தி வாக்யங்களைச் சொல்லித் தம்மைக் காக்கும் பொருப்பை பகவானிடம் ஸமர்ப்பித்தல் | *யாசித்தால் காப்பாறுவான் என நம்பி* - தனக்காகவும்/ தன்னைச்சார்ந்தவர்க்காகவும் வும் ஆசார்யன் அநுஷ்டிக்கும் ஸமர்ப்பணத்தில் அடங்குதல் |

*ப்ரபத்தியின்ஏற்றம்*

-வர்ண-ஆச்ரமாதி நியமம் பாராமல் எவரும் அநுஷ்டிக்கக் கூடியது;

-எல்லாப் பாபங்களையும் போக்க வல்லது;

-வேண்டும் பயனைக்கொடுக்கவல்லது ;

-அநுஷ்டிக்க எளியது; ஒரே முறை செய்யவேண்டியது;

-எந்தத் தடைக்கும் உட்படாதது; விரைவில் பலன் தரக்கூடியது;

-'ப்ரஹ்மாஸ்த்ரம்போல' வேறு உபாயத்தை ஸஹிக்காதது.

*அடையும் பலன்*

-ப்ராக்ருத-சரீரம் இருக்கும்வரை அர்ச்சாவதார கைங்கர்ய அநுபவம்

- ப்ராக்ருத-சரீரம் கழிந்தபின் பரிபூர்ண ப்ரஹ்மாநுபவ கைங்கர்யம்

### விசேஷ விஷயங்கள்

- அத்வாரக/ஸத்வாரக ப்ரபத்திநிஷ்டனுக்கல்லது, மோக்ஷம் கிட்டாது.

- **அத்வாரக**னுக்கு, மோக்ஷம் தாமதிக்கும்; ஆனால் யோக-அநுபவம் **அளவற்றது;**

**ஸத்வாரக**னுக்கு *பலன் சீக்ரம்*கிட்டும்; ஆனால், ***ஜீவதசை*யில்** ஸுகம் **அளவுடையது.**

*******

## 9. உபாய விபாகாதிகாரம்
### "பழமறையின் பரம நெறி"

**மோக்ஷ**ம்பெறக் காரணமாயிருப்பது **உபாய**மாகும்; இவை, "எப்போதும் இருப்பது (ஸித்தம்) / செய்யப்படவேண்டியது (ஸாத்யம்)" என இருவகை. ஸாத்ய உபாயம், **அதிகாரி** பேதத்தால் **பக்தி** யோகம்/ ப்ரபத்தி எனப்படுமெனக் கீழே ஸாதித்தார். இங்கு அந்த ஸாத்ய உபாயங்களை விவரிக்கு முன், "**பகவா**னே (ஸித்தமான) நேர் **உபாயம்**" என உபநிஷத்துக்கள் கூறுவதாலும், அந்த **பகவா**னே "**உபேய**முமாவதால்" அதையும் குறிப்பிடுகிறார். அதாவது : 1) ஸித்த உபாய/ உபேயமான **பகவான்**, அந்த ஜ்ஞானத்துக்கு **விஷய**மாகும் . 2) ஸாத்ய உபாயம்/உபேயம் இரண்டுமே (*சில* ***வித்யாஸங்கள்*** *இருந்தும்*) **ஜ்ஞான-விகாஸ-விசேஷ**ங்கள்(*தனித்தன்மைகொண்ட-அறிவின் மலர்ச்சி*); இவற்றின் விளக்கம் :-

| **பகவான் ஸித்த உபாய / உபேயமாக ஆவது** | |
|---|---|
| **ப்ரபந்ந**னுக்கு ஜ்ஞானத்துக்கு விஷயமாய், பக்தியோக ஸ்தாநத்தில் நின்று *பல*னளிப்பதால், **உபாயம்** ; **பக்த**னுக்கு, கர்மயோக ஆரம்பம் முதல் உபாயபூர்த்தி வரை செய்ய இயலாத கர்மங்களின் ஸ்தாநத்தில் நின்று, உபாயத்தைத் தலைக்கட்டுவதால், **உபாயம்**; | ஜ்ஞானத்துக்கு விஷயமாய்க் கொண்டு, குண-விபூதிகளோடு பரிபூர்ணமாய் அநுபவிக்கப் படுவதால், **உபேயம்**. |

| கர்த்தவ்யமான/ **ஸாத்ய** உபாய ஜ்ஞானம் (காரணம்) | ***வித்யாஸம்*** | **ஸாத்ய**/ப்ராப்தி ரூபமான உபேய ஜ்ஞானம் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | ஸங்குசித ஜ்ஞாநமாகையால் இந்த்ரியங்களை **எதிர்பார்ப்பது** | விகஸித ஜ்ஞாநமாகையால் இந்த்ரியங்களை **எதிர்பாராதது** |
| 2 | *சாஸ்த்ர*ங்களில் **விதி**க்கப்பட்டது | விதியின்றி, **இயற்கை**யாயுள்ளது |
| 3 | வித்யைகளில் **குறித்த** குணங்களைக்கொண்ட (வ்யவஸ்தித) ப்ரஹ்மத்தைப் பற்றியது | குண-விபூதிகள் எல்லாத்தாலும் **பரிபூர்ண**-ப்ரஹ்ம-விஷயம்; அவ்வநுபவ-பரீவாஹ-**கைங்கர்யம்** |

⇩ ***எதைவிட*** *வித்யாஸப்பட்டது* ⇩

| | ஸாத்ய **உபாயம்** | ஸாத்ய **உபேயம்** |
|---|---|---|
| **ஜ்ஞானம்** என்றதால் | க்ரியையைவிட வேறான/ ப்ரதானமான தன்மையால் வேறுபட்டது. | 'ஐக்யமாக' **ப்ரமி**க்கும், சேர்தல்/ ஒன்றாவது என்பதைவிட வேறு |
| **விகாஸம்** என்றதால் | ஸித்தோபாயமான பகவத் ஸ்வரூபத்தை விட வேறுபட்டது. | ஸித்தோபாயமான பகவத் ஸ்வரூபத்தை விட வேறுபட்டது. |
| ***விசேஷம்*** என்றதால் | உபேய பகவதநுபவ ஞானத்தை விட வேறுபட்டது. | ஸாத்யோபாய ரூப ஞானவிகாஸத்தை விட வேறுபட்டது. |

*ஸந்மார்க்கங்களும் (பக்தியோகம்) அவைகளின் ஸ்வரூப-பேத-கார்யங்களும்*

| ஸந்மார்க்கம் | ஸ்வரூபம் | ***பேத***ம் | கார்யங்கள் | ஸாதந ஆகாரம் |
|---|---|---|---|---|
| கர்மயோகம் | பலன்/தொடர்பு இவையொழிந்த நித்ய/நைமித்திக/ காம்யங்களில் முடிந்ததை நியமத்து டன் செய்யும் கர்ம விசேஷம் | தேவார்ச்சன தபஸ்-தீர்த்த -தான- யக்ஞம் முதலியன | ஞானயோக மூலமோ/ நேரேயுமோ ஆத்மாவை காட்டும் | ஸத்வாரக மோக்ஷோபாய மாக(இடையிட்டு)யிருக்கும் ஒரே நிலை |
| ஞானயோகம் | கர்மயோகத்தால் வசப் படுத்திய மனத்தினுக்கு, அசித்தைவிட விலக்ஷணனாய்/ஈச்வர-சரீரமான தன் ஆத்ம ஸ்வரூப த்யாநம் | – | ஆத்மாவை நேரில் காட்டும் | |
| பக்தியோகம் (பரபக்தி) | ரூப/ குணங்களுடன் கூடிய பகவானைக் குறித்து ப்ரீதியோடு நேரில் காண்பதைப் போல், செய்யும் இடைவிடாத த்யாநம் | 31-வித வித்-யைகள் | அஷ்ட ஸித்திகளும்/ பர ஞான-பரம பக்தி நிலையால் மோக்ஷமும் | அத்வாரக மோக்ஷோபாய மாக (நேராக) யிருக்கும் ஒரே நிலை |

**பக்தியும்/ பக்தி யோகத்தின் பர்வாக்களும்/ அவைகளின் விளைவுகளும்**

| பர்வா | ரூபம் | விளைவுகள் |
|---|---|---|
| **பக்தி** | ஸாத்விகருடன் சேர்க்கை/ புராணம் கேட்டல்/ ஸுக்ருத விசேஷம் இவைகளால், பெருமானிடம் உண்டாகும் **ப்ரீதி-விசேஷம்** | ஸ்வரூப/ரூப/குண/விபூதிகளோடு, 'பகவானை நன்கு **அறியவேணும்**' எனும் ஆசையை உண்டாக்கும் |
| **பரபக்தி** | பக்தியின் விளைவாக, *சாஸ்த்ரம்* சொன்ன தத்வ ஜ்ஞானம் உண்டாகி, கர்ம/ ஜ்ஞானயோகம் வழியே **பக்தி யோகம்** செய்ய முற்படுவது(**இதுதான்** மோக்ஷோபாய **பக்தியோகம்**) | ஸ்வரூப/ரூப/குண/விபூதிகளோடு பகவானை நேரில் **காணவேணும்** என்ற ஆசையை உண்டாக்கும் |
| **பர ஜ்ஞானம்** | பகவானின் அநுக்ரஹத்தால், **தத்கால**மான பரிபூர்ணமான ஸாக்ஷாத்காரம் ஏற்படுவது | பரபக்திமூலம் ஒரு க்ஷணம்கண்ட பகவானிடம் **எல்லையில்லா ப்ரீதி**யை உண்டாக்கும் |
| **பரமபக்தி** | பகவானை **நிலையாக** அநுபவித்தாலன்றி, உயிர் தரிக்க இயலாத நிலை ஏற்படுவது | இனியும் தாமதிக்காமல் **மோக்ஷம் அளிக்க** பகவானைத் தூண்டும் |

**பக்தியோகம் செய்வதற்கு யோக்யதை இல்லாதவர் யார் ?**

1)*சாஸ்த்ர*த்தினால் தடுக்கப்பட்டோரான ஸ்த்ரீகள்/ மூவர்ணத்தில் சேராதவர்; 2)செய்வதற்கு ஞானம் இல்லாதவர்; 3)செய்வதற்கு *சக்தி* இல்லாதவர்; 4)பலன் கிடைக்க, காலதாமதத்தைப் பொறுக்காதவர்.

**ப்ரபத்தியின் பெருமை :**

பக்தியோகம் செய்ய 'யோக்யதையில்லா' நம்போல்வர்கள் நேராகவும்/செய்ய யோக்யதை உடையவர்கள் பக்தியோகம் மூலமாகவும் – இப்படி **இருநிலை**யால் யாவரும் – நற்கதிபெற, உயர்ந்த உபாயமாய் நிற்பது ப்ரபத்தி, என்பது மேலே விளக்கப்படும்.

**விசேஷ விஷயங்கள்**

-பெருமானையடைய அவனே உபாயம்; அவ்வுபாயத்தைச் செய்வதற்கும் அவனே காரணம்.




ஸ்ரீரங்கநாத பாதுகைகள்

## *10. ப்ரபத்தி யோக்யாதிகாரம்*

### *“அனன்னியரார் வந்தடையும் வகை” வரிப்போர் யார் ?*

(லக்ஷணங்களுக்கு viii பக்கம் பார்க்க)

’**ப்ரபத்தி** செய்யத் தகுதியுள்ளவர் யார்?’ என்பதையும்; அவர்களுக்கு இருக்க வேண்டிய இரு தன்மைகளையும் இப்படி விளக்குகிறார்.

1) ஸம்ஸாரத்திலிருந்து விடுபடும் ஆசையுள்ள, ஆனால் பக்தியோகத்தில் தகுதியில்லாதவர் (**ஆகிஞ்சந்யம்** உள்ளவர்); 2) (மோக்ஷத்தைத்தவிர்த்த) **வேறு பலனை** யும்; அதற்காக **வேறு தெய்வ**த்தையும் நாடாதவர் ( அநந்யகதித்வம் உள்ளவர்)

ஆக, ப்ரபத்திக்குத் தகுதியுடையவர்கள், 15 வகையாவர்; அவர்களாவர் – ***பக்தியோகத்தில்*** :

1) (1)சக்தி (2)ஞானம் (3)வர்ணம் இல்லாதவர்; (4)தாமதம் பொறுக்காதவர் (1-2-3-4)
2) (1)சக்தி (2)ஞானம் (3)வர்ணம் இல்லாதவர்; (1-2-3)
3) (1)சக்தி (2)ஞானம் இல்லாதவர்; (1-2)
4) (1)சக்தி இல்லாதவர்; (1)
5) (1)சக்தி (3)வர்ணம் இல்லாதவர்; (4)தாமதம் பொறுக்காதவர் (1-3-4)
6) (1)சக்தி (3)வர்ணம் இல்லாதவர்; (1-3)
7) (1)சக்தி இல்லாதவர்; (4)தாமதம் பொறுக்காதவர் (1-4)
8) (2)ஞானம் (3)வர்ணம் இல்லாதவர்; (4)தாமதம் பொறுக்காதவர் (2-3-4)
9) (2)ஞானம் (3)வர்ணம் இல்லாதவர்; (2-3)
10) (2)ஞானம் இல்லாதவர்; (2)
11) (2)ஞானம் இல்லாதவர்; (4)தாமதம் பொறுக்காதவர் (2-4)
12) (2)ஞானம் இல்லாதவர்; (4)தாமதம் பொறுக்காதவர் (1)சக்தி இல்லாதவர் ; (2-4-1)
13) (3)வர்ணம் இல்லாதவர்; (4)தாமதம் பொறுக்காதவர் (3-4)
14) (3)வர்ணம் இல்லாதவர்; (3)
15) (4)தாமதம் பொறுக்காதவர் (4)

-இப்படிப்பட்ட தகுதியுடையோர் அநுஷ்டிப்பதற்கான ப்ரபத்தியின் அங்க/ அங்கிகளை, மேல் இரண்டு அதிகாரங்களால் விளக்குகிறார்.

## 11. பரிகரவிபாகாதிகாரம்

## "துணையாம் பரனை வரிக்கும் வகை"

'*வேறங்கம் இதனில் வேண்டா*' (ப்ரபத்தி, அங்கம் எதையும் எதிர்பாராதது) எனப் ப்ரமாணங்கள் சொன்னதற்கு, "ப்ரபத்திக்கென்று **விசேஷமாக விதிக்கப்பட்ட ஐந்து அங்கங்களைத்தவிர**, வேறு பொதுவான அங்கம் ஏதும் வேண்டாம்" என்றுதான் பொருள்.

| அங்கங்கள் | நிபந்தனம் | பலம் |
|---|---|---|
| ***ஆநுகூல்ய ஸங்கல்பம்*** – இனி பகவானுக்கு அநுகூலனாயிருப்பேன் என உறுதிகொள்ளல் | பகவானுக்கு நாம் *சேஷ*னாவதால் | 'கட்டளை மீறுத'லிலிருந்து **தப்புவது** |
| ***ப்ராதிகூல்ய வர்ஜநம்*** – ப்ரதிகூலனாயிருப்பதை இனி விடுதல் | பகவானுக்கு நாம் *சேஷ*னாவதால் | 'கட்டளை மீறுத'லிலிருந்து **தப்புவது** |
| ***மஹாவிச்வாஸம்*** – யாசித்தால் நம்மை பகவான் ரக்ஷிப்பான் என முழுநம்பிக்கை கொள்ளல் | 5- வித *சங்கை*களும் தீர்ந்தமையால் (மேலே விளக்கப்பட்டிருக்கிறது) | அநுஷ்டானம் நிலைப்பது /பாரமற்ற நிலைபெறுதல் |
| ***கார்ப்பண்யம்*** – உபாஸநத்தில் திறமின்மை/ விளைவான செருக் கழிவு /பகவானின் கருணை வேண்டுதல் ஆகிய ஏழ்மை வெளிப்பாடு | நம் ஏழ்மைத்தனம்/ போக்கற்ற தன்மை/ செருக்கு அழிதலால் | ஈச்வரனின் கருணையை தூண்டிவிடுவது |
| ***கோப்த்ருத்வ வரணம்*** – உபாஸநத்தை எதிர்பாராது 'காப்பாற்று' என பகவானை வேண்டுவது | 'புருஷார்த்தமாகவேணு' மென்பதால் | பகவான் மோக்ஷ புருஷார்த்தம் கொடுப்பவன் ஆவது |

(ப்ரபத்தி அநுஷ்டானபரமான) **த்வயத்தில் இவ்வங்கங்களை அநுஸந்திக்கும் இடங்கள்**

| மந்த்ர பாகம் | அங்கங்கள் |
|---|---|
| ஸ்ரீமத்/ நாராயண பதங்கள் | இப்பதங்கள், ஈச்வரனின் ஆகார விசேஷங்களாகிற 'புருஷகார-ஸம்பந்த-குண-வ்யாபார-ப்ரயோஜன கர்ப்பமாயிருக்கின்றன. இவ்வாகாரங்கள் தான், நம் ஆநுகூல்ய <u>வர்ஜன</u>/ ப்ராதிகூல்ய <u>அநுவர்த்தன</u>ங்களால் பகவானுக்குண்டான 'நிக்ரஹ ஸங்கல்பத்தை' மாற்ற உதவுகின்றன; ஆக, ***ஆநுகூல்ய ஸங்கல்ப/ ப்ராதிகூல்ய வர்ஜந***ங்கள் அர்த்தமாகக் கிடைக்கின்றன. |
| ப்ரபத்யே | '*ப்ர* + *பதில்* **தாது** + *தன்மைக்குறி* = ப்ரபத்யே ஆகிறது. இதில் 'ப்ர' என்பதில் ***விச்வாஸ மஹத்வம்*** சொல்கிறது; '*பதிலு*க்கு', அடைவது (*கதி*) எனப் பொருளாய், அதுவும் அறிவைமுன்னிட்ட(புத்யர்த:) நம்பிக்கைமுன்னிட்ட செயலாகவே ஆவதால், அர்த்தமாக ***விச்வாஸ ஸ்வரூபம்*** கிடைக்கிறது; 'தன்மைக்குறி' கர்த்தாவின் **கார்ப்பண்ய**த்தைச் சொல்லும். |

| மந்த்ர பாகம் | அங்கங்கள் |
|---|---|
| சரணம் ப்ரபத்யே | ப்ரபத்தி விஷயத்தில், 'சரணம்' என்பதற்கு 'உபாயம்' எனப்பொருள்; ஆக '**உபாயமாக** (காரணமாக) **ஆவாய்**' என சப்தமாகவே **'கோப்த்ருத்வ வரணம்'** சொல்கிறது. மேலும், ப்ரபத்தி/ பகவான் என இரண்டும் காரணமாயிருந்தும், கார்யமான 'காப்பது' என்பது, சேதநனால்தான் முடியுமாகையால், பகவானிடம் '**காப்பாய்**' என **ப்ரார்த்திப்பதை**யும் குறிக்கும். |

-'*மிகப்பெரிய பலமாகிற மோக்ஷத்தை, சிறிய செயலாகிய ப்ரபத்திக்கு பகவான் தருவானா?* என்ற "5- வித ஐயங்கள்", ஈச்வரனின் ஆகார விசேஷங்களை இவ்வாறு அறிந்தால்,  அகலும் :-

| ஸந்தேஹங்கள் | பகவானின் ஆகார விசேஷங்கள் | ஐயம் அகலும் காரணம் |
|---|---|---|
| *1.எல்லாம் அறிந்த (ஸர்வ ஜ்ஞ:) , எதையும் செய்ய சக்தியுள்ள (ஸர்வ சக்தியுக்த:) ஈச்வரன், அளவில்லா அபராதங்களைச் செய்தவர்கள் அணுகுவதற்கு ஏற்றவனாகை எப்படி?* | **புருஷகாரம்**- "மறுக்க வொண்ணாமை". இது வேண்டியது தரவல்ல 'அடையப்படுபவனையும் அடைபவனையும் சேர்த்துவைக்கும் ஒரு சேதநனின் ஆகாரம். | இதனால், அந்தப்புரவாஸிகளை நடத்துவதுபோல், மோக்ஷ விரோதிகளான நம் பாபங்கள் ஒன்றையும் பொருட்படுத்தாதவன் (அவிஜ்ஞாதா)போல் **க்ஷமித்து, அடைக்கலம் தருவதால்.** |
| *2. நம் கர்மங்களுக்கேற்ற பலனை தருபவனான ஈச்வரன், தடையாயுள்ள அளவிலா அபராதங்களை செய்த நமக்கு, மிக பெரிய பலத்தைத் தருவானா ?* | **ஸம்பந்தம்** : - "ஒழிக்க ஒழியாமை". ஈச்வரனுக்கும் நமக்கும் இடையிலுள்ள 'ஆண்டான்-அடிமை' என்ற(ஸ்வாமித்வ-தாஸத்வ) ரூபம். | ஸ்வாமியான பகவான் ப்ரபத்தியாலே ப்ரஸந்நனாய், தாஸனாகிற நமக்கு பிறப்புரிமைபோன்றதான, **அளவில்லாத *பல*னைத் தருவதால்.** |
| *3.பெரிய உபகாரத்தில்கூட அபேக்ஷை இல்லா ( அவாப்த ஸமஸ்த காமனான) ஈச்வரன், ப்ரபத்தியாம் சிறு கார்யத்துக்கு பெரிய பலத்தைத் தருவானா ?* | குணம் :- வேறொன்றையும் எதிர்பாராமை; பகவானின் தயை-வாத்ஸல்யாதி குணங்கள். | தன் இயற்கையான கருணையினால், நாம் செய்யும் சிறு கார்யமான ப்ரபத்தியையும் பெரிய **உபகாரமாக எண்ணி *பல*ன் தருவதால்.** |

| ஸந்தேஹங்கள் | பகவானின் ஆகார விசேஷங்கள் | ஐயம் அகலும் காரணம் |
|---|---|---|
| *4.பகவான் க்ஷுத்ர தேவதைகளைப் போல், உடனே பலன் தருபவ னல்ல; ஆக, ப்ரபத்திக்கு மட்டும் தாமமின்றி (தாழாதே) பலத்தைத் தருவானா ?* | வ்யாபாரம்:- படைத்தல்/காத்தல் போன்ற தன் கார்யங் களுக்குத் தன் ஸங்கல்ப த்தைத் தவிர வேறு ஒன்றையும் (ஸஹகாரி யை) எதிர்பாராமை. | யஜன-பஜனாதிகளுக்குத் தாமதித்து பலன் கொடுப்பனே யாகிலும், வேறு கதியில்லாமல் தம்மிடம் ப்ரபத்தி செய்தவனு க்கு, தன் உதாரகுணத்தாலும் ஸ்வதந்த்ர ஸங்கல்பத்தினாலும், வேண்டிய பொழுதிலேயே **விரும்பிய *பல*ன் அளிப்பதால்.** இதை விபீஷண- காக வ்ருத் தாந்தங்களில் காணலாம். |
| *5.ஈச்வரன், ஒத்தாரும்/ மிக்காரும் இல்லாதவன் (ஸமாதிக தரித்ரன்). ஆதலால், மிகவும் தாழ்ந்த நம்மை தாரதம்யம் இல்லாமல் (தரம் பாராதே) தம்முடன் சேர்த்துக் கொள்வது எப்படி?* | ப்ரயோஜநம்:- மிகவும் நீசரான (தண்ணிய ரான) பிறருடைய பேறே, தன் பேறாகக் கொள்ளுதல். | ஸ்வாதந்த்ர்ய-தயா-வாத்ஸல் யாதி குணங்களையுடைய ஈச்வரன், தன்னை அடைந்த வர்க்குத் தன் ப்ரயோஜநமாகவே **வேண்டியதைத் தருவதால்.** இதை கோஸல மக்களை ராமன் 'நற்பாலுக்கு உய்த்ததி லும்'; உலகத்தவர் ப்ரியமான குமாரனோடு ஸமமாக, கிளிக்கும் ஸ்வயம்ப்ர யோஜநமாகவே பாலூட்டுவதி லும் காணலாம் |



## 12. ஸாங்க ப்ரபதநாதிகாரம்

### "அறவே பரமென்று அடைக்கலம் வைத்தமை"

பகவானைச்சேர்ந்த இந்த **ஆத்மா**வையும்/ அதைக்காக்கும் **பர**த்தையும்/ அச் செயலால் உண்டாகும் **பல**னையும், [ குருபரம்பரையை ஸேவித்து, த்வயம் முதலான மந்த்ரங்களைக் கொண்டு, த்யாக புத்தியுடன் * ] *ஈச்வர*னிடத்தில் ஸமர்ப்பித்தலே ப்ரபத்தியின் **அங்கி**யாகும்.

| *பலார்த்தீ செய்யப்பட வேண்டியவை* | *ஸமர்ப்பணம்* | |
|---|---|---|
| மோக்ஷார்த்தீ { - பக்தன் / -**ப்ரபந்நன்** | -ஸ்வரூப ஸமர்ப்பணம்<br>- --"-- | + **ரக்ஷாபர ஸமர்ப்பணம்** |
| **ப்ரபந்நன்** { -மற்ற *பல*னுக்காக / -மோக்ஷத்துக்காக | - ரக்ஷாபர ஸமர்ப்பணம்<br>- --"-- | +**ஸ்வரூப/ *பல*** ஸமர்ப்பணம் |

**பரஸமர்ப்பணத்தை அநுஷ்டிக்கும்போது விட (த்யாகம் செய்ய) வேண்டியவை**

| *த்யாகங்கள் (ஸம்பந்தத்தை அறுக்கை) | காரணம் |
|---|---|
| ***-கர்த்ருத்வம்*** (எனக்குத் திறனுண்டு என எண்ணுதல்) | பரஸமர்ப்பணம் செய்வதில், நமக்கிருக்கும் திறனையும்/ *சக்தி*யையும் அளித்தவன் எம்பெருமானே (இத் த்யாகத் துக்குப் பொருள் –*செயலை ஸ்வரூபேண* [செய்யாமல்] *விடுதல்* அல்ல; மாறாக, செய்துவிட்டு, "கர்த்ருத்வம் தன்னுடையது அல்ல" என **நினைத்தலே**) என்பதால் |
| ***-மமதா-*** (ஸ்வதந்த்ரமாகச் செய்கிறேனெனஎண்ணம்) ***-பலம்-*** (ப்ரஹ்மாநுபவம் எனக்கே என்ற எண்ணம்) | ஆத்மாவும்/ அதைச் சேர்ந்தவைகளும் பகவானுக்கே *சேஷ*மென்பதால், ப்ரபத்தி ரூப உபாயத்தை செய்வித்ததும் பகவானே/ *பல*னும் **பகவா**னுக்கே, என்பதால் |
| ***-பலோபாயத்வம்-*** (பலனளிப்பது ப்ரபத்தி எனும் உபாயமே என்ற எண்ணம்) | *பல*மான பரிபூர்ண ப்ரஹ்மாநுபவ கைங்கர்யத்தை அடைவித்தது பகவானின் ப்ரஸாத ஸங்கல்பமே. (ஆக **பகவான் ப்ரதான *பலி***. இந்த ஸங்கல்பத்தை உண்டாக்கிய ப்ரபத்தி அநுஷ்டானம், '*இடையான*' காரணம்தான்.) |

த்வயத்தில் பரஸமர்ப்பணத்தை (அங்கியை) ஒரேமுறை அநுஸந்திக்கவேண்டிய இடம் { உபாயபரமான பூர்வ கண்டத்தில் (மஹாவிச்வாஸத்தை முன்னிட்ட/ கோப்த்ருத்வ வரணம் அடங்கிய) ***சரணம் ப்ரபத்யே*** என்பதில்.

## விசேஷ விஷயங்கள்

1.ஒரு கார்யத்துக்குக் காரணங்கள்(ஹேது) 3 -அசேதநம்/ சேதநன்/ ஈச்வரன்

ஒரு கார்யத்துக்கு ப்ரயத்நம் செய்பவர் (கர்த்தா) 2 - சேதநன்/ ஈச்வரன்

ஒரு கார்யத்தைத் தானாகவே செய்பவர் (ஸ்வதந்த்ர கர்த்தா) 1 - ஈச்வரன்

2.இங்கிருந்த நாள், அநிஷ்டாசரணமில்லாத கைங்கர்யத்தையும், சரீரத்தை விட்டபின் மோக்ஷத்தையும் சேர்த்து *பல*மாக ப்ரார்த்தித்து, ப்ரபத்திசெய்து, பரமில்லாது நிற்ப வரே நிபுணர்.

* * * * * *



ஆழ்வார் திருவடித் தொழல்
நம்மாழ்வார் மோக்ஷம் - ஸ்ரீரங்கம்

## 13. க்ருதக்ருத்யாதிகாரம்

## "வேள்வியனைத்தும் முடித்தவர்"

பத்தன் அநுஷ்டித்த பரந்யாஸத்தை பகவான் ஏற்றுக்கொண்டபின், ப்ரபந்நன் இனி : 1)**பரமில்லாதவனாய்; 2) ஸந்தேஹமற்றவனாய்; 3) பயமில்லாதவனாய்; 4) மகிழ்வுடன்,** பகவத் விஷயத்தில் *சாஸ்த்ர* விதிப்படி ஆஜ்ஞா-அநுஜ்ஞா கைங்கர்யங் களைச் செய்துவரவேண்டும். இந்த நிலை, முக்தனுடைய நிலைக்கு ஸமமானதாக இருக்குமாதலால், இவன் **க்ருதக்ருத்யன்** (செய்ய வேண்டியதைச் செய்து முடித்தவன்)/ **க்ருதார்த்தன்** (பயன் பெற்றவன்) என்று கொண்டாடப்படுவான்.

| **க்ருதக்ருத்யனின் நிலை** | அது கைகூடக் காரணம் |
|---|---|
| 1.பரமில்லாமை | -ப்ரபத்தி செய்தபின், அப்*பல*த்தைப்பெற செய்யவேண்டியது ஏதுமில்லாமை;<br>-செய்யவேண்டியதை செய்து முடித்தமை;<br>-ஸ்வதந்த்ர/ ஸத்ய ஸங்கல்ப/ *பல*ப்ரதனான பகவான் 'மா *சுச:*' **(இன்னும் செய்யவேண்டியன இருக்குமோ என்ற** கவலை வேண்டாம்) என அருளிச்செய்தது. |
| 2.ஸந்தேஹம்/ பயம் நீங்கியமை | -'என் ஒருவனையே உபாயமாகப் பற்று' '**நான் எல்லா பாபங்க ளினின்றும் உன்னை விடுவிக்கிறேன்**' என்ற *ஈச்வர*னின், ஸங்கல்பம் |
| **க்ருதக்ருத்யனின் நிலை** | அது கைகூடக் காரணம் |
| 3.மன மகிழ்வு பெறுதல் | -மற்ற பயன்களில் நமக்கு வாஸனைகூட இல்லாமல் **கடையற** விட்டது;<br>-மற்ற உபாயங்களில் நமக்கு ஸம்பந்தம் இல்லாமல் **காம்பற** விட்டது;<br>-இதனால் தரித்ரனான நாம், முயற்சியின்றி பெறப்போகும் பகவத்கைங்கர்ய புருஷார்த்தத்தை ஒப்பிட்டுப் பார்த்தது |

**க்ருதக்ருத்யனின் நிலைச்சுருக்கம்**

| ப்ரபத்திக்கு முன் | ப்ரபத்திக்குப் பின் |
|---|---|
| "*ப்ரஸக்த சோகனாய்*' (*சோக*ம் உடையவனாய்) இருப்பது; இது இல்லாவிடில் உபாயபூர்த்தி உண்டாகாது; | 'காப்பாற்றுகிறேன்' என்ற பகவான் பேச்சில் நம்பிக்கை குறைந்தால், உபாயபூர்த்தியில்லா மையால் மோக்ஷம் விளம்பிக்கும்; ஆக "*வீத சோகனாய்*" (*சோக*த்தை விட்டு ஒழித்தவ னாய்) நிற்கவேணும். |

-'செய்த வேள்வியர்', *பல*ன் உடனே கிடைக்காததால், '**தரித்ரர்**" ஆயினும், கைங்கர்ய மெனும் **செல்வம்** உடையவராவர்;

-நித்ய-நைமித்திகங்களில், வேதம் விதித்தபடி மற்ற தேவதைகளின் பெயரைச் சொல்வதால், அவருடைய "பாரமைகாந்த்யம்" குறைவுபடாது; காரணம், அக்கர்மங்களால் தேவதைகளுக்கும் அந்தர்யாமியான எம் பெருமான்தான் ப்ரீதியடை கிறான்; 'செய்த வேள்வியரின்' *உத்யேச்ய*மும், எம்பெருமானுக்கு ப்ரீதி செய்வதுதான். மேலும் (ப்ரதாந ப்ரதிதந்த்ராதிகாரத்தில் சொன்னதுபோல்) எல்லாப் பெயர்களும் பகவானை **நேராகவே குறிப்பதால்**, அவர் செய்யும் நித்ய-நைமித்திகங்களும், பகவதாராதநம்தான்.

* * * * * *



ஸ்வாமி தேசிகன் மங்களாசாஸனம் - திருக்கச்சி

## 14. ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகாரம்

*"மூன்றில் நிலையுடையார்"*

செய்த வேள்வியர், தங்கள் – **ஸ்வரூபம்/ அநுஷ்டித்த உபாயம்/ பெறப்போகும் புருஷார்த்தம்** ஆகிய – நிலைகளில் தொடர்ந்து தான் உறுதியுடன் நிற்பதை அறிந்து கொள்ள, சில அடையாளங்கள் :

| *நிலை* | *நிலையின் அடையாளங்கள்* | *நிலை ஏற்படக் காரணம்* |
|---|---|---|
| ***ஸ்வரூபநிஷ்டை***: 'ம' காரத்தின் - ஞானம் என்ற பொருளால், **அசித் வைல-க்ஷண்ய**மும், **பகவத் க்ருபை**க்கு மூலமான ஆநுகூல்யமும்; -'அவபோதநம்' என்றபொருளால், **ஆகிஞ்சன்யம்/ விகாரமின்மை/ மகிழ்ச்சியுறுதல்,** ஆகியவையும் (முறையே) தோற்றும் | *பிறர் தம்மை அவமதிக்க நேர்ந்தால் :-*<br>-அவர் சொல்லும் குற்றமெல்லாம், உடலை பற்றியவை; **ஆத்ம ஸ்வரூப**த்தில் இல்லை, என வருத்தமுறாமல் இருத்தல்; | -அசித்தைவிட வேறான **ஆத்ம வைலக்ஷண்ய**த்தை அறிந்தது; |
| | -தவறு இருப்பினும்/ இல்லாவிடினும், 'அதைச் **சொல்லி**, பாபத்தை வாங்கிக் கொள்கிறார்களே !' என அவர்பால் **க்ருபை**கொள்ளல்; | -எல்லா வஸ்துக்களிடத்திலும் **க்ருபை** வேணுமென்ற ஞானம் பெற்றது; |
| | -நாம் அநுஸந்திப்பதற்காக, **நிர்வேதகாரிகை**யில் பூர்வர்கள் தங்களிடம் தோஷமிருப்பதாக பாசுரமிட்டதை நாம் மறந்தநிலையில் 'பிறர் **நினைவூட்டுகின்றனரே**' என அவர்பால் நன்றியறிதல்; | -அவர் சொல்லும் தோஷங்கள் நம் **ஆகிஞ்சன்ய**த்தை உறுதிப்படுத்துவது; |
| | -நம் தீவினையை ஒட்டி, பிறரைக் கருவியாக்கி, லீலாரஸனான **ஈச்வரன்தான் பரிபவிக்கிறான்** எனத்தெளிந்து, அவர்கள்பால் மன விகாரமின்மை; | -**பகவானின் விருப்பப் படி பரிமாற** நிற்கும் நாம், அவனுக்கே *சேஷ*னாவது |
| | -அநுபவித்தே கழிக்கவேண்டிய 'ஒப்புக் கொண்ட பாபத்தின்' ஒரு பகுதி அழிகிறது என **மகிழ்தல்** | -ஈச்வரனின் செயல் யாவும் நம் **ஹிதத்**துக்குத்தானே ! |

| | | |
|---|---|---|
| *உபாய நிஷ்டை* :<br>'மாமேகம் *சரணம்* வ்ரஜ' என்ற விதியும்<br>'ப்ரபத்யே' என்ற செயலும், 'நம:' என்றதில் குறிப்பும் | -**ஈச்வரனே** ரக்ஷகன் என்றிருத்தல்;<br>-மரணமானால் மோக்ஷம்வேண்டி ப்ரபத்தி செய்த பிறகு, மரணத்துக்கு **அஞ்சாமை**;<br>-காக்கும் பரத்தை பகவானிடம் சேர்த்த **தேற்றத்தோடு** இருத்தல்;<br>-பரந்யாஸத்தை பகவானே செய்விக்கிறான் என்ற புத்தியுடன் **செயலைமட்டும் செய்தல்**;<br>-*பல*மான அநிஷ்ட நிவ்ருத்தியும்/ இஷ்ட ப்ராப்தியும் **பகவானே** அளிக்கிறான் என்றறிதல் | -தானோ/மற்றவரோ **தஞ்சமாகார்** என்றறிவது;<br>-விரும்பியது கிடைப்பதால் **மகிழ்வது**;<br>-*நிச்சய*ம் காப்பானென்ற **மஹாவிச்வாஸ**முடைமை;<br>-கர்த்ருத்வ த்யாகத்தில் தெளிவுடைமை;<br>-*பல* **த்யாக**த்தில் தெளிவு உடைமை |
| ***புருஷார்த்த நிஷ்டை***:-<br>'ஆய/ நம:/ அஹம்.. மோக்ஷயிஷ்யாமி'யில் | -தேஹயாத்ரைக்கு விசார**மற்றி**ருத்தல்;<br>-ஸுக/ துக்கம் **கர்மாதீனம்** என்றிருத்தல்;<br>-பகவானையடைவதில் **த்வரை**யோடிருத்தல். | -ப்ராரப்த கர்மம் அநுபவிக்க **ஒப்புக் கொண்ட**தாலும் கடன் கழிவதாலும்;<br>-பெரும் குற்றேவல் கிடைக்கப்போவதால் |

**நிஷ்டையால் ப்ரயோஜனம்** : - **பாகவதாபசார**த்திலும்/ **கைங்கர்ய**ம் **ஆகாத** *பல*னிலும் மனது செல்லாது;

-**பாக்ய** வி*சேஷ*த்தால் பூமியிலேயே நித்யஸூரி (நிலத்தேவர்) ஆவோம்.



## 15. உத்தர க்ருத்யாதிகாரம்
## "கடன்கள் கழற்றிய" அடிமை

***உத்த்ர க்ருத்யங்களின் ஸ்வரூபம் :***

1.முக்தரின் கைங்கர்ய பரம்பரைபோல் ஸ்வாதுதமமும், ஸ்வயம் ப்ரயோஜனமும் ஆனவை;

2.*சாஸ்த்ர*த்தில் வரையறுக்கப்பட்ட கால வி*சேஷ*ங்களை ஒட்டியவை;

3.அடுத்த ஸேவைசெய்யவேண்டி, முன்னதை முடிக்கும்படிக்கு சங்கிலி துவக்கானவை;

4.*சேஷி*யான ஈச்வரனின் ப்ரீதிக்குக் காரணமும்/ கார்யமுமாய் (புருஷார்த்தமாய்) இருப்பவை;

5.ப்ரபந்நனின் ஸ்வரூபத்துக்குத் தகுந்த 'காலக்கழிவுச் செயல்'களாய் நிற்பவை.

***ப்ரபந்நனின் செயல்கள் :***

"*சரீராதி*களோடு தன் ஸம்பந்தம், **பகவத்** கைங்கர்யம் செய்யப் பயன்படும் அளவுக்கேயன்றி, ஸ்வாமித்வ உரிமையால் அல்ல" என்ற தன் நிஷ்டைக்குப் பொருத்த மான எண்ணத்துடன் :-

1) ரஹஸ்யார்த்தங்களை, ஈச்வரனின் **அவதாரமேயான ஆசார்யர்களிடம் முறைப்படி** கேட்கவேண்டும். இவ்வித நிஷ்டையுடையாரோடு பழகி, அவர்கள் அநுஷ்டாநத்தில் தனக்கு ஏற்றதை ஏற்கவேண்டும். *'க்ருதக்ருத்யராய் பலன் நிச்சயமாகிவிட்டதால், இனி எப்படியும் இருக்கலாம்'* என்ற **அசட்டை** கூடாது.

2) ஒருபோதும் தன் ஆகிஞ்சன்யத்தை மறக்காமல், **கார்ப்பண்யத்துடன்** இருக்க வேண்டும்.

3) கைங்கர்யத்தில் இதுவரை இழந்ததையேநினைத்து மனம்தளர்ந்துவிடாமல், இனி **'ஸாத்விக ஆஹாரம்/ ஸேவை/ *சாஸ்த்ர* பரிசீலனம்'** இவைகளில் மூண்டு, விஷயங் கள்பால் இந்த்ரியங்களுக்குள்ள 'பட்டிபுக்க' **வாஸனைகளை மாற்றுவிக்க** வேண்டும்.

4) ஆஜ்ஞா-அநுஜ்ஞா கைங்கர்யங்களை ***சாஸ்த்ர*முறைப்படி உகந்து/ அர்ச்சாவதார** த்தினிடம்/ 'முறையாக ஸம்பாதித்த' த்ரவ்யங்களைக்கொண்டு/ **கடமையாக எண்ணி/ பாகவத கைங்கர்யம் வரையாக**ச்செய்ய வேணும்; இதற்கு **ஸதாசார்ய ஸம்பந்தமே** காரணமாவதால், அவர்கள்பால் **நன்றியறி**தல் வேண்டும்;

இவை எல்லாவற்றுக்கும் முக்கிய காரணமான **ஈச்வரனின் ஸஹஜ காருண்ய**த்தை நினைத்து, அவனிடம் நன்றியறிதலோடு இருக்கவேண்டும்.

***உத்தரக்ருத்யத்தில் உள்ளம்/உரை/செயலால் கொள்ள-விலக்கத் தக்கவையும், காரணமும்***

| *கரணங்கள்* | | *அதற்குக் காரணம்* |
|---|---|---|
| | கொள்ளத்தக்கவை | |
| மனஸ் | குருவின் முதற்கடாக்ஷம் முதலான உபகாரத்தை நினைப்பது | 'செய்நன்றி கொன்றவன்' ஆகாமைக்காக |
| வாக்கு | த்வயத்தை அநுஸந்திப்பது | உபாய நிஷ்டையை மறவாமைக்காக |
| மனோ/ வாக்/ காயம் | பகவத் கைங்கர்யத்தின் எல்லை நில-மான **பாகவத கைங்கர்யம்** | புருஷார்த்தம் நசித்தோ/ குறைந்தோ போகாமைக்காக |
| | **விலக்கத்தக்கவை** | |
| மனஸ் | உலக இன்பங்களில் ஆசை | புருஷார்த்த ருசி குறைபடாதிருக்க |
| வாக்கு | தன்னைப்பற்றி உயர்வாகச்சொல்வது | கார்ப்பண்யம் குலையாதிருக்க |
| மனோ/ வாக்/ காயம் | **ப்ரஹ்மவித்துக்களிடம் அபசாரம்** | பகவான் திருவுள்ளம் புண்படாமலிருக்க |

***உத்தரக்ருத்யத்தை ரஹஸ்யங்களில் அநுபவிக்கும் இடங்கள் :***

-மந்த்ர த்ரயத்தில். *பல*ங்களைக் காட்டும் இடங்களான "நாராயண பதங்களின் மேலுள்ள 'ஆய' உருபு; ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' ஆகியவைகளில் அநுஸந்திக்க ப்ராப்தம்.



## 16. புருஷார்த்த காஷ்டாதிகாரம்

### நல்லடியார்க்கு ஆதரம்மிக்க அடிமை

*சேஷம்* = பிறர்க்கு அதிசயம் உண்டுபண்ணும் நோக்கோடு கொள்ளப்படும் பொருள்.

:- பிரிவு
- ***அசித்து*** *சேஷ*மாவது, பகவானுக்கு ***சரீரமாய்*** பெருமை சேர்ப்பது;
- **சித்து** *சேஷ*னாவது, பகவானுக்கு தான் ***சரீர*மாயிருப்பதை அறிந்து** பெருமை சேர்ப்பதால்; ஆக, **தாஸனாகி கைங்கர்யம்** செய்வான்.

| பகவத்கைங்கர்யம் | நித்ய/ முக்தர் | பத்தர் | |
|---|---|---|---|
| பண்ணுவது | *ஈச்வர* எண்ணத்தை நேராகவே அறிந்து | *சாஸ்த்ர*த்திற்கு விரோதமான செயல் | ***சாஸ்த்ர*த்தையொட்டிச்** செய்யும் **பாகவத கைங்கர்யம்** |
| செய்யக் காரணம் | பகவான் *சேஷி*/ *சரீரி*யாவதால் | *சாஸிதா*வான *ஈச்வர*ன் *பல*னளிப்பதால் | *சேஷி*யின் 'இஷ்டப்படி விநியோகிக்கும்' தன்மையால் |
| அதனால் ஜீவனுக்கு ஏற்படுவது | *சேஷி*கொடுக்க போக ரஸம்/ விரும்பிய ஆநுஷங்கிக *பல*ன் | நரகம் அடைவது வரையிலான அநர்த்தம் | *சேஷி*யே 'உதாரர்' எனக்கொண்டாடும் நிலை/ ஆநுஷங்கிகமாகத் தான் விரும்பிய *பல*ன் |
| *ஈச்வர*னுக்கு | **போக ரஸம்** | *லீலா* ரஸம் | *சேஷிக்கு* **போக ரஸம்** |

பகவத் கைங்கர்யமான புருஷார்த்தம், **பாகவத கைங்கர்யம்** வரையில் பெருகுவது

| புருஷ வகை | | ஆவதின் காரணம் | பெறும் பயன் |
|---|---|---|---|
| பகவான் | -*ஸாக்ஷாத்சேஷி* | - ஸ்வத: *சேஷி*யாய் இருப்பதால் | -ஸ்வரூபம் பெறுகை |
| | -*ஸத்வாரக சேஷி* | - பாகவதர்க்கு ஆத்மாவாவதால் | -ஸ்வரூபம் பெறுகை |
| பாகவதர் | -*ஸத்வாரக சேஷி* | -பகவான்தானே *சேஷி*யாக்குவதால் | -புருஷார்த காஷ்டை |
| | -*அத்வாரக சேஷி* | -அவர் குணங்களே அடிமையாக்குவதால் | -புருஷார்த காஷ்டை |
| பாகவதர் பெறுகை | நிருபாதிக*சேஷன்* | - இயற்கையாய் முக்ததசையிலும் உள்ளதால் | -ஸ்வரூபம் பெறுகை |
| | -ஔபாதிக *சேஷன்* | - பகவச்சேஷபூதர் என்ற ஸம்பந்த அறிவுடன் மற்ற பாகவதர்க்குப் பெருமை சேர்ப்பதால் | -**கோதற்ற புருஷார்த காஷ்டை** பெறுகை |

## விசேஷ விஷயங்கள்

1.குற்றங்களேயில்லாத பரமைகாந்தி/ பாகவதரின் உகப்பே ஸ்வயம் ப்ரயோஜநமாக எப்போதும் விரும்பவேணும்.

2.தவிர்க்கவேண்டிய குற்றங்கள் :- a) பகவத்-பாகவதாபசாரத்தில் ஈடுபடுதல் (உத்தர க்ருத்யம்); b) மஹா விச்வாஸ விரோதிகளான ஐவகை ஸந்தேஹம் கொள்கை (பரிகர விபாகம்); c) இதர தேவதைகளின் ஸம்பந்தம் (ப்ரபத்தி யோக்யாதிகாரம்); d) பகவானுக்கு அதீனமான தன் போகத்தில் ஸ்வாதீன-புத்தியுடைமை / ஸ்வார்த்த-புத்தியுடைமை (முமுக்ஷுத்வாதிகாரம்)



'அடியர்க்கு என்னை ஆட்படுத்த விமலன்'
நம்பெருமாள் - ஸ்ரீரங்கம்

## *17. சாஸ்த்ரீய நியமனாதிகாரம்*

*"மேதினியில் இருக்கின்றோம் விதியினாலே"*

***சாஸ்த்ரம் எதற்காக ?***

"மரணமானால் வைகுந்தம் கொடுக்கும்'படி எம்பெருமானை வேண்டிய க்ருதக்ருத்யன், அதுவரை இருக்க வேண்டியது அஜ்ஞான இருள் மண்டும் இவ்வுலகில்தான். ஆக, எம்பெருமான் திருவுள்ளம் அறிந்து/ நடந்து கோதற்ற புருஷார்த்தகாஷ்டை பெற, *சாஸ்த்ர*மெனும் கைவிளக்கு தேவை.

**ஸ்ரீ பாஷ்யகாரரின் உபதேசமே** நமக்குக் கைவிளக்கு. அது காட்டும் வழி :

1.ஆத்ம யாத்ரை, பகவததீநமாகையால் கரையவேண்டா; கரைந்தால், 'ஆத்மாவைக் காக்கும் பரத்தை பகவானிடம் ஸமர்ப்பித்தது பொய்யாம். தேஹயாத்ரை கர்மாதீநமாகையால் கரையவேண்டா; கரைந்தால், 'தான் (மரணம்வரை கர்மவினையை அநுபவிக்க) ஒப்புக்கொண்டதற்கு' விருத்தமாகி, நாஸ்திகனாம்.

2.தன் *சக்தி*க்குத் தகுந்தவாறு செய்யவேண்டிய கைங்கர்யங்கள் :

-ஸ்ரீபாஷ்யத்தை ஸதாசார்யரிடம் வாசித்தல்/ ப்ரவர்த்திப்பித்தல் *(சக்தியில்லையேல்)*

-அருளிச்செயல்களை வாசித்தல்/ ப்ரவர்த்திப்பித்தல் *(அதற்கு சக்தியில்லையேல்)*

-திவ்யதேச எம்பெருமானுக்கு நைவேத்யம்/ சந்தன-வஸ்த்ர-ஆபரண-திருவிளக்கு-திருமாலை சாத்துதல் *(அதற்கு சக்தியில்லையேல்)*

-த்வயத்தை அர்த்தத்தோடு அநுஸந்தித்தல் *(அதற்கு சக்தியில்லையேல்)*

-ஒரு வைஷ்ணவன், "நம்மவன்" என்று அபிமாநிக்கும்படி, அவர்க்கு பவ்யனாயிருத்தல்

3. ஸ்ரீவைஷ்ணவரைக்கண்டால் – ஆதரித்து, *சந்தன*ம்-பூ-நிலவு-தென்றல் கண்டது போல் **மகிழவேண்டும்**;

ஸ்ரீவைஷ்ணவரை *அநாதரித்தால்*, எம்பெருமான் திருவுள்ளம் **சீறும்.**

-பகவத்வேஷிகளைக் கண்டால் பாம்பு-தீ போல் **அஞ்சவேண்டும்**;

பகவத்வேஷிகளை ஆதரித்தால், எம்பெருமான் திருவுள்ளம் **வெறுத்திருக்கும்.**

-ஸம்ஸாரிகளை, கல்-கட்டை கண்டதுபோல் **அநாதரித்து** நிற்க வேண்டும்;

ஸம்ஸாரிகளை ஆதரித்தால், 'இவன் ஞானம் பயன்படாமல்போகிறதே' என **பகவான் அநாதரிப்பான்.**

-நல்வழிக்கு திரும்புவார்களேயானால், பகவத்வேஷிகளுக்கும் / ஸம்ஸாரிகளுக்கும் ஞானம் உண்டாக்கவும்; திருந்தாதவர்பால் 'ஐயோ'என க்ருபைபண்ணவும் ப்ராப்தம்.

| சாஸ்த்ரத்தை விட்டு நழுவுவதால் அபாயம் | ஒட்டி ஒழுகுவதால் பயன் |
|---|---|
| பகவத் அப்ரீதியால் அநிஷ்டங்கள் ஏற்படும்; ஸத்வ ப்ரக்ருதிக்கு இதை விட மேலான நரகமில்லை; இதைப்போக்க ப்ராயச்சித்த ப்ரபத்தி செய்யவேணும்; தவறினால் லகு-தண்டனை நிச்சயம். | -உபாயம் செய்யாதவரை, செய்யத்தூண்டும்; -மந்த விச்வாஸிக்கு, மஹாவிச்வாஸம் ஊட்டும்; - விரோதிகளை நீக்கி உபாஸகனை, பகவத் ப்ரீதிக்கு பாத்ரமாக்கும்; -ப்ரபந்நனுக்கு, கட்டளை மீறலால் பகவத் அப்ரீதி வராமல் காத்து, ப்ரீதிக்கு பாத்ரமாக்கும் |

***மந்த்ரங்களில் இவைகளைக் குறித்த இடங்கள் :***

-விரோதி நிவ்ருத்தியைக் குறிக்கும் " நம: / ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" ஆகிய இடங்கள்.

## விசேஷ விஷயங்கள்

வேதம்/ ஸ்ம்ருதி/ முன்னோர் அநுஷ்டானம்/ தூய மனதில் ஏற்படும் ஸங்கல்பம்/ தர்மத்தை ஒட்டிய குலம்-சாகை-தேசம் முதலிய கட்டுப்பாடுகள்/ பெரியோர்களின் நியமனங்கள்/ சகுனம்/ ஸ்வப்நம் முதலியவைகளும், எம்பெருமான் திருவுள்ளத்தை நாம் அறியும் ஸாதநங்களாகும்.



'எத்வேத்ர சிகர ஸ்பந்தே விச்வமேதத் வ்யவஸ்திதம்'
விச்வக்ஸேனர் - ஸ்வாதிபீடம்

# 18. அபராத பரிஹாராதிகாரம்

## "மாளாத வினையனைத்தும் மாளும்" வகை

பாபங்களும்/ அவைகள் ப்ரபந்நனுக்குக் கழியும் ▼ வகைகளும்

| பாபங்கள் / கழியும் வகை | முன் செய்த பாபங்கள் (ப்ரபத்திக்கு முன் செய்தது) | பின் நேரும் பாபங்கள் (ப்ரபத்திக்குப் பிறகு நேர்வது) |
|---|---|---|
| 1.1 பக்தி/ப்ரபத்தி செய்யும் முதல் க்ஷணத்தில் | ஸஞ்சிதம் (பலன் கொடுக்க தொடங்காதவை) ▼ ; ப்ராரப்தம் (தொடங்கியவை) | |
| 1.2 ப்ரபத்தி செய்யும் முதல் க்ஷணத்தில் | அநப்யுபகதம் (ஒப்புக்கொள்ளதவை) ▼ ; (அநுபவிக்க) அப்யுபகதம் (ஒப்புக்கொண்டவை) விளைவுகள் | |
| 2. அவ்வப்போது செய்யும் உசித ப்ராயச்சித்தாதிகளால் | - தத்வ-ஹித-திரோதாநம் (தத்வ-உபாய அறிவை மறைத்தல்)<br>-கர்மாந்தர அநர்ஹதா ஆபாதநம் (வேறு கர்மத்தில் இயலாமை) ▼ | |
| 3.மோக்ஷார்த்த ப்ரபத்தியில் சேர்த்து செய்தாலோ / பிறகு தனியாகச் செய்தாலோ | | (ப்ரத்யவாய ஜநகத்வம்)பாபாரம்பக பாபா: (பாபங்களை விளைவிக்கும் பாபம்) ▼<br>(இருப்பினும் தேச-கால வைகுண்யத்தால் விளையலாம்) |
| 4. அச்லேஷமாக (ஒட்டாமல்) கழியும் | | - ஆபத்தில் அறிந்து செய்வது<br>- ப்ராமாதிகமாக அறியாமல் செய்வது<br>- மூர்ச்சை/ ஸ்வப்ந/ தூக்கங்களில் செய்வது ▼ |
| 5 புந: ப்ரபதநத்தால் | | அநாபத்தில் அறிந்து ▼ |
| 6. புந:ப்ரபதநம் செய்யாதவனுக்கு லகு தண்டனை அநுபவித்து | | இச்சரீரம் முடிவதற்குள் கழியும் ▼ |

## விசேஷ விஷயங்கள்

-அபராதங்கள் நேர்வதற்குக் காரணம் : அசித்தின் தன்மையான ஜடத்வ விகாராதிகளோ/ ஈச்வர ஸ்வபாவமான ஸ்வாதந்த்ர்யாதிகளோ, தனக்கு இருப்பதாக ஜீவன் ப்ரமிக்கும் அவிவேகம்; **இதற்குக் காரணம் பாபாரம்பக பாபத்தைப் *பல*னாகக் கொடுக்கும் பூர்வாகம்.** இதற்கு அஞ்சுபவன், இதற்கும் சேர்த்து முதலிலேயோ/ பிறகு தனியாகவோ ப்ராயச்சித்தம் செய்யவேணும்.

-புத்திபூர்வ உத்தராகத்துக்கு ப்ராயச்சித்தம் பண்ணாதபோது தண்டனை உண்டு என்றாலும், 'மறு-பிறவி/ நரகமடைதல்' கிடையாதபோதும் பாகவதாபசாரம் நேராமல் விழிப்புடன் நடக்கவேணும்.

-எல்லா பாபங்களும் - பச்சாதாபம்/ செய்வதை நிறுத்திவிடுவது/ ப்ராயச்சித்தம் செய்ய முற்படுவது/ செய்து முடிப்பது என்ற 4 முறைகளால் – கால்/கால் பங்காக - அழிந்துபோகின்றன.

***சில ஸந்தேஹங்களும், ஸமாதானங்களும் :***

| *ஸந்தேஹங்கள்* | *ஸமாதானங்கள்* |
|---|---|
| *1.ப்ரபந்நனின் புத்திபூர்வ உத்தராகத்தையும் பகவான் க்ஷமிக்கிறான் என்று சிலர் சொல்கிறார்களே? அப்படியானால், அதற்கான ப்ராயச்சித்தமோ/ தண்டனையோ ஏது?* | இங்கு க்ஷமிக்கிறான் என்றதற்கு,'க்ஷமைகொள்ளப்பண்ணு-விக்கிறான்(அல்லது) க்ஷமையினால் பெரிய தண்டனையில் -லாமல் செய்கிறான்' என்று பொருள். இப்படிச்செய்வது முன் செய்த ப்ரபத்தியால் வசீக்ருதனான பகவானின் **க்ஷமா பேத**மாகஎண்ணி, அவனிடம் **க்ருதஜ்ஞதை** வேண்டுமெனபொருள். |
| *2.ராக்ஷஸிகள் அறிந்து செய்த பாபத்துக்கு பலனின்றி, த்ரிஜடை சரணாகதியினாலேயே பிராட்டி மன்னித்தாரே?* | இங்கும், 'திருவடி நலியப்புகுகிறான்' என்ற பயம் மூலம் சிறுதண்டனையும், பிராட்டியினாலே நலிவுவிலகி க்ஷமையும் ஏற்பட்டதே! இது வாளாலே ஓங்கி, விடுமாப் போலாகும். |
| *3. புத்திபூர்வ உத்தராகம் ஒட்டாது; அதற்காக க்ஷமை கொள்ளவேண்டா; கொள்ளாவிடினும், தண்டனை ஏது-மில்லை; இதனால் தாமதம் பொறுக்காதவர்க்கு மோக்ஷம் தாமதிக்காது; முன் நற்பயனாலே இங்கு வரும் கைங்கர்யத்துக்கு குறை/ தடை ஏற்படாது.* | *புத்திபூர்வ உத்தராகம் ஒட்டாது* என்பதற்கு விசேஷ வசநம் ஏதுமில்லை. இங்கு ஸந்தேஹப்பட்டதெல்லாம் சரண்ய/ சரணாகதியினுடைய பெருமையைச்சொல்லும் அர்த்த வாதமே; இப்படி ஒப்புக்கொள்ளாவிட்டால் ப்ரபந்நரான பூர்வர்களின் அநுஷ்டாநத்துக்கும், ப்ரபந்நர்க்கான ப்ராயச்சித்தம் விதிக்கும் சாஸ்த்ரத்துக்கும், விளம்ப அக்ஷமர்க்கு விளம்பம் சொல்லும் ப்ரமாணங்களுக்கும் விரோதம் வரும். |
| *4.ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி என்றதால் ப்ராயச்சித்த/தண்டனை ஏது?* | இது பொதுச் சொல்; *'ப்ராயச்சித்திரியம் ஸாத்ர யத்புந: சரணம் வ்ரஜேத்'* என்று விசேஷிக்கையால் இது தள்ளப் படுகிறது |
| *5.மறுமுறை சரணாகதி என்பது புத்திபூர்வ உத்தராகத்துக்கும் சேர்த்து, அடியிலேயே ப்ரபத்தி செய்யாதார்க்குச் சொன்னது !* | *பின்பாபம் கழியவும் ப்ரபத்தி செய்யலாம்* என விதிக்கும் தனி வசநம் ஏதுமில்லை; *ஒருவேளை இருந்தால்*, இந்த செட்டை (ஸாமர்த்யத்தை) ஒருவரும் விடுவாரில்லையாகையால் புந:ப்ரபத்தி விஷயம், வீணே; மேலும் 4-ல் சொன்னபடி ஸாமாந்ய வசநத்தால் விசேஷ வசந ப்ரமாண்யத்தைத் தள்ளமுடியாது |
| *6.விசேஷவசனமில்லாவிட்டாலும் ஸ்வேச்சையால் புத்தி பூர்வ உத்தராகத்துக்கும் சேர்த்து, அடியிலே ப்ரபத்தி பண்ணாலோ?* | உபாஸநத்திலும், அங்க ப்ரபத்தியிலும்கூட அடியிலே புத்தி பூர்வ உத்தராகத்தையும் சேர்ப்பதில்லையே! *ஸரி சேர்க்கலா*மென்றால் பாஷ்யாதிகள்/ உஷஸ்தி முதலானோர் அநுஷ்டானத்துக்கு விரோதிக்கும். ந்யாய சாஸ்த்ரப்படி "நிமித்தம் **உதித்தாலல்லது**, நைமித்திகம் வாராது" (பாபம் உதிப்பதற்கு முன்பே, அதைப்போக்க ப்ராயச்சித்தம் செய்வது பொருந்தாது) |

*****************

## 19. ஸ்தாந விசேஷாதிகாரம்

*"வானாடுகந்தவர்*

*வையத்திருப்பிடம் நன்னிலம்"*

ஆர்யாவர்த்தமே, (இமய-விந்த்ய மலைகளுக்கு இடைப்பட்ட பகுதி) அபராதங்கள் கலவாத, ஸ்வயம் ப்ரயோஜநமான பகவத்-பாகவத கைங்கர்யரூபகர்மாக்கள் செய்ய ஏற்ற இடமாக *சாஸ்த்ர*ங்கள் சொல்கின்றன. ஆனால், கலியின் ஸ்வபாவத்தால் ம்லேச்சர்களின் வசப்பட்டு அப்பகுதிகளில் வர்ண-தர்மங்கள் கலங்கியிருக்கின்றன; ஆகவே, ப்ரபந்நன் பகவத்-பாகவத கைங்கர்யங்களை ஸரிவர அநுஷ்டிக்க அவைகள் ஏற்றதாக இல்லை.

-ஆகையால், எம்பெருமானின் திருவாராதந-கைங்கர்யத்துக்கு அநுகூலமாயும்/ பாகவதர்களின் திருவுள்ளத்துக்கு உகப்பாயும், வர்ண தர்மங்கள் நிலைபெற்றதாயும், **மிகவும் முக்கியமாக**, வேறு தேவதையினிடமோ/ *பல*த்திலோ நாட்டமில்லாத ப்ரபந்நர்கள் இருப்பதுமான இடங்களே, இந்த க்ருதக்ருத்யனுக்கு தகுந்த வாஸ ஸ்தலங்களாம்.

-அவைகளில், ஸ்வயம் வ்யக்த/ ஸைத்த/ வைஷ்ணவ க்ஷேத்ரங்கள் மிகவும் உயர்ந்தவை.

-அவைகளிலும் **ஆழ்வார்-ஆசார்யர்கள் உகந்ததாயும்/ தனக்கு ஸௌகர்யமாயும் இருப்பவையே வஸிப்பதற்கு உசிதம்.** இக்கருத்தைக் கூறும் ஸ்வாமி தே*சி*கனின்

பாசுரம் : தேனார் கமலத் திருமகள்நாதன் திகழ்ந்து உறையும்
வானாடு உகந்தவர் வையத்திருப்பிடம் வன்தரும
கானார் இமயமும் கங்கையும் காவிரியும் கடலும்
நானாநகரமும் நாகமும் கூடிய நன்னிலமே.

### விசேஷ விஷயங்கள்

-இக்காலத்துக்கு, த்ராவிட தேசத்திலுள்ள புண்ய நதிக்கரைகளே வாஸத்திற்கு உகந்தவை.

-இப்படியானபோதிலும், 'ப்ரபந்நனுக்கு எந்த இடத்தில் ப்ராண-வியோகம் ஏற்பட்டாலும், மோக்ஷம் பெறுவதற்குத் தடையில்லை' என்று ப்ரமாணங்கள் சொல்வது, ப்ரபத்தியின் பலனைச் சொல்ல வந்ததேதவிர. அதை வைத்து, *ப்ரபந்நன் வாஸ ஸ்தாநமாக எதை வேண்டுமானாலும் அமைத்துக் கொள்ளலாம்* என பொருள் கொள்ளக்கூடாது.

*************

## 20. நிர்யாணாதிகாரம்

### "உடலச்சிறை வெட்டிவிட்டு வழிப்படுத்தும் வகை"

ப்ரபந்நன் சரீரத்தைவிடும் நாள்வரை, பாரமைகாந்த்யத்துக்குத் தகுந்த செயல் களைச் செய்துவரும்போது ப்ராரப்தஸுக்ருதவிசேஷத்தாலும் ப்ரபத்திஸங்கல்ப விசேஷத்தாலும் பெரும்பாலும் அபராதங்கள் நேராது; இருந்தாலும், ப்ராரப்தபாப விசேஷத்தினால், நிர்யாணம் தாமதிக்கலாம். அவ்வித பாபங்களின் விதங்கள்,விளைவு, எதுவரை மோக்ஷம் தாமதிக்கும், அவை கழியும்வகைகள் ஆகியவை இவ்வாறு:

| பாபம்/ விளைவு | அவதி | விவரணம் |
|---|---|---|
| 1.அஹங்கார-மமகாரம் அதனால் அபசாரம் | விவேகாவதி<br>க்ஷாமணாவதி<br>-சிக்ஷாவதி | -விவேகத்தினால் உண்டாகும் தெளிவால் கழியும்.<br>-மோக்ஷம்பெற காலம்குறித்த ப்ரபந்நனுக்கு, பரிஹாரம் செய்தாலோ அல்லது தண்டனை அநுபவித்தோ கழிந்து, கோரிய காலத்திலே மோக்ஷம் கிட்டும்.<br>காலம் குறிக்காதவனுக்கு, பரிஹாரம் செய்தாலோ அல்லது தண்டனையநுபவித்தோகழிந்து, தாமதித்து மோக்ஷம் கிட்டும். |
| 2.ப்ரயோஜனாந்தரம்<br>அதனால்<br>தேவதாந்தர ஸ்பர்சம் | வைராக்யாவதி<br>லஜ்ஜாவதி | -காலமும் குறித்து- வேறு பலனையும் வேண்டியவனை பகவான் திருத்தும் வழி : 1) பலன் கொடுக்காமல் உபேக்ஷிப்பான் 2)பல- அல்பாதிகளைஉணர்வித்து, நாட்டத்தை நசிப்பான்; 3)ஸௌபரி/குசேலாதிகளுக்குப்போல், போகங்களைக் கொடுத்து - பச்சாதாபம் பிறப்பித்து, பிறகு விடச்செய்வான்.<br>-காலம் குறிக்காதவனுக்கு, போகம் அநுபவித்தபின் விளம்பித்து வைராக்யம் பிறக்கச் செய்வான்.<br>-பரமைகாந்திகளோடு சேர்த்துவைத்து, வ்யபிசாரம் தீர்ப்பான்;<br>-பின்னும் நிலை நின்றால், ('ப்ரமாணத்வய விரோதேஸதி விஷயவ்யவஸ்தாபனம்' என்ற அர்த்தாபத்தி பலப்படி) உபாய ஸ்பர்சம் இல்லையென்றாவதால் மோக்ஷம் கிட்டாததோடு நரகமும் உண்டு; ஆனால் செய்த உபாயத்துக்கு என்றேனும் ஒரு நாள் உபாயபூர்த்தி/ பலன் உண்டு. |
| 3.புத்திதௌர்பல்யம்<br>அதனால்<br>உபாயாந்தரப்ரத்யாசை | மஹாவிச்வாஸ அவதி | -பொதுவாகப் பிறவாது; பிறந்தால் விச்வாஸமாந்த்யம்தான் காரணம். இதை பகவான் மஹாவிச்வாஸமாகத் திருத்தி பூர்ணப்ரபத்திநிஷ்டராக ஆக்குவான். |
| பாபம் செய்யாதவர்க்கு | -இச்சாவதி | -ப்ராரப்த ஸுக்ருதவிசேஷத்தாலோ ப்ரபத்திஸங்கல்ப விசேஷத்தாலோ நிரபராதகைங்கர்யம் செய்பவர்க்கு, தாமதமில்லை. |

மேலும், ஜீவன் உபாயம்செய்யத் தொடங்கியதுமுதல், ப்ராப்தி-விரோதியான உடலச்சிறையை வெட்டிவிடும் வரை, எம்பெருமான் செய்தருளும் உபகார-பரம்பரை இந்த அதிகாரத்தில் இவ்வாறு அடுக்கப்படுகிறது :

எம்பெருமான் காட்டிய வழியில் வெளியேறிய பிறகு, இந்த ஜீவனுக்கு அஜ்ஞானம் நீங்கி, **பகலான பரமபதம் செல்லும் வழியும் எப்போதும் ஒரே பகலாம்**

*(8/ 9-ல் சொன்ன வழி, உபாயம் செய்தவனுக்கும்/ செய்யாதவனுக்கும் பொதுவான உத்க்ராந்தியாகும்)*

11.ஜீவனை அர்ச்சிராதி மார்கத்துக்கு வழியான 101–வது (மேல்) நாடி (**ப்ரஹ்ம/ ஸுஷும்நா/ மூர்தந்ய நாடி**) யில் நுழைத்து, ஸூர்ய கிரணங்களைப் பிடிக்க வைத்து வெளியேற்றுகிறான்.

10.**ஸ்தூல சரீர**த்தைவிட்டு வெளியேற பல நாடிகள் உள்ளன; அவைகளில் ஸ்வர்காதிகளுக்கு மேலேசெல்லும் 100 நாடிகளிலோ/ நரகாதிகளுக்கு கீழே செல்லும் பல நாடிகளிலோ இந்த ஜீவன் போகாதபடி வழி விலக்குகிறான்.

9. கடைந்தெடுத்த தருணத்தில் ஜீவனுக்கு உண்டான சோர்வெல்லாம் நீங்கும்படி **ஹார்த**னான பகவான் தன் பக்கத்தில் வைத்துக் களைப்பாற்றி, பிறகு வெளியேறச் செய்கிறான்.

8. ஸமயம் வந்தவுடன் ஜீவனின் **இந்த்ரிய**ங்கள் பத்தையும் மனஸ்ஸோடும்; **மனஸ்**ஸை ப்ராணனோடும்; ப்ராணனோடு சேர்ந்த ஜீவனை **ஸ்தூல சரீர** முதுகின் நடுவிலுள்ள மூன்று நரம்புகளைக் கடைந்தெடுத்த பௌதிக ஸூக்ஷ்ம சரீரத்தோடு சேர்க்கிறான்.

7. தனியான நியமம் ஏதுமின்றி, சரீரம் விழும் ஸமயத்திலுள்ள ஏதேனும் ஒரு காரணத்தை வ்யாஜமாக்குகிறான்.

6. ஜீவன் சரீரத்தை விடுவதற்கென, சாஸ்த்ரங்கள் பொதுவாகச் சொன்ன தேச-கால நியமங்கள் ப்ரபந்நனுக்கு இல்லாதவாறு, தான் ஸங்கல்பித்த ஸமயத்திலேயே ஜீவனுடைய இச்சையைப் பூர்த்தி செய்கிறான்.

5. ப்ரபந்நனின் இசைவுப்படி இச்சரீர முடிவில் பரமபதம் தர நினைந்து, இவன் இசைந்த ப்ராரப்த கர்மத்தைத்தவிர மற்றவையை முன்பே கழித்ததால், மீதத்தை சரீரபாத ஸமயத்தில் இவனின் அநுகூல/ப்ரதிகூலர்க்கு பங்கிடுவது போல் செய்கிறான்.

4."இனிப்பிறவி வேண்டாம்; இப்போதே அழைத்துக்கொள்" என வேண்டும்படியான விரைவை உண்டாக்குகிறான்.

3. பரமபதம்பெற, ப்ரபந்நன் இசைந்த தாமதத்துக்கு வருந்தி, வேண்டினால் இப்போதே தர ஆவலோடு நிற்கின்றான்.

2. ப்ரபந்நனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் ரக்ஷிப்பதற்காகவும்/ அவர்களின் புத்திபூர்வ உத்தராகத்தைக் கழிப்பதற்காகவும், தக்க அநுக்ரஹ ஸங்கல்பத்தைப் பண்ணுகிறான்.

1.ப்ரபத்தி வாக்யாரம்ப க்ஷணத்திலேயே **ப்ராப்தி விரோதி**யான தன் நிக்ரஹஸங்கல்பத்தை விலக்குகிறான்.

## 21. கதி சிந்தனாதிகாரம்

## “வானேறும் வழிகண்டோம்”

ஒரு உபாயத்தைச் செய்வதற்கு முன், அதற்குத் தகுதி ஏற்படவேண்டுமானால், அதன் பலத்தைப் பெறுவதில் ஆசை இருப்பது மிகவும் அவச்யம். இந்த ஆசைதான் மோக்ஷபலவிஷயத்தில், அதன் பர்வாக்களை அநுஸந்திக்கவைக்கிறது. உபாயம் செய்த பிறகோவெனில், அப் பலன் கிடைக்கும் வரையிலும் பலனின் அதிசயத்தை நினைத்துக்கொண்டிருப்பது, அப் பலன்மீது நமக்கு இருக்கும் அன்பை மேலும் வளரச்செய்வதோடு, அதுவே ஒரு ஸ்வயம்ப்ரயோஜனமான அநுபவமாக அமைகிறது.

கீழே சொன்னதுபோல், உடலச்சிறையிலிருந்து வெளியேற்றப்பட்ட ஜீவனை, ப்ரஹ்மநாடியில் நுழைத்தது முதல் தன் தாளிணைக்கீழ் கொள்ளும் வரையில், எம்பெருமான் வழி நடத்திச்செல்லும் வகைகள் இந்த அதிகாரத்தில் **அநுபவமாக** இவ்வாறு ⇧ அநுஸந்திக்கப்படுகின்றன :

இந்நிலையில் ஜீவன், அனைத்து கர்ம-வாஸனா-ப்ரக்ருதி ஸம்பந்த நிவ்ருத்தியும் ஜ்ஞான ஸங்கோச/ அவித்யா நிவ்ருத்தியும் பெற்று நிஜஸ்வரூபம்தெளிந்து, எம்பெருமான் மனோரதத்துக்கு ஒக்க தான் ஆசைப்பட்ட கைங்கர்யங்களை எல்லாம், தன் ஆத்மா இருக்குமளவும் செய்துகொண்டு உகக்கிறான். இவனுடைய உகப்பாலே பகவானும் நிரதிசய ஆநந்தனாய் இருக்கிறான். **ஆக, ஜீவனுடைய *சேஷ* வ்ருத்தியானது ஸார்த்தகமாகிறது. *சேஷி*க்கு ஒரு அதிசயத்தைச் செய்பவன்தானே *சேஷ*ன் !**

6. இப்படி நடத்திச்சென்ற ஜீவனை, முன் இழப்பெல்லாம் தீரும்படி, தன்னை முழுவதும் அநுபவிக்க அளித்து, **போகஸாயுஜ்ய**த்திலே ஸஜாதீயரான நித்ய-முக்தர்களோடு வாசியறப் பரிமாறுகிறான்.

⇧ ⇧

5. இப்ப்ரபந்நனை, ஒவ்வொரு நித்யஸூரிகளின் திருமாளிகையிலும், அப்ராக்ருதமான ராஜோபசாரங்களை அநுபவிக்கப்பண்ணி, ஆநந்தமயமான மண்டபத்தில் நித்ய-முக்தர்களோடு சேர்க்கிறான்.

⇧

4. 500 திவ்ய அப்ரஸ்ஸுகளால் ப்ரஹ்மாலங்காரம் செய்வித்து ப்ரஹ்ம கந்த-ரஸ-தேஜஸ் பெற்ற ஜீவனை, நித்யஸூரிகளால் வரவேற்கச் செய்து, இந்த்ர-ப்ரஜாபதி (வாயிற்காப்போர்)கள் முன் நிறுத்துகிறான்.

⇧

3. அங்கு ஐரம்மதீயம், ஸோமஸவநம் என்ற ஸரஸ்/ அரசமரம் இவற்றை அநுபவிப்பிக்கிறான்.

⇧

2. முன்பு ஜீவன் காணவிரும்பிய ஸ்ரீவைகுண்டத்தில் நுழையும் முன்பு கடக்க வேண்டிய விரஜா நதியின் இக்கரையிலேயே ஸூக்ஷ்மசரீரத்தை விடப்பண்ணி தன் ஸங்கல்பத்தால் அக்கரை சேர்த்து அப்ராக்ருதமான சரீரம் பெறுவிக்கிறான்.

⇧

1. ப்ரஹ்மநாடி வழிசெல்லும் ஜீவனை அர்ச்சிராதிகதியின் அபிமாந தேவதைகளான அர்ச்சிஸ் முதலானோர் அளிக்கும் போகங்களை அநுபவிப்பிக்கிறான்.

## 22. பரிபூர்ண ப்ரஹ்மாநுபவாதிகாரம்

*'அந்தமிலாப் பேரின்பம் அருந்துதல்'*

*"குருக்கள் குரைகழற்கீழ் மகிழ்ந்தெழும் போகத்து மன்னுதல்"*

அடையவேண்டியவை(பரமபதம்) மூன்று. ப்ரஹ்மாநுபவத்தைப் பொருத்தவரை:

- நிரதிசய அநுகூலனாயிருப்பதால், குண-விக்ரஹ-விபூத்யாதிகளோடு ஈச்வரனும்;
- இந்த பகவதநுபவம் அங்கு சென்ற பிறகே உண்டாவதால், **ஸ்ரீவைகுண்டமும்**
– ப்ரஹ்மாநுபவத்துக்கு ஆச்ரயமாயும் பகவத்விபூதியிலே சேர்ந்ததாயும், ஜ்ஞானாநந்த மயனாயும் இருப்பதால், **முக்தாத்மாவும், பரமபத**மாகின்றன.

மோக்ஷம் அடைந்த ஜீவனுடைய **போகஸாயுஜ்ய** அநுபவமானது :

1.எல்லா இட-கால-நிலைகளிலும், கணக்கற்ற குண-விக்ரஹ-விபூதி-சேஷ்டிதங்களில் ஒன்றும் விடாத, எம்பெருமானை கைங்கர்யம் வரையில் முழுமையாக அநுபவிக்கும் நித்யமான நிரதிசய **போக**மாயிருக்கும்.

2. பகவத் கைங்கர்யமாக, ஜீவன் லீலாவிபூதியில் வந்தாலும் பரிபூர்ணத்வத்துக்கு குறைவில்லை.

3.ஈச்வரனுடைய லீலாவிபூதியையும் முக்தாத்மாவுக்கு **போக்ய**மாக ஆக்கும்.

4. பகவானுக்கும் – முக்தனான இந்த ஜீவனுக்கும் ஸமமாகவே இருக்கும். இந்த ஸாம்யத்தை வைத்து, ***ஜீவ-ப்ரஹ்ம ஐக்யமாக*** எண்ணிவிடக்கூடாது. ஏனெனில் :

-**ஈச்வர**னுக்கு ஜகத்காரணத்வ/ மோக்ஷப்ரதத்வ/ ஸர்வாதாரத்வ/ ஸர்வ நியந்த்ருத்வ/ ஸர்வ சேஷித்வ/ ஸர்வ சரீரித்வ/ ஸர்வ சப்தவாச்யத்வ/ ஸர்வ வேதவேத்யத்வ/ ஸர்வலோக சரண்யத்வ/ ஸர்வ முமுக்ஷு உபாஸ்யத்வ/ ஸர்வபல ப்ரதத்வ/ ஸர்வ வ்யாப்த ஜ்ஞானானந்த ஸ்வரூபத்வ/ லக்ஷ்மீ ஸஹாயத்வாதிகள் ப்ரதிநியதங்கள்.

-எதிர்த்தட்டான முக்தனுக்கு ஆதேயத்வ/ விதேயத்வ/ சேஷத்வ/ அணுத்வாதிகள் வ்யவஸ்திதங்கள்.

-மேலும், இதைச்சொல்லும் ஸாயுஜ்யம் என்பதற்கு, ஐக்யம் பொருளாகாது;

### விசேஷ விஷயங்கள்

1. ஸ்ரீவைகுண்டத்தை அடைந்த பிறகு, முக்தனான ஜீவன் ஸம்ஸாரத்துக்கு ஒருபோதும் திரும்பி வருதல் என்பது கிடையாது; ஏனென்றால் :

-இப்போதுள்ள ஜ்ஞானம், விச்சேத-ஸங்கோசங்களில்லாததால், '**அறியாமை**யினால் திரும்புவது' நேராது;

-முமுக்ஷுதசையில், அசித்மாத்ர/ அல்லது (கைவல்யத்தில்) சித்மாத்ர அநுபவம் மட்டுமே உண்டாவதால், அவைகளில் வைராக்யம் பிறக்கிறது; முக்ததசையிலோ, ப்ரஹ்மாத்மகமான **எல்லாவாற்றையும்** அநுபவிக்கமுடிகிறது; மேலும், இப்போது மலர்ந்த அறிவால், வேறு *பல*ன்களில் உள்ள தோஷமெல்லாம் நேராகவே தெரிகின் றன. ஆகையால் **தன்னிச்சை**யாக 'திரும்புவது' (ஆவ்ருத்தி) என்பது இல்லை;

-**ஈச்வர**னுடைய இச்சையினால் ஆவ்ருத்தி ஏற்படலாம் என்பதும் இல்லை; காரணம் : பகவானின் ஸங்கல்பங்களெல்லாம் *சாஸ்த்ர*ங்களின் துணையின்றி ப்ரத்யக்ஷமாகவே தெரிவதால், முக்தனுக்கு பகவானிடம் ப்ரீதியாக உருவெடுத்த ஜ்ஞானமானது நிரதிசய ப்ரீதிரூபமாக ஆகிறது; பகவானின் ப்ரீதியும், கட்டுக்கு அடங்காமல் கரைபுரண்டு, முக்தனோடுமட்டுமின்றி அவனுடன் ஸம்பந்தம் உடையவர்களிடமும், ஏறிப்பாயும்படி ஆகிறது. அப்படி நிற்கும் பகவான், முக்தனை ஒருபோதும் திருப்பியனுப்பமாட்டான்.

2. ப்ரக்ருதிமண்டலத்தில் பகவானுடைய பரிபூர்ண ஸம்பந்தம் இல்லாமையால் பத்தனுக்கு கர்மாநுகுணமாக, வஸ்துக்கள் ப்ரதிகூலமாயோ- அல்ப அநுகூலமாயோ தோற்றினாலும், நித்யவிபூதியில் முக்தனுக்கு இவையே நிரதிசய **போக்ய**மாகின்றன.

3. எம்பெருமானுக்கும்-முக்தாத்மாவுக்கும் விளையும் மோக்ஷாநந்தத்தைக் குறிப்பதாக வேதங்கள் சொல்லும் :

-**ஸாயுஜ்யம்** என்றால், அநுபவிக்கப்படும் **பொருளைப்பொறுத்தவரை** வாசி யில்லாமை ஆகும்;

-**ஸார்ஷ்டிதை** என்றால், இருவரின் **அநுபவ**த்தில் வித்யாஸம் இல்லாமை ஆகும்.

4. *முதலில் முக்தரானவர்க்கு, இப்போது முக்தராவாரைவிட ஆனந்தம் அதிகமா* என்றால், பிற்பட்டவர்க்குக் காலத்தினால் உண்டான குறைவேதவிர, ஆனந்த ஸ்வரூப த்தில் ஏதும் குறைவில்லை; அதாவது, **நாளிழவே போக்கிப் பொருளிழவு இல்லை.**

***மந்த்ரங்களில் இவைகளைக் குறித்த இடங்கள் :***

இப்படி ஸ்வேச்சா ஸித்தமான ஆநுகூல்யத்தை உடைய ப்ரகாரங்களோடுகூடின ஸ்ரீமந் நாராயணனே ப்ராப்யன் என்பதை, அஷ்டாக்ஷர-த்வயங்களில் சதுர்த்யந்த-பதங்களில் அநுஸந்திக்க ப்ராப்தம்.

<u>அர்த்தாநுசாஸந பாகத்தின் சுருக்கம்</u>

**"அநாதிகாலம் ஸம்ஸரித்துப்போந்த க்ஷேத்ரஜ்ஞன் அவஸர ப்ரதீக்ஷையான பகவத் க்ருபையாலே புரிந்து, ஸமீசீன சாஸ்த்ரமுகத்தாலே தத்வ-ஹித-புருஷார்த்த விசேஷங்களைத்தெளிந்து, முமுக்ஷுவாய், ஸ்வாதிகாராநுரூபமாயிருப்பதொரு உபாய விசேஷத்தை பரிக்ரஹித்து க்ருதக்ருத்யனாய், தன் நிஷ்டையைத்தெளிந்து, அதுக்கு அநுரூபமாக இங்கிருந்த நாள் யதாசாஸ்த்ரம் நிரபராதமாகப் பண்ணும் கைங்கர்யரூப**

புருஷார்த்தமிருக்கும்படியும், சரீராநந்தரம் அர்ச்சிராதிகதியாலே அப்ராக்ருத தேச விசேஷத்திலே சென்றால் இவனுக்கு அநவச்சின்ன பகவதநுபவ பரீவாஹமாக வரும் பரிபூர்ண கைங்கர்யரூப பரமபுருஷார்த்தஸித்தி இருக்கும்படியும் சொல்லப்பட்டன.”

இப்படிச் சுருக்கும் ஸ்வாமி தேசிகனுடைய காரிகை மிகவும் ரஸமானது :

1 2 3,4,5,6 7 8

ஸந்த்ருஷ்ட: ஸாரவாக்வித் ஸ்வபரநிசிததீ: ஸங்கஜித் நைகஸம்ஸ்த:

9 10 11 12 13

ஸ்பஷ்டோபாய: அதிகின்ந: ஸபரிகர பரந்யாஸ நிஷ்பன்னக்ருத்ய: |

14 15, 16 17 18 19

ஸ்வாவஸ்தார்ஹம் ஸபர்யாவிதிம் இஹ நியதம் வ்யாகஸம் க்வாபி பிப்ரத்

20, 21 22

நிர்முக்த-ஸ்தூல-ஸூக்ஷ்மப்ரக்ருதி: அநுபவதி அச்யுதம் நித்யம் எக: ||

[ச்லோகத்துக்கு மேலே குறியிட்டிருக்கும் எண்கள், க்ரந்த அதிகாரத்தின் எண்களைக் குறிப்பதாகும். அதிகாரத்தின் பொருளைச் சுருக்கிக் காட்டும் பதங்கள், எண்களால் சுட்டிக்காட்டப்பட்டன ]



பரமபதநாதன்

## *23. ஸித்தோபாய சோதநாதிகாரம்*

## *"திருநாரணனே மன்னிய வன்சரண்"*

*அர்த்தாநுசாஸந பாகத்தில் அறிந்துகொண்டதை மறுபடி அறியவேண்டியதன் அவச்யம் என்ன?* -கலக்கமின்றி, ஸூக்ஷ்மதம அர்த்தங்களை அறிகைக்காக;
-கலங்கியவர்களைத் தெளிவடைவிப்பதற்காக.

**ஸித்தோபாயமான பகவான் விஷயமான பிறர் கலக்கங்களும்/ நம் ஸமாதானங்களும்**

| கலக்கங்கள் | ஸமாதானங்கள் |
|---|---|
| எம்பெருமானின் ஸ்வாதந்த்ர்யம் மற்றும் ஸஹஜ காருண்யத்தைப் பற்றியது | |
| - *ஸ்வதந்த்ரனான எம்பெருமானால் சிக்ஷையாக அளிக்கப் பட்ட, இக்கலக்கங்கள் தெளிவுறுமா ?* | **தெளிவுறும்** – அதற்கான காரணங்கள் :- <br> -பிராட்டியிடம் ஜீவன் செய்த புருஷகார ப்ரபத்திக்கு, அவர் **'அஸ்து தே, தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே'** என்றருளும் திருமுகப் பாசுரம். <br> -நல்லாசிரியர்களின் அநுக்ரஹம். <br> -உயர்ந்த ஸம்ப்ரதாயத்தைப் பெறுகை. |
| *எம்பெருமான் இந்நாள் வரை நம்மை அநாதரித் ததற்கும், இன்று ரக்ஷிப் பதற்கும் அவனுடைய ஸ்வாதந்த்ர்யம் தானே காரணம் ?* | **இல்லை;** *ஸ்வாதந்த்ர்யத்தால் அநாதரிப்பதோ/காப்பதோ* செய்தால், 'தவறு செய்தவனாகிலும்/ செய்யாதவனாகிலும்' ஒன்றுபோல் ரக்ஷிப்பதாகஆகி, 'செய்தவன்'பால் **பக்ஷபா-தம் காட்டுபவன்** என்ற தோஷம் வரும்; இருவரையுமே காக் காமல்விட்டால், **தயையில்லாதவன்** என்ற தோஷம் தட்டும். ஆகையால், கர்மங்களின் அடிப்படையில் *பல*ன்கொடுக்கும் பகவான், உரிய ஸமயம்வந்தவுடன் **பத்த**னை ஒரு வ்யாஜ த்தை செய்யவைத்து, அது **காரண**மாக ரக்ஷிக்கிறான். |
| *உரிய ஸமயம் வருவது தான் காரணமென்றால், எம்பெருமான் ஸ்வாதந்த்ர்யம் வீணே!* | **இல்லை; வ்யாஜ**த்தை முன்னிட்டு, தான் நினைத்த காலத் தில் பத்த ஜீவனைக் காப்பாற்றும்போது, **'எவராலும் தடுக்க முடியாமைக்கு'**, இந்த ஸ்வாதந்த்ர்யம்தான் காரணம். |
| *வ்யாஜத்தையிட்டு காக்கிறானென்றால் காருண்யம் வீண்தானே* <br><br> *மேலும், காருண்யம் என்ற பரதுக்க துக்கித் வம் எப்படி பகவானுக்கு **போக்ய**மாக ஆகும் ?* | வ்யாஜமின்றிக் காத்தால், **பக்ஷபாதம் காட்டுபவனென்ற** தோஷம்வரும்; வ்யாஜம் என்பதாலே முக்கியமல்ல என்றாகி, **ப்ரதானகாரணம்**, காருண்யம்தான் எனத் தேர்கிறது; ஆக காருண்யம் வீணாவதில்லையே ! <br> - *பரதுக்க துக்கித்வம்* ஹேயகுணமாதலால், ஹேயமே யில்லாத பகவானின் காருண்யத்தை, **பரதுக்க நிராஸ சிகீர்ஷை** என்று கொள்ளவேணும். |

**ஸித்தாந்தம்** : சேதநன் லீலைக்கு உறுப்பாவதற்கு, ஈச்வரனின் ஸ்வாதந்த்ர்ய-காருண்யங்கள்தான் ப்ரதாந காரணம்; சேதநன் அநாதிகாலமாக செய்யும் 'ஆணை மீறுதல்' என்பது ஸஹகாரிகாரணம்.

-சேதநன் **போகத்துக்கு** உறுப்பாவதற்கு, ஈச்வர ஸஹஜ காருண்யம் ப்ரதாந/ ஸாமாந்ய காரணம்; 'ஆணை மீறுதலால்' உண்டான ஈச்வர நிக்ரஹ ஸங்கல்பத்தை மாற்றி அவனை வசீகரிக்கும் பக்தி-ப்ரபத்திகள் ஸஹகாரி/ விசேஷ காரணங்கள்.

-ஈச்வரன் ரக்ஷகனாக ஆவதற்கு உபயுக்த குணங்களான ஜ்ஞான- சக்தி-கருணைகளில் ஜ்ஞான-சக்திகள், அநுக்ரஹ-நிக்ரஹம் இரண்டிற்கும் உறுப்பாம்; காருண்யமோ, அநுக்ரஹத்துக்கு மட்டுமே அஸாதாரணம்.

**ஈச்வர காருண்ய-அநுக்ரஹத்தால் ஏற்படும் நன்மைப் பட்டியல் :**

1. மூவகை சேதநர்கள் ஸ்வரூபம் பெறுதல்; அது நீடித்தல்;
2. சேதநர்கள், எம்பெருமான் உகக்கும் செயல்களைச் செய்தல்;
3. நித்யர்கள், நித்யமாக எம்பெருமானை அநுபவித்தல்;
4. முக்தர்கள், பழையபடி கர்மவச்யதை அடையாமல் இருத்தல்;
5. லீலாவிபூதியில் ஸ்ருஷ்டி-ரக்ஷணம் இவைகளுக்குக் காரணமாதல்;
6. பகவானின் அவதாரங்களான சுத்த ஸ்ருஷ்டிக்குக் காரணமாதல்;
7. சாஸ்த்ரங்களை வெளியிடுதல்:
8. அந்த சாஸ்த்ரங்கள் மூலம் தத்வ-ஹித-புருஷார்த்தம் பற்றிய அறிவு பிறப்பித்தல்;
9. பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தில் ஜீவனுக்கு ஆர்வம் உண்டாக்குதல்;
10. அந்த ஆர்வம் உண்டாவதற்குக் காரணமான ஸுக்ருதவிசேஷம் ஏற்படுத்துதல்;
11. ஈச்வர நிக்ரஹம் நீங்குவதற்கு, அவரவர் தகுதிக்கேற்ற உபாயங்களைக் காட்டல்;
12. உபாயத்தில் புலன்களை ஊக்குவிக்கும் நிலையில் துணை நிற்றல்;
13. உபாஸநத்தின் நடுவில் தடை நேர்ந்தால், தகுந்த ப்ராயச்சித்தத்தை செய்வித்தல்;
14. அகிஞ்சநர்க்கு உபாய ஸ்தாநத்திலே நின்று தடையேதும் இன்றி ரக்ஷித்தல்;
15. இந்த உபாயங்களால் பகவானை மகிழ்வித்து, அநாதியாக சேதநன் செய்த கணக்கற்ற அபராதங்களை ஈச்வரன் புறக்கணிக்கும்படிக்கும் - அளவற்ற இன்பத்திலே இளைப்பாற்றும்படிக்கும் ஸம்ஸாரத்துக்கு திரும்புதல் இல்லாமல் செய்தலுக்கும் காரணமாதல்;
16. ஆர்த்த ப்ரபந்நனுக்கு, அப்போதே மோக்ஷம் தருவித்தல்;
17. மோக்ஷப்ராப்தி காலத்திலேயே இங்கு இருந்த நாள் அபராதம் கலவாத கைங்கர்யத்தையும் அளிக்கவேணுமென்ற பலனைக் கேட்க மறந்த த்ருப்த ப்ரபந்நனுக்கு, ப்ராரப்த கர்மத்தாலே நேரிட்ட பாபங்களுக்காக பச்சாதாபத்தை உண்டாக்கி, அவன் தகுதிக் கேற்ற ப்ராயச்சித்தத்தை செய்வித்தல்;
18. இப்படி ப்ராயச்சித்தம் செய்யாத கடின ப்ரக்ருதிகளுக்கு, யமலோகம் நேராதபடியும், மோக்ஷத்துக்குத் தடை வராதபடியும் செய்து, சிறு தண்டனைகளால் சிக்ஷித்தல்.

| கலக்கங்கள் | ஸமாதானங்கள் |
|---|---|
| எம்பெருமானின் சேஷீ என்ற குணவிசேஷத்தைப் பற்றியது | |
| *ப்ரதாநப்ரதிதந்த்ராதிகாரத்தின்படி **சேஷீ**யான **பகவான்**, **பரதந்த்ர**னான "சேதநனைக் காப்பதற்கு உரிமையும் /சக்தியும் படைத்தவன்"; சேதநன் ஸ்வதந்த்ரமாக செயல் படமுடியாதவன். ஆக, ஆத்மஸமர்ப்பணம் செய்வது, **ஸ்வரூப விருத்த**ம்.* | **-ஆகாது.** அதே அதிகாரத்திலேயே, "கர்மவச்யரை '**உபாயத்திலே மூட்டியே ரக்ஷிப்பது**' என்பது, கருணாவாந் ஆன எம்பெருமானது தீர்ந்தஸங்கல்பம்" எனவும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியில்லையானால், 'எல்லீரும் வீடு பெறும்' நிலை ஏற்பட்டிருக்கும்; உண்மையில் அப்படியில்லையே ! -*சரணம் வ்ரஜ* என விதித்திருப்பதால், ஆத்மஸமர்ப்பணம் ***ஸ்வரூப விருத்தம்*** **அன்று**.<br>**-பூர்வாசார்ய**ர்கள் ஆத்மஸமர்ப்பணத்தை தாங்களும் அநுஷ்டித்து, *சாஸ்த்ர*ங்களை ப்ரமாணமாகக்காட்டி பிறர்க்கும் உபதே*சி*த்திருக்கின்றனர். |
| *பகவானுக்கும்-ஜீவனுக்கும் உள்ள ஸம்பந்த ஜ்ஞானமும், ரக்ஷிக்கப் படும்போது விலக்காமல் இருத்தலுமே மோக்ஷ ஸாதனமாம்.*<br><br>*-இதுதான் பாரதத்தில் 'யே **நாதவந்த:** . . ந ஆத்மகர்மணி ஸமார-பந்தே' எனச் சொல்லப் பட்டது.*<br><br>*-சோமாசியாண்டானும், ரக்ஷணத்தில் சேதநனு* | -ஸம்பந்த ஜ்ஞாநமில்லாத அசேதந/ பசு-பக்ஷிகளும் காக்கப்படுவதால், இவ்வாதம் யுக்திக்குப் பொருந்தவில்லை; மாமேகம் சரணம்வ்ரஜ, ஆத்மாநம் மயி நிக்ஷிபேத் போன்ற 'விதி' இருப்பதால், "**ரக்ஷாபேக்ஷையோடு சேர்ந்த ஸம்-பந்த ஜ்ஞாநம் வேண்டும்**" எனவும், பூர்வ பக்ஷம் *சாஸ்த்ர*த்துக்கும் பொருந்தவில்லை என்றும் தேர்கிறது.<br>-மேலும், *'பகவான் ரக்ஷிக்கும்போது, விலக்காமலிருத்தலே மோக்ஷஸாதந'*மென்றால், தூங்கும்போது மோக்ஷம் அளிக்க நேரிடும் ! -*அல்ல; மோக்ஷம் அளிப்பதற்கு, 'தடுக்கும் யோக்யதை இருக்கும்போது' தடுக்காமல் இருந்திருக்க வேண்டும்* என்றால், யோக்யதையே இல்லாத அசித்துகளுக்கும் மோக்ஷமளித்திருப்பதற்கு ஒட்டவில்லை.<br>-பாரத *ச்*லோகத்திலும், **நாதவந்த:** பதத்தின் 'நாத்ரு=யாச்நா' என்ற தாது வ்யுத்பத்தி/ மதுப் இவையினால், "**யாசிப்பவனை உடைய** ஈச்வரன்" எனப் பொருள்படுவதால், ரக்ஷா-பேக்ஷை/ ஆத்மஸமர்ப்பணம் செய்தவனை பகவானே காப்பாற்றுகிறான் எனவாகி, ஆத்மஸமர்ப்பணம் தேவை எனத் தேர்கிறது.<br>-உதாஹரித்த பூர்வரின் வசநத்தால், 'அநாதி கர்மப்ரவாஹ விபாகவி*சேஷ*த்தாலே ஏற்பட்ட யாத்ருச்சிக ஸுக்ருதாதி |

| | |
|---|---|
| க்கு *அந்வயமில்லை* *எனக் கூறுகிறார்.* | களை முன்னிட்டு ஆத்ம ஸமர்ப்பணத்திலே மூட்டுவித்து, அதனால் ப்ரீதனாய் ஸர்வகர்தாவான **எம்பெருமான் ரக்ஷிக்கிறான்; ஆக, நாமே செய்கிறோம் என்று எண்ணுவதற்கில்லை**' என்றும்; **ஜீவ**னை கவலையற்று இருக்கச் செய்வதான 'பகவான் *சேஷி*யாகும் ஸம்பந்தவி*சேஷ*ம் சொல்லப்படுகிறது' என்றும் கொள்ளவேண்டும். |

**<u>ஸித்தாந்தம்</u>** : *சேஷி*யாய், காக்கும் கடமையுள்ளவனானாலும், வைஷம்ய தோஷம் தட்டாமல் இருப்பதற்காக ரக்ஷாபேக்ஷையோடு சேர்ந்த ஆத்மஸமர்ப்பணம் என்னும் வ்யாஜத்தைக்கொண்டே, எம்பெருமான் ரக்ஷிக்கிறான். காப்பதற்கு ப்ரதான காரணம் அவனேயாகையால், அவன் *சேஷி*யாய் நிற்பதும் நிலைக்கிறது.

| கலக்கங்கள் | ஸமாதானங்கள் |
|---|---|

எம்பெருமானின் பத்நீ-ஸம்பந்தத்தைப் பற்றியது

| | |
|---|---|
| *அகிஞ்சனனான ஜீவன் அநந்யோபாயனாய் இருக்க வேண்டுமே !* *ஆகையால் பூர்வ கண்டத்தில் உபாயமாக பற்றப்படும் பகவான் '**ஸ்ரீமந் நாராயணன்**' என்னும்போது, பிராட்டி **அடையாளச் சொல்**லாக மட்டும் இருக்கிறாள்; ஒருபோதும் அவனைப் பிரி யாத விசேஷணமாயிருப்பது உத்தர கண்டத்தில்தான்.* | - ஸ்ரீமத் என்ற பதம் இருகண்டத்திலும் 'அர்த்த ஸ்வாரஸ்யத்துக்கு **பாதக**மில்லாமல்' ஒன்றுபோலவே இருப்பதால், பூர்வத்தில் *அடையாளச் சொல்*' எனவும் உத்தரத்தில் '*விசேஷணம்*' எனவும் சொல்லவேண்டாம். <br> -இதே காரணத்தைவைத்து அநந்ய ப்ரயோஜனாகவுமிருக்கும் ஜீவனுக்கு, '*உத்தர கண்டத்தில் ஸ்ரீமத் என்ற பதம் விசேஷணம்*' என்பதும் பொருத்தமற்றதாக ஆகிவிடுமே ! <br> -இருவிடங்களிலுமே '*அடையாளச்சொல்*' என்றால், இதே காரணத்தால், ஈச்வரனின் குண-விக்ரஹ-வ்யாபாராதிகளும் வி*சேஷண*மல்ல என்றாகிவிடும். அவை உபயோகமாயுள்ளதால் வி*சேஷண*மாக எற்கப்படுவது போலவே பிராட்டியையும் –**உபாயதசை**யில் ஈச்வரனின் உபேக்ஷையைப் போக்கி அநுக்ரஹ ஸங்கல்பத்தை உண்டுபண்ணுவதாலும்; <br> **<u>உபேய தசை</u>**யில் ஜீவன் செய்யும் கைங்கர்ய பலனுக்கு, ஈச்வரனோடு சேர்ந்து *சேஷி*யாயிருப்பதாலும் – உபயோகமாயுள்ளதால் வி*சேஷண*மாக ஒப்புக்கொள்ள வேண்டும். |
| *இரு ஆத்மாக்களான 'பகவான் -பிராட்டி'ச் சேர்க்கையை "ஒன்று" என சொல்வது, '**உபாயம் ஒன்றே**' எனும் நம் ஸம்ப்ரதாயத்துக்கு* | -நாராயணனும், அவன் குணங்களும் தனி வஸ்துக்களாக இருப்பினும், பின்னது அவனுக்கு வி*சேஷண*மாக இருப்பதால், இச்சேர்கையை "ஒன்று" என்று நம் ஸம்ப்ரதாயத்தில் ஒப்புக்கொள்வதுபோல், பிராட்டி நாராயணனுக்கு வி*சேஷ*ணமாகவிருக்கும் நிலையில் "**ஒன்றென்றே**" இசையலாம். -மேலும், வி*சேஷண*த்தின் சேர்க்கையால் வி*சேஷ்ய*த்துக்கு |

| | |
|---|---|
| *விருத்தம்.*<br>*-மேலும், பிராட்டியின் சேர்க்கையால் பெருமை உண்டானால், பகவானுக்கு குறையாகும்.*<br><br>*-அநேக ப்ரமாணங்கள் **பகவானை மட்டும் தான்** சொல்கின்றன.* | ஏற்றமுண்டானால், அது பின்னதின் குணத்துக்கோ/ ஸ்வாதந்த்ரயத்துக்கோ **குறையாகாது**; மாறாக **அதிசயம்தான்** உண்டாகும். இது பிராட்டியோடு சேர்ந்த பகவான் விஷயத்திலும் பொருந்தும்.<br>-யாகங்களில் பத்நீக்கு அந்வயமுள்ளபோதிலும், 'எப்போதும் கணவனுக்குள் அடக்கம்' என்பதால் 'பதிப்ரதாநமாக'ச் சொல்வதுபோல், ஆத்ம யாகமான ஆத்மஸமர்ப்பணத்திலும் பகவானைமட்டும் சொல்லியிருப்பது பொருத்தமே. |
| *-பகவானோடு எப்போதும் சேர்ந்திருப்பவளானால், திருக்கோயில்களில் 'தனிக்கோவில் நாச்சியார்' என **பிரிந்த நிலை** ஏன்?*<br>*-காம்ய ப்ரதாநமான இவரை அநந்யப்ரயோஜகரான பரமைகாந்திகள் ஸேவிக்கலாமா ?* | -ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்த்ரப்படி, அர்ச்சாரூபியான பகவானைப் பிரிந்து தனிக்கோவில் நாச்சியாராக நின்றாலும், பிராட்டி "பகவானோடு இல்லையென்பது இல்லை". இந்த **அவிநாபாவம்** "**பாஸ்கர-ப்ரபா**" (ஒளி, **ஸூர்ய**னைவிட்டு வெளியே பரவினாலும், ஸூர்யனோடு இல்லை என்பது இல்லை எனும்) ந்யாய ஸித்தம்.<br>-காம்யப்ரதாநமானபோதிலும் பகவத்ரூபமான மதநகோபாலாதிகளை பரமைகாந்திகள் ஸேவிப்பதுபோல், தனிக்கோவில் நாச்சியாரை ஸேவிப்பதும் பொருத்தம்தான். |

**ஸித்தாந்தம்** : எம்பெருமானும் பிராட்டியும் ஒரே சேஷிகள்; ஒரே ஸங்கல்பத்தை உடையவர்கள்; ஒருவர் மற்றவர்க்குப் பெருமை சேர்ப்பவர்கள்; ஸ்வரூபம்/ரூபம் ஆகியவற்றில் பிரிவில்லாதபடி சேர்ந்திருப்பவர்கள். இந்நிலை குலையாதபடி ஸித்தோபாயத்தை, ஸ்ரீமத் என்ற விசேஷணத்தோடுகூடிய நாராயண சப்தத்தில் அநுஸந்திக்க வேண்டும்.



## 24. ஸாத்யோபாய சோதநாதிகாரம்

*“வரிக்கின்றனன் குறியொன்றால்”*

**ஸாத்யோபாயமான பக்தி / ப்ரபத்தி விஷயமாக கலக்கங்களும்/ ஸமாதானங்களும்**

| கலக்கங்கள் | ஸமாதானங்கள் |
|---|---|
| பக்தி/ ப்ரபத்திகளுக்கு அதிகாரமுடைமையைப் பற்றியவை | |
| *ஸாமாந்ய தர்மமான ’பகவானைப் பற்றுவதை’ யுடைய **உபாஸநம், ஸர்வாதிகாரமா?*** | **உபாஸந ஆரம்ப**த்தில்தான் த்ரைவர்ணிகராக இருக்கவேணுமென்ற நியமமே தவிர, தொடரும் பிறவிகளில் அந்தக் கட்டாயமில்லை. ஆக, பக்த்யாதி ஆச்ரயணம் என்பது ஸாமாந்ய தர்மமாவதும் பொருத்தமே. |
| *ப்ரபத்தி என்பது யாக விசேஷமாக ந்யாஸ வித்யையில் விதிக்கப் பட்ட ஒரு வைதிக தர்மமாகையால், அதை அநுஷ்டிக்க எல்லோர்க்கும் **அதிகாரம்** கிடையாதே.* | -எல்லோர்க்கும் **அதிகாரம்** உண்டென வேதமும் மற்றும் ப்ரமாணங்களும் சொல்கின்றன. மேலும், உபாஸநத்தைப் போல அதிகாரத்தை அளவுபடுத்துவதான விசேஷ வசநம் ஏதும் ப்ரபத்தி விஷயத்தில் இல்லை.<br>-’உண்மை பேசு’ என்பது வைதிக வசநமானாலும், ஸாமாந்ய தர்மமாகி எல்லோர்க்கும் **அதிகார**முள்ளதுபோல், ப்ரபத்தியும் ஸாமாந்ய தர்மமே.<br>-காகாதிகளும் *சரண*மடைந்ததாக ப்ரமாணங்கள் உள்ளன. |

**ஸித்தாந்தம்** : த்ரைவர்ணிகராக இருந்தாலும் இல்லாவிட்டாலும், *சரண்ய- சரணாகதி* ஜ்ஞாநமும் ஆகிஞ்சந்யாதிகளும் இருப்பது மட்டுமே ப்ரபத்திக்கு **அதிகாரம்** ஆகும்.

| கலக்கங்கள் | ஸமாதானங்கள் |
|---|---|
| பக்தி / ப்ரபத்திகளின் ஸ்வரூப / கார்யங்களைப் பற்றியவை | |
| *-ஆத்மஸ்வரூபத்தில் ஒட்டாததும் அந்யதேவதா ஸம்பந்தமுடையதுமான **வர்ணாச்ரமாதி**களை அநுஸரிக்கும் **உபாஸநம்**, ஆத்ம வைலக்ஷண்யமறிந்தவனுக்கு **அநுஷ்டேயமல்ல.***<br>*-சாஸ்த்ரம் விதித்த உபாயங்களில் உபாஸநத்தை* | -*சரீர*-ஸம்பந்தமடியாகவரும் பசி-தாகம் இவற்றுக்கு பரிஹாரம் செய்வதுபோல், வர்ணாதி *விசிஷ்ட சரீர*த்தோடிருப்பதனால், அவைகளுக்கு உட்பட்ட *சாஸ்த்ர* விஹித தர்மங்களை செய்யத்தான் வேணும்; மேலும், கர்மாக்களால், தேவதா-அந்தர்யாமியான பகவானே ஆராத்யனாம்.<br>-*ஆத்ம ஸ்வரூபவிருத்தம்* என்றால், எப்படி?: 1.ஆத்மாவை அழித்து விடுமா; 2. பரதந்த்ரனான ஆத்மாவுக்கு அஸம்பா-விதமான ’செயலாற்றும் தன்மையை’ (கர்த்ருத்வத்தை) சொல்கிறதா; 3.ஆத்மாவுக்குத் தீங்கு விளைவிக்குமா?<br>இம்மூன்றுமே இங்கு **பொருந்தாது**; ஏனெனில் : 1. ஆத்ம |

| | |
|---|---|
| *ஸ்வரூப விருத்தமென்பதால் விட வேண்டுமென்பது ஆப்த வாக்யம் (ஸ்ரீவசநபூஷணம்) -தன்னைக் காத்துக் கொள்ள கடமையும் சக்தியுமில்லாத சேதநன்* ***உபாஸநம்*** *செய்வது* ***ஸ்வரூப விருத்தம் தானே?*** | ஸ்வரூபம் நித்யமானது; 2.ஆத்மாவுக்கு ஸ்வதந்ர கர்த்ருத்வம் இல்லாதபோதும், துச்சத்வம் வாராமைக்காக பகவததீநகர்த்ருத்வத்தை ஒப்புக்கொள்ளத்தான்வேண்டும்; 3. உபாஸநம், காம்யகர்மாக்கள்போல் ஸம்ஸாரத்தைத் தருவதல்ல - ஆக தீங்கில்லை. ஆப்த வாக்யம், ப்ரபத்தியை ஸ்தோத்ரம் செய்வதற்காகச் சொன்ன **அதிவாதமே** ! - வ்யாஜமாக உபாஸநத்தை பகவான் எதிர்பார்ப்பது, வைஷம்ய-நைர்க்ருண்யம் தவிர்க்கவும்/ *சாஸ்த்ரவிதி* பலத்தாலுமாம். இல்லையெனில், பகவத் கைங்கர்யமும், ப்ரபத்தியும்கூட ஸ்வரூப விருத்தமாகிவிடும் ! |
| *பக்தியோக பலனைப் பார்த்து, ப்ரபத்தியும் பலிக்குமென நம்பிக்கையூட்டி- செய்யத் தூண்ட, சாஸ்த்ரம் விதித்தது. -ஆனால் விதிக்கப்பட்டாலும் வ்யபிசாரம் நரகாதிகளை தருவதால் தவிர்ப்பது,* ***பக்தி யோகம், ஸ்வரூபவிருத்தம் ; சிஷ்டாசாரமுமில்லை .*** | **-கஷ்டமான** உபாஸந உதாஹரணத்தைக்காட்டி, **லகு**வான ப்ரபத்தியில் ஈடுபடுத்த முயல்வது என்பது பொருந்தாது; மேலும் பரிஹஸநீயம். -வ்யபிசாராதிகளின் *பல*ன் அநர்த்தங்களாவதால், இந்த உதாரணம் பொருந்தாது; ஆனால், பக்தியோகத்தின் *பல*னோ மோக்ஷமானபடியால், *சாஸ்த்ர* விதிப்படி நடப்பது பொருத்தமே. -*பராசரா*திகளும் உபாஸநத்தை அநுஷ்டித்திருக்கிறார்கள். -உபாஸநாதிகாரிகள் 'அரிதாயிருப்பதைக்'கொண்டு தள்ள வேண்டுமென்றால், அதே தோஷம் ப்ரபத்திக்கும் உண்டு. -ஆக உபாஸநம், **அகிஞ்சனனுக்கே ஸ்வாதிகாரவிருத்தம்.** |
| *உபாஸநம், ஸாதந மென்று ஒப்புக் கொள்ளமாட்டோம்.* | ஸர்வதர்மாந் பரித்யஜ்ய என்பதற்கு ஸ்ரீபிள்ளைலோகாசார்யர் *'உபாஸநமாகிற தர்மத்தையும்விடுவது'* என வ்யாக்யாநம் செய்திருப்பதால், **ஸ்வ வசந விரோதம்.** |
| *அவரும் உபாஸநத்தை தர்மமென****வில்லை****; 'தர்ம மென எண்ணும் அஜ்ஞாநம் நீக்க வேண்டி',* ***அநுவதித்து****, 'விடு' என்றார்.* | இப்படி, ***சாஸ்த்ரம் விதித்த*** *உபாஸநத்தை தர்மமில்லை*யென்றால், கைமுதிக ந்யாயத்தாலே, ப்ரபத்தியையும் மற்ற ப்ரவ்ருத்தி-நிவ்ருத்தி தர்மங்களையும் விடநேர்ந்து, *சாஸ்த்ர*-ப்ராமாண்யத்தை ஒப்புக்கொள்ளாத பாஹ்ய-குத்ருஷ்டி பக்ஷத்தைச் சேர்ந்தவராகிவிடுவோம் ! |
| *சாஸ்த்ரத்தால் தத்வ அறிவு பெற்றவன், தானே சேஷத்வாநுஸந்தானம் பண்ணுவான்; ஆத்ம நிக்ஷேப* ***விதி*** *எதற்கு?* | இது, *வாக்ய ஜந்ய ஜ்ஞாநமே மோக்ஷஸாதநம்* எனச் சொல்வது போன்று, **கண்டி**க்கப்படவேண்டிய ஒன்று. மேலும் பக்தி-ப்ரபத்தி இரண்டுக்கும் தேவையான அதிகாரம், தத்வ ஜ்ஞாநம்; ப்ரபத்திக்கு, வி*சேஷ*மாக ந்யாஸம் விதிக்கப்பட்டுள்ளது. – தத்வஜ்ஞாநம் இல்லாதவனுக்கும்கூட, ப்ரபத்தி |

| | |
|---|---|
| -***ஸித்த**மாக இருப்பதை விதிக்க வேண்டாமே;* | அதையும் அளித்து மோக்ஷஹேதுவாகும்.<br>-*சரணம் வ்ரஜ* என விதி இருப்பதாலேயே அது **ஸித்த**மல்ல; **ஸாத்ய**மெனவாகிறதே ! |
| *ஸர்வதர்மாந் பரித்யஜ்ய என்பதுதான் விதி (சரணம் வரஜ என்பதல்ல); அப்போது,**ஸ்வரக்ஷணார்த்த ஸ்வவ்யாபார நிவ்ருத்தி**யை சொல்கிறது.* | -*வ்ரஜ* என்பதில்தான் *'லோட்'* உள்ளது; *'பரித்யஜ்ய'*வில் இல்லாததால், அது விதி என்பது *சப்தஸ்வாரஸ்ய*மற்றது.<br>-'விலகுவதும்' ஸர்வ தர்மத்யாகம் என்ற ஒரு வ்யாபாரமே !<br>-*'கிடையாது; வ்யாபாரம் (விலகுவது) இல்லை'* என்றால், விதி தேவையில்லையே !<br>ஆக, இந்த வாதம் பொருத்தமற்றது. |
| *ப்ரபத்தி ஸாத்யோபாயம்/ உபகாரகமென்றால், ஈச்வரனின் ஏகத்வ/ ஸித்தத்வ/ பரமசேதநத்வ/ பரமகாருணிகத்வ/ஸர்வசக்தித்வ/நிரபேக்ஷத்வங்களுக்குக் கொத்தை வருமே (இல்லை என்று ஆகிவிடுமே)?* | -இந்த தர்க்கம், வ்யாப்தி-சூன்ய தோஷமுடைய குதர்க்கமாகும்– அதாவது, ஸஹகாரியை அபேக்ஷிப்பவரெல்லாம் இங்கு குறிப்பிட்டது போன்ற குணவிசேஷங்கள் இல்லாதவர் என நிரூபிக்கவேண்டிவரும் ! அது முடியாதே. குயவன்-சக்கரம்-கோல் இவற்றை எதிர்பார்ப்பதையும், *உதாரர்* - கருணையுள்ளவராக இருப்பதையும் பார்க்கிறோமே !<br>-மேலும் உபாஸநத்தில் ஸாதந-பாவாதிகளை இசைந்தபோது, *ஈச்வர*னின் ஸ்வபாவங்களுக்கு கொத்தை வருவதாகச் சொல்வதில்லையே ! |
| *பக்தி ஸ்தாநத்தில் சாஸ்த்ரம், ப்ரத்தியை **விதிக்க** வேணுமோ? சாஸ்த்ரத்தால் பகவானைப் பற்றி அறிந்த அகிஞ்சனன், ஈச்வரனை **தானாகவே** பற்றமாட்டானோ ?* | ப்ரபத்தியை *சாஸ்த்ரம்* **விதி**க்காமல் போனால் :-<br>-உபாஸந யோக்யதையில்லாதபோது முமுக்ஷு பக்திசெய்ய முடியாமலும், அதன் ஸ்தாநத்தில் ப்ரபத்தி நிற்பதை அறியாமலும், *பல*த்தை இழந்துவிடுவான்.<br>-பகவானைத் வணங்குதல் போன்ற கைங்கர்யங்களை, வரையறையை மீறிச் செய்யநேர்ந்து அபசார-ஹேதுவாகும்.<br>-ப்ரபத்தி அநுஷ்டாந **போதக** ஸதாசார்ய-மந்த்ரோபதேசங்களும் வீணாம் !<br>-உபாஸந யோக்யதை இல்லாதவர்க்கு, பகவானிடமிருந்து *பல*ன்பெற எளிய உபாயமான ப்ரபத்தியை அறிய வழியில்லாமல் போய்விடும். |
| ***ப்ரபத்தி** தர்மமென்றாலும் ஸர்வதர்மங்களையும் விடச் சொன்ன போது, இதையும்தானே **விடவேண்டும்** ?* | அப்படியானால் *ஈச்வர*னை, க்ருஷ்ணம் தர்மம் ஸநாதனம் என்று தர்மமாகச் சொல்லியிருப்பதால் அவனையும், விடவேண்டிவருமே ! இங்கு 'அவனைத்தவிர' என எப்படி த்யாகத்தை அளவுபடுத்துகிறோமோ, அப்படியே 'ப்ரபத்தியைத் தவிர' என பொருள்கொள்வதும்தானே உசிதம். |

| | |
|---|---|
| *பக்தி-ப்ரபத்திகள் எந்த ஆகாரத்தால் ஸித்தோ பாயத்துக்கு உபகரிக் கின்றன ?* | பத்தஜீவனின் அநாதியான அபசாரபரம்பரையாலே நிக்ரஹத்திலே நிற்கும் ஸித்தோபாயனை, ஸாத்யோபாயங்கள் சமிப்பிக்கின்றன; கோபம்தணிந்த பகவான், பரிபூர்ண கைங்கர்ய பலத்தைக் கொடுக்க உபகரிக்கின்றன. |

**ஸித்தாந்தம்** : அநிஷ்ட நிவ்ருத்தியும் இஷ்டப்ராப்தியும் **ஸாக்ஷாத்**தாக ஸித்தோபாயத்தினுடையவும்/ **பரம்பரை**யாக ஸாத்யோபாயத்தினுடையவும் கார்யம். ஆத்மயாகமான சரணாகதியில் "ஆத்ம-ஹவிஸ் ஸ்ரீமந் நாராயணனுக்கே" என்ற புத்திவிசேஷத்துடன் செய்யும் ஆத்ம-ந்யாஸம்தான் அங்கி; அதைக் காட்டிலும் ப்ரதாநம், **'ரக்ஷிக்கும் பொறுப்பை வைத்தலே'**.

| கலக்கங்கள் | ஸமாதானங்கள் |
|---|---|

பக்தி / ப்ரபத்திகளின் அங்கங்களைப் பற்றியது

| | |
|---|---|
| *-ப்ரஹ்மாஸ்த்ர ந்யாயத் தால், ப்ரபத்திக்கு ஆநு கூல்ய ஸங்கல்ப/ ப்ராதி கூல்யவர்ஜநாதிகள் அங்கங்களாக தேவை யில்லை (ப்ரபந்நனுக்கு இயற்கை என்பதால்); -மஹாவிச்வாஸமே அங்கம்.* | -எங்காவது *'வேண்டாம்'* எனச்சொல்லியிருந்தால், **"ப்ரபத்தி செய்தபிறகு, இவைகள் இல்லாதுபோனாலும் ப்ராயச்சித்த/ லகு தண்டனைகளால் கழிந்து, மோக்ஷத்துக்கு குறைவில் லாமல் இருக்கும்"** என்றே பொருள்.<br>-ப்ரஹ்மாஸ்த்ரமும் அதற்குரிய அங்கங்களை அபேக்ஷித்து நிற்பதுதான்.<br>-இப்படி ஒப்பாவிட்டால், பூர்வபக்ஷிகள் அங்கமாக இசைந்த மஹாவிச்வாஸத்துக்கும், இந்த தோஷங்கள் சொல்லலாமே ! |
| *சாஸ்த்ர விச்வாஸத்துக் குமேல் மஹாவிச்வா ஸம் எதற்கு ?* | **அதிசயித** விச்வாஸமே முக்கிய அங்கமென்பது *சாஸ்த்ர* விஹிதம். |

**ஸித்தாந்தம்** : - *சாஸ்த்ர*ங்கள் ப்ரபத்திக்கு அங்கங்களை **விதி**த்திருக்கின்றன.

- மந்த விச்வாஸர்க்கும் கோலின காலத்துக்குள் உபாயபூர்த்தி ஏற்படுத்தி, பகவான் ரக்ஷிப்பான்.

| கலக்கங்கள் | ஸமாதானங்கள் |
|---|---|

| | |
|---|---|
| *-ஒரு உபாயம் ஒரே பல னையன்றி வேண்டிய தெல்லாம் தருமா?* | 'உபாயங்கள், மோக்ஷார்த்திக்கு நிவ்ருத்தி தர்மமாகவும், மற்றவர்க்கு ப்ரவ்ருத்தி தர்மமாகவும் நிற்கின்றன' என *சாஸ்த்ர*ம் சொல்வதை, **யுக்தியினால் பாதிக்க முடியாது.** |
| *பலகாலம் செய்யவேண் டிய பக்திதரும்பலத்தை,* | *சாஸ்த்ர*ங்களிலும்/ உலக வழக்கிலும், ஒரே *பல*னை அடைய கஷ்டமான வழியும் உண்டு; ஸுலபமானதும் உண்டு. இது |

| | |
|---|---|
| *ஒரே முறை செய்யப்படும் ப்ரபத்தி கொடுக்குமா* | **'அதிகாரி பேதத்துக்குத் தகுந்தபடி'** என்று கொள்வதுபோல், பக்தி/ ப்ரபத்தி விஷயத்திலும் ஒப்புக் கொள்ளவேண்டும். |
| *மோக்ஷோபாயமும்/பலனும் பகவான்தான்.அப்படியிருக்க, சிலர்க்கு பலனில்காலதாமதமேன்* | இதற்குக் காரணம் – ஸம்ஸாரச் சூட்டிலிருந்து மீள்வதில் ஒருவர்க்குள்ள அவஸரத்துக்கு ஈடாக, மோக்ஷம்பெற தாங்களே வெவ்வேறு காலத்தைக் குறிப்பதுதான்; அவரவர் கர்மங்களுக்குத் தக்க ஈச்வரன்தான் புத்தி ப்ரதாநம் பண்ணுகிறான். |
| *ஐஹிக பலனுக்காகச் செய்த ப்ரபத்தி சில போது பலிக்காமல் போவதால் ப்ரபத்தியே ஸந்தேஹத்துக்கு உள்ளாகிறதே?* | இதற்குக் காரணம் – கார்யத்தின் அங்கங்களிலோ (கர்ம வைகுண்யம்), செய்பவனிடத்திலோ (கர்த்ரு வைகுண்யம்), செய்யும் வழியிலோ (ஸாதந வைகுண்யம்) உண்டாகும் குறைதான். இக்குறைகள் இல்லாதபோது இங்கேயும் ப்ரபத்தி பலிப்பதை பார்க்கிறோம். |
| *-மோக்ஷஸாதநமாக 'நிரந்தர பகவத்யாநம்' தான் சொல்லப்பட்டிருக்கிறது.*<br>*-கீதையில் அங்கப்ரபத்தியாகத்தான், பாஷ்ய காரர் யோஜனை.* | -நிரந்தர பகவத் த்யாநம், சக்தனுக்கு உபாயமாகவும், அசக்தனுக்கு பலமாகவும் சொல்லப்பட்டது. ப்ரபந்நனுக்கு மோக்ஷ ருசி இங்கு குறையாமல் வளர்ந்துவர இது உபகாரகம்.<br>-ப்ரபத்தியின் அங்கமான வேஷத்தை பாஷ்யாதிகளில் உதாஹரித்து, ஸ்வதந்த்ரமான வேஷத்தை கத்யத்திலே ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச் செய்தார். |
| **<u>ஸித்தாந்தம்</u>** : - பகவத் த்யாந பரிவாஹமான பூஜாவிசேஷத்தை, நித்ய க்ரந்தத்தை ஒட்டி ஸ்வயம் ப்ரயோஜநமாகச் செய்துவந்தால், அந்யாபிகமநம்/ அந்யார்த்த ப்ரவ்ருத்தி/ அந்ய பஜநம்/ அன்யகீர்தநம்/ அந்ய சிந்தநம் என்ற ஐந்து தோஷங்கள் புகாமல் இருக்கும்.<br>-இப்படிப்பட்ட ஆராதநத்துக்குத் தகுதியில்லாதவரும், தங்களுக்கு யோக்யமான நித்ய-நைமித்திகங்களாலும், ஸங்கீர்த்தனாதிகளாலும் பாகவதர்களுக்கு பரதந்த்ரராய் இருந்து, கைங்கர்யத்தினை இங்கு அநுபவிக்கலாம் | |



## 25. ப்ரபாவ-வ்யவஸ்தாதிகாரம்

*அடியார் ஆதரத்தில் "ஆரணநீதி நெறி குலையாமை"*

" **உபாய**ங்களின் **ப்ரபாவ**த்தால் **ஜாதி-நியம**ங்கள் ஒழியாது; ***சாஸ்த்ர***ம் **விதி**த்த **கர்மா**க்கள் கழியாது – ஆக அதன் **ப்ரபாவ**ம், **வ்யவஸ்தை**க்கு உட்பட்டதுதான்" என "**பரித்யஜ்ய, மாமேகம்**" இவை விளக்கப்பட்டு, ப்ரபாவம் **அளவிடப்படுகிறது**.

| கலக்கத்தால் மிகைப்படுத்தியமை | ப்ரபாவத்தை **அளவு**படுத்தித் தெளிவித்தமை |
|---|---|
| *உபாயம் செய்த **பகவத் பக்தர்**கள் எல்லோரும் **ஒரே ஜாதி**யினர்தாம். இதை விதுரர்/ விச்வாமித்ரர்/ ஆழ்வார்கள் வ்ருத்தாந்தங்கள் சொல்லும்.* | உபாயம், ஜாதி-நிபந்தனத்தை **மாற்றவல்லதல்ல.** **பகவத் பக்தி**யாம் குணவிசேஷத்தையிட்டு 'ஒரே ஜாதி' என **உபசார**மாக சொன்னது.<br>-**விதுராதி**களும் ஜாதிநியமங்களை மீறவில்லை என்பது **இதிஹாஸங்களை முழுவதும் கற்றோர்** கணிப்பு. |

**ஸித்தாந்தம்** :- *சாரீர*கமாக ஏற்படுவது **'ஜாதி'**; இது *சரீர*ம் இருக்குமளவும் **மாறாதது**. மாநஸமாக குண விசேஷத்தையிட்டு உண்டாவது **'குலம்'**; இது எல்லா ஜாதியினர்க்கும் **உண்டாகக் கூடியது.**

-**பகவத் பக்தர்**கள் ஸமரென்றது **பரமபுருஷார்த்த ஸாம்யாதி**களாலே (கிடாம்பி அப்புள்ளார்). இப் **பக்தர்**களில் : தேவதாந்தர ஸ்பர்சம் இல்லாதவர் – **ஏகாந்தி**கள்; ப்ரயோஜனாந்தர ஸ்பர்சம் இல்லாதவர் – **பரமைகாந்தி**கள்; தாமதம் பொறுக்காது, **பரந்யாஸ**ம் செய்து **கைங்கர்யைக** ப்ரயோஜகராயிருப்பவர் – **ஷோடசவர்ண ஸ்வர்ண பரமைகாந்தி.**

| கலக்கங்கள் | ஸமாதானங்கள் |
|---|---|
| *உபாய நிஷ்டர், எல்லா ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி தர்மங்களையும் விடவேண்டுமென்பது 'ஸர்வ தர்மாந் **பரித்யஜ்ய**' வுக்குப் பொருள்.* | -*சாஸ்த்ர* நியமத்தை **ப்ராந்தி**யால் **பாஹ்ய-குத்ருஷ்டி**கள் விடுவது **தாமஸ த்யாகம்**; ப்ரவ்ருத்தி-நிவ்ருத்திகளுக்கு **சோம்பி** விடுவது **ராஜஸ த்யாகம்**; அதிகாரத்துக்கு தக்க **கர்மா**க்களை **பகவத்ப்ரீதி**க்காகவே கர்ம-கர்த்ருத்வ-*பல*த்யாகத்தோடு **செய்வது ஸாத்விக த்யாகம்** (இது கீதாபாஷ்யத்தில் முதல் யோஜனை)<br>-'த்யாகம்' சொல்வதானால், உபாயவிரோதி பாபங்களைக் கழிக்க விதித்த ப்ராயச்சித்தாதிகளுக்கு அநர்ஹன், **அவைகளை** விட்டு, ப்ரபத்திசெய்யச்சொல்வது–(**மாமேகம்**-2-ம் யோஜனை). |

**ஸித்தாந்தம்** :- ஆஜ்ஞா கைங்கர்யங்களை சரீரம் உள்ளளவும் தன் **வர்ணாச்ரமாதி** களுக்கு ஏற்ப செய்ய வேண்டும். இவை பக்தியோகத்தில் அங்கமாகவும் ப்ரபத்தியில் பலமாகவும் ஆகும். முக்த தசையில் வர்ணாச்ரமாதிகள் இல்லை.

( ஜாதி-ஆச்ரய-நிமித்த துஷ்ட ஆஹாரத்திலும், ஜ்ஞாநக்ரஹணத்திலும், ஸ்வ ஸூத்ர மந்த்ர க்ரஹணத்திலும், தன க்ரஹணத்திலும், ஜாதியிலும், மற்றும் தேச-காலத்திலும் - **நியமங்களுடன்**, வேறு பலத்தில் ஆசையற்றவனாய், தன் சக்திக்கு ஏற்ப ஸ்ரீமந்நாராயணனுடைய **கைங்கர்யங்களைச் செய்யவேண்டும்**. இப்படி ஆசார நியமங்களென்ன; அதற்கு மேலே தயை- சாந்தி முதலான **ஆத்ம குண**ங்களென்ன; அதற்கு மேலே **பகவத் பஜன**ங்களென்ன; அதற்கு மேலே **மோக்ஷபல**னில் ஆசையென்ன, இவற்றின் பெருமைகளால் மேன்மேலும் உயர்வாகக் கருதப்படும் – ஸ்வாமி தேசிகன் காரிகை)



கிடாம்பி அப்புள்ளர் ஸ்வாமி தேசிகனுக்கு திருப்பாதுகைகள் அருளுதல்

## **26. ப்ரபாவ ரக்ஷாதிகாரம்**

*"தண்மை கிடக்க தாம்" உள்ளமை*

"**உபாய**ங்களின் ப்ரபாவங்கள் அளவுபடுத்தப்பட்டாலும், **அவற்றுக்குள்ள ஸஞ்சித/ ப்ராரப்த பாபநாசகத்வங்கள்/ நல்வழியிலிருந்து சிறிது தவறிய பாகவத ர்களுக்கும் *பல*ன் குன்றாமை, போன்ற தன்னேற்றமான பெருமைகளைக் குறைக்க லாகாது**" என **'மா*சுச*:' பத**ம் விளக்கப்பட்டு, இங்கு ப்ரபாவம் **ரக்ஷி**க்கப்படுகிறது.

<table>
<tr><th>கலக்கத்தால் குறைவுபடுத்தியமை</th><th>ப்ரபாவத்தை ரக்ஷித்துத் தெளிவித்தமை</th></tr>
<tr><td>'ப்ரபத்தியினால் எல்லா சோகங்களும் கழியும்' என்றது ஸ்தோத்ரம் தான்; உண்மையிலில்லை.</td><td>அநுக்ரஹசீலனான எம்பெருமான் 'விண்ணுலகம் தரு வானாய் விரைகின்றான்'. சோகங்களை அநுபவிக்க இசைந்த ஜீவனின் நசைக்கு ஈடாக இங்கு விட்டு வைக்கிறான்.</td></tr>
<tr><td>பகவான் ஹிதைஷியாயி ற்றே; கேட்காதபோதும், மோக்ஷத்துக்கு ஆநுஷங் கிகமாக அவனே சோகங் களைக் கழிக்கக்கூடாதோ ?</td><td>துக்கமில்லாது சிற்றின்பங்களை அநுபவிக்க இங்கு விட்டுவைத்தால், ஒருபோதும் ஜீவனின் நசை மாளாது; பகவதநுபவத்தில் ஆசையும் வளராது. ஆக, இந்த சிக்ஷையும் அநுக்ரஹ விசேஷம் தான். இதை ஆழ்வான்/ பட்டர் <u>ஐதீஹ்ய</u>ங்களிலே காணலாம்.</td></tr>
<tr><td colspan="2"><u>ஸித்தாந்தம்</u> :- இங்கு சிக்ஷணம், நியதாயுஸ்ஸுகளுக்கு இந்த ஜன்மத்திலேயே பீதி உண்டாக்கியும்; அநியதாயுஸ்ஸுகளுக்கு ஆயுஸ்ஸை வளர்க்க நினைக்காமைக்கும், நிர்வேதம் பிறப்பிக்கைக்காகவே.<br>-துக்காநுபவத்துக்குள்ள துக்காநுபவம்-நிர்வேதம்-பீதாதி ஜநநம் என்ற 3 ஆகாரங் களில்:- துக்காநுபவம், பகவந் நிக்ரஹரூப துஷ்கர்மபலமாகும்; நிர்வேதத்தின் மூலம் வரும் சிக்ஷையும், பீதிஜநநம் மூலம் வரும் 'ப்ராயச்சித்தம் செய்யவேணும்' என்ற ப்ரவ்ருத்தியும், அநுக்ரஹகார்யமான உபாயத்தின் பலன்.</td></tr>
<tr><td>அர்த்த ஸங்காதிகளை ஒழித்து வைராக்யத்துடன் இல்லாதவர் பாகவதர்க ளாயினும் விலக்கத் தக்கவரே.</td><td>வழி தப்பினார் பக்கல் சொல்லும் வார்த்தையை, நல் வழியில் அடி தடுமாறினார் பக்கல் சொல்லலாகாது. பாகவதர்- ஊனர் (ஸுதர்சன- பாஞ்சஜன்ய தாப ஸம்ஸ் காரமில்லாதவர்)/ ஹீனர் (புண்ட்ர ஸம்ஸ்க்காரமில்லாத வர்)/ பரிஸ்ரஸ்தர் (நாம ஸம்ஸ்காரமில்லாதவர்)/ நஷ்ட (மந்த்ர ஸம்ஸ்காரமில்லாதவர்) ராயினும், பகவானிடம் ஐகாந்த்யமிருப்பதால், (ஒரு விரகாலே ஈடேறி விடும் இவர் திறத்திலும்) அவஜ்ஞாதி அபசாரம் ஆகாது.</td></tr>
</table>

| | |
|---|---|
| | -பாகவதபசாரம் எவ்வளவு கொடியது என்பது, அக்ருத்ய கரண-க்ருத்ய அகரணங்களோடு இதையும், ஸ்ரீபாஷ்ய காரர் சேர எடுத்ததிலிருந்து விளங்கும்.<br>-பாகவத பாவனைசெய்வோரையும், அவர் உள்ளத்தை அறியும்வரை ஆதரிக்கவேணுமென்பது ஸீதாப்பிராட்டி காட்டிய நெறி. |
| **ஸித்தாந்தம்** :- பாகவதர்களை அவமதிக்காமல், அவர் குணங்களைமட்டும் கண்டு மகிழவேண்டும்.<br>கரணத்ரயத்தாலும் நல்வழியைக் கைவிடாமல், இங்கிருந்த நாள் ஸ்வயம் ப்ரயோஜநமாக பகவத் கைங்கர்யம் செய்யும் புண்ய புருஷர்களுடன் சேர்ந்துவாழும் சிறந்த பாக்யத்தை எம்பெருமான் அருளால் பெற்றதை நினைத்திருக்கவேண்டும். பரமபதத்தில் பெறப்போகிற கைங்கர்ய ஸாம்ராஜ்யத்துக்கு, இவ்வுலகிலேயே முடிசூடி நிற்பதாய் அநுஸந்தித்திருக்கவேண்டும். | |




## 27. மூலமந்த்ராதிகாரம்

*“நன் மனு ஓதினம்”*

மந்த்ர-பத-வாக்யங்களின் பல்வேறு யோஜனைகள்தரும் அர்த்தவிசேஷங்கள் சொல்லப்படுகின்றன.

- மூன்று மந்த்ரங்களுக்கிடையே உள்ள தொடர்பு :-




- மற்றும் ஓர் தொடர்பு :-

| | |
|---|---|
| மூலமந்த்ரம் | ஓம் ( அ+உ+ம) — நமோ — நாராயணாய |
| த்வயம் | ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே ஸ்ரீமதே நாராயணாய நம: |
| -விளக்குவது | (லக்ஷ்மீ ஸஹிதன்) (சரணாகதி) (உபேயம்) |
| சரமச்லோக பகுதி | ஸர்வதர்மாந்பரித்யஜ்ய(ஸ்தித:)மாமேகம்சரணம்வ்ரஜஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி |
| -விளக்குவது | (அகிஞ்சநன்-அநன்யசரணன்) (உபாயாந்தர நிரபேக்ஷன்) (பலத்தில் ஸ்வாதீந-ஸ்வார்த்த கர்த்ருத்வ/ போக்த்ருத்வமாகிற விரோதி நிவ்ருத்தி) |

<u>திருமந்த்ரத்தின் பெருமை</u> :

மந்த்ரங்களில் **பகவந் நாராயணமந்த்ரங்கள்** ➡ அவற்றுள் **வ்யாபக மந்த்ரங்கள்** ➡ அதிலும் **அஷ்டாக்ஷரம், விசேஷம்**. காரணம்:

- ❖ இது, வேதங்கள் முழுவதின் **ஸாரம்**;
- ❖ ஸகல துக்கங்களையும் **விலக்கவல்லது**;
- ❖ அனைத்து *பல*ன்களையும் **அளிப்பது**;
- ❖ எல்லா உபாயங்களுக்கும் **உபகாரகம்**;
- ➢ ஸகல வர்ணத்தார்க்கும், அதிகாரத்துக்கேற்ப (வைதிக-தாந்த்ரிக ரூபத்தால்) **உபஜீவ்யம்**:
- ❖ (நார *சப்த*த்தாலே) **வ்யாப்ய** தத்வமான சேதநாசேதநங்களையும்; (அயந *சப்த*த்தாலே) **வ்யாபக** தத்வமான பரமாத்மாவையும் நேராகவே **சொல்கிறது**;
- ❖ எந்த *பல*னையும் பெறுவதற்கு, வேறு எந்த மந்த்ரத்தையும் நாடவேண்டிய **தேவையில்லாதது**;
- ❖ பகவானின் (ராம-க்ருஷ்ணாதி) எந்த மூர்த்திக்கும் **பொதுவானது**;

❖ வேத-சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டது; எல்லா கல்பங்களிலும் ப்ரஸித்தமானது;

❖ ரிஷிகள்-ஆழ்வார்கள்-ஆசார்யர்களாலும் விரும்பி அநுஸந்திக்கப்படுவது.

❖ இம்மந்த்ரம்தான் ஸ்ரீ பரகாலனுக்கு ஸர்வேச்வரனால் உபதேசிக்கப்பட்டது.

➢ **அஷ்டாக்ஷரத்தை உச்சரிக்க அதிகாரிகளும், விதமும் :**

- முதல் மூன்று வர்ணத்து புருஷர்கள் மட்டுமே ஸமஸ்தமான (அகார-உகார-மகாராத்மக) ப்ரணவத்தோடு (**ஓம்** நமோ நாராயணாய என) உச்சரிக்கலாம்.
- மற்றவர்களும், ப்ரணவத்தை வ்யஸ்தமாக **உகார**மின்றி **'அம்'** என்ற பீஜாக்ஷரமாக ஆக்கி (**அம்** நமோ நாராயணாய என) சொல்லலாம். இப்போதும், எட்டெழுத்து என்ற **எண்ணிக்கையும்;** உகாரத்தின் "அவதாரணம்/ லக்ஷ்மீ" என்ற இரண்டு அர்த்தங்களும் **அகாரத்திலே,** முறையே 'ஸர்வம் வாக்யம் ஸாவதாரணம்' என்ற ந்யாயத்தாலும் / நித்ய யோகம் சொல்லும் ஸந்நியோகசிஷ்ட ந்யாயத்தாலும், **கிடைக்கும்.**

| பத/அக்ஷரங்கள் | விளக்கம் |
|---|---|
| ஓம்(ப்ரணவம்) (மூன்றெழுத்து வேதம்) | **-தனி மந்த்ரமாக** '1-2-3-1/2 மாத்ரைகளில்' முறையே கார்யரூப பகவான் i)உலகையும்/ ii)அந்தரிக்ஷத்தையும்/ iii)ஸ்வர்க்கத்தையும் சரீரமாக உடையவர்/ iv)காரணாவஸ்தையிலுள்ளவர் எனப் பொருள். ந்யாஸவித்யையில், ஸமர்ப்பணத்தைச் சொல்லும்.<br>**-ஒரே எழுத்தாய்,மற்ற மந்த்ரங்களோடு** சேர்ந்தபோது, பரமாத்மாவைக் குறிக்கும். மூலமந்த்ரத்தில் சேர்ந்திருக்கும்போது ஆத்மஸமர்ப்பணபரமாயும், ஸ்வரூபஜ்ஞாநம் உண்டாக்குவதால் க்ஷேத்வாநுஸந்தானபரமாயும்/ அதிகாரபரமாயும் இருக்கும்.<br>(அ,உ,ம என) **ஸகண்ட**மாகச் சொன்னால், குறிக்கும் அர்த்த விசேஷங்கள் இவ்வாறு: |
| அகாரம் | சொற்களுக்கு மூலமான அகாரம், ஸகல வஸ்துக்களுக்கும் மூலமான எம்பெருமானைக் குறிக்கும்; 'அவ-ரக்ஷணே' என்பதால் ஸர்வரக்ஷகனான பகவானைக் குறிக்கும். |
| 'அ'வின்மேல் **சதுர்த்தீ** | ஆத்மஸமர்ப்பணம், பரமாத்மாவுக்கு உத்தேச்யமென ப்ரமாணங்கள் சொல்வதால், அப்பொருளைக்காட்ட 'அ'வோடு 4–ம் வேற்றுமை உருபு சேர்க்கவேணும். மந்த்ரத்தில் அது, **அழிந்து நிற்கிறது.** ஆகையால், *"ப்ரணவத்தில் ஒரே உருபில் 'அ,ம' இருப்பதால், ஜீவ-பரமாத்ம ஐக்யம்தான்"* எனச் சொல்வது ஒட்டாது என்றாகிறது. |
| உகாரம் | -அவதாரணம் பொருளாகி, அயோக/ அந்யயோக வ்யவச்சேதங்கள் கிடைக்கின்றன. |

| | |
|---|---|
| மகாரம் | -அக்ஷரநிருக்தியால் 'க' 1-ம் தத்வ-வாசகமாய், 'ம' 25-வது தத்வ மான ஜீவனைக்குறிக்கும்.<br>-'மந-ஜ்ஞானே/ அவபோதனே, மஸ-பரிமாணே' என்ற வ்யாகரண வ்யுத்பத்தியால், ஸ்வரூபங்களான ஜ்ஞாநஸ்வரூபத்வ/ ஜ்ஞாநகுண கத்வ/ அணுத்வங்களால் ஜீவனாம்.<br>-ஜீவனைக்காட்டும் அஸ்மத் (அஸ்+ ம+ அத்) என்ற பதத்தின் முன்-பின் பகுதிகளான அஸ்-அத் என்பவை வேத இலக்கணப்படி மறைந்து, 'ம' என நிற்கிறது.<br>"ப்ரதாநம் நீயமானம் ஹி தத்ர அங்காநி அபகர்ஷதி' என்ற ந்யாய த்தாலே ப்ரதாநமான ஜீவனைச் சொன்னதால், அவனுக்கு சேஷ மான குணாதிகளும்; சேஷத்வத்துக்கு ஆச்ரயமான சேதநாசேதந ங்கள் எல்லாமும் சொல்லப்படுகின்றன. |
| நம:<br>(ப்ரணவ ஸார மான உகாரத் தின் விவரணம்) | ஸ்தூலார்த்த: - உயர்ந்தோனை வணங்கும் செயல்; பகவானை வணக்கும் செயல்.<br>- பகவான் எனக்கு சேஷீ; நான் அவனுக்கு சேஷன் என்ற எண்ணம்;<br>-வாயால் 'நம:' எனச்சொல்லி, மனதால் நினைத்து, உடம்பால் வணங்கும்போது பூர்ணமான சரணாகதி.<br>ஸூக்ஷ்மார்த்த: (ந+ ம: எனப் பிரித்துச் சொல்லும்) - நான் எனக்கு சேஷமல்லன்; -ஒன்றும் எனக்கு சேஷமில்லை;<br>-ஒன்றுக்கும் நான் சேஷீயல்ல;<br>-எனக்கு ஸ்வாதந்த்ர்யமில்லை.<br>பரயோஜனை- (ந+ம+:) = பகவானையடைய+ முக்ய+ உபாயம்<br>['ந' என்றால் உபாயம்; 'ம' என்றால் ப்ரதாநம்; விஸர்க்கம் எம்பெருமானைக் குறிப்பது.] |
| | -ரூடி அர்த்தம் – ஸர்வாந்தர்யாமியான எம்பெருமான்<br>-யோகார்த்தம் – நார (ந, ர) + அயநம் = நாராயண:<br>▪ நர:= ர (ரீங்-க்ஷயே) என்பதால், ஸ்வரூபவிகாரத்தாலே அழியும் தன்மையுள்ள அசித் என்றாகி, 'ந' என்று அத் தன்மை இல்லா ஜீவன்' என்றர்த்தம்; அப்போது, நர ஸமூஹ: = நாரா: (நரர்கள் கூட்டம்) என்றாகிறது.<br>▪ நர: = அழிவற்ற தன்மையினாலும், 'ந்ரு-நயே' (நல்வழியில் நடத்திச் செல்பவன்) என்பதாலும், பரமாத்மாவைச் சொல் லும்போது, 'நர ஸம்பந்தி/நராத் ஜாயதே' என்ற காரணங்க |

| | |
|---|---|
| நாராயண | ளால், நாரா: என்று ஸகல சேதநாசேதநங்களைக் குறிக்கும்.<br>▪ நாரம் = ஜலம்; இங்கு, "ஜலத்தை உண்டாக்கிய" பகவான்.<br>**அயநம்** = ப்ரவேசிக்கப்படும் வஸ்து;<br>**அயநம்** = 'அய பய - கதௌ' என்ற தாதுவிலிருந்து :-<br>➢ 'ஈயதே அநேந' = (இவன்மூலம் அடையப்படுகிறது) என்பதால் **உபாயம்** ;<br>➢ 'ஈயதே அஸ்மிந்' = (இவனிடத்தில் லயம் அடைகிறது) என்பதால் **ஆதாரம்** ;<br>➢ 'ஈயதே அஸௌ'= (இவன்அடையப்படுகிறான்)என்பதால் **உபேய**மாகிறது.<br>**ஆக, நாராயண:** = (பஹுவ்ரீஹி) நாரா: அயநம் யஸ்ய = 'நாரங்கள் எவனுக்கு இருப்பிடமோ', என்பதால், உபயவிபூதி யோகம் / ஹேய ப்ரத்யநீகத்வ- கல்யாணைகதாநத்வம்; மற்றும், *சாரீரக சாஸ்த்ரத்* தின் நான்கு அத்யாயங்களால் நிரூபிக்கப்பட்ட ஜகத்கரணத்வம் (நராஜ்ஜாதானி தத்வாநி என்பதால்); அபாத்யத்வம்(க்ஷயநிஷேத வாசக நர சப்தத்தால்); உபாயத்வ- உபேயத்வம் (அயந சப்தத்தால்) உடைய எம்பெருமான், எனப் பொருள்படுகிறது.<br>- நரனான பகவானிடமிருந்து நாரம் (ஜலம்) உண்டானதினாலும்; பகவான் ஜலத்துக்குள் இருந்ததினாலும், **நாராயண**ன் ஆகிறான். (இங்கு ஜலம் என்பது மற்ற தத்வங்களுக்கும் உபலக்ஷணம்)<br>**நாராயண:** = (தத்புருஷ) நாராணாம் அயநம்= 'நாரங்களுக்கு இருப்பிடம்' என்னும்போது, அயந சப்தத்தில் உபயுக்த ஸௌலப்ய - பரத்வங்கள் குறிக்கும். அயந சப்தம் நித்ய நபும் ஸகமானாலும் ரிஷிகள் சொன்ன நிருக்தபலத்தாலே புல்லிங்கம்.<br>**-யோகரூட்யர்த்தம்** - 'நமஸ்'ஸில் *சாப்த*/ஆர்த்தமாகத் தோற்றின சரணாகதியாலே ப்ரீதனும்; 'நாராயணாய'வில் சதுர்த்தீயில் தோற்றின கைங்கர்யத்தை ஏற்பவனும்; அகாரத்தால் சுருங்கச் சொன்ன நிரபேக்ஷ சரண்யனுமானவனின் ஸர்வரக்ஷகத்வ- ஸர்வ சேஷித்வம் சொல்கிறது. |
| ஆய<br>(மந்த்ரத்தின் | சதுர்த்தீக்கு பொதுவாக "தாதர்த்யம்' (அவனுக்காக) பொருள்; மந்த்ரத்துக்கு சக்தியாவதால், *பல*ன் கிடைக்க காரணம் (***பலஸித்தி ஹேது***) என்னவேணும். மேலும், இதை **ஸம்ப்ரதாநார்த்தை**யாக |

| | |
|---|---|
| சக்தி) | (தீயமாநார்த்த சேஷித்வம் ஸம்ப்ரதாநத்வமிஷ்யதே–கொடுக்கப் படும் வஸ்துவுக்கு சேஷியாயிருக்கை என) அஹிர்புத்ந்யனின் வ்யாக்யாநம். |

## திருமந்த்ர வாக்யங்களுக்கு 10 வித யோஜனைகள்

| யோஜனை | வாக்ய விளக்கம் |
|---|---|
| ஒரே வாக்யம் :<br>1.உபாயபரம் – ப்ரணவ (ப்ரதிபாத்ய விசிஷ்டாய) நாராயணாய நம: | 'நம:', ஸமர்ப்பணபரம்; 'ப்ரணவப்ரதிபாத்ய நாராயண னின்பொருட்டு ஸமர்ப்பயாமி' என செய்கையாக ஸ்தூலார்த்தத்தில் உபாயபரம்। சேஷத்வ ஸ்வரூப ஜ்ஞாந / புருஷார்த்தமின்றி உபாயம் ஸித்திக்காதாகை யால் அவை ஆர்த்திகங்கள். |
| 2. உபேயபரம் - ப்ரணவ (ப்ரதிபாத்ய விசிஷ்டாய) நாராயணாய நம: | 'நம:', ப்ரஹ்வீபாவ அஞ்ஜலிபத்த நமச்சப்தோச்சார ணாதிரூப சேஷவ்ருத்தி பரம்। "சேஷவ்ருத்தி செய்து கொண்டு ஹ்ருஷ்டா பவந்தி" என்று பொருள். சேஷத்வ ஸ்வ ரூப ஜ்ஞாந/ உபாயமின்றி சேஷவ்ருத்தி ஸித்திக்காதாகையால் அவை ஆர்த்திகம். |
| இரண்டு வாக்யங்கள் :<br>3. ஸ்வரூபபரம் –<br>3.1. ஆய நாராயணாய உம்<br><br>3.2. நம: | "அகார-நராயணசப்தார்த்த ஸர்வரக்ஷக- ஸர்வாதார - ஸர்வசேஷிக்கே நான் நிருபாதிக அநந்யார்ஹ சேஷன்" என்று ஸ்வரூபபரம். புருஷார்த்தம் ஆர்த்திகம்.<br>-"நான் எனக்குரியனல்லேன்; மற்றொன்றுக்கும் நிருபாதிக ஸ்வாமியும் ஸ்வதந்த்ரனும் அல்லேன்" என்று ஸ்வரூபபரம். உபாயம் ஆர்த்திகம். |
| 4. ஸமர்ப்பணபரம் -<br>4.1. ஆய நாராயணாய உம்<br><br>4.2. நம: | "ஆத்மஸமர்ப்பண யாகத்தில் ஹவிஸ்ஸாகிற நான் அகாரவாச்யனான நாராயணனுக்கே பரமாக ஸமர்ப்பிக்கப்படுகிறேன்"<br>-"என்னைக் காக்கும் பொருப்பு எம்பெருமானுடை யதே; எனதில்லை." |
| 5. புருஷார்தப்ரார்த்தனாபரம்<br>5.1.ஆயநாராயணாயஉம்(स्यां)<br>5.2. நம: | "அகாரவாச்யனான நாராயணனுக்கே, கைங்கர்யம் செய்பவனாக ஆவேன்" – இஷ்டப்ராப்தி ப்ரார்த்தனாபரம்.<br>-"எனக்காக அல்லேன்" -ஸ்வார்த்த-ஸ்வாதீந கர்த்ருத் வாதி அநிஷ்ட நிவ்ருத்தி ப்ரார்த்தனாபரம். |

| மூன்று வாக்யங்கள் : | |
|---|---|
| 6. **ஸ்வரூப-புருஷார்த்தபரம்**<br>6.1. ப்ரணவம்<br>6.2. நம:<br>6.3. நாராயணாய(பவேயம்) | -"அகாரவாச்யனான நாராயணனுக்கே, நான் உரியேன் ஆவேன்;" } **ஸ்வரூப பரம்**<br>-"நான் எனக்கு உரியேனல்லேன்." (உபாயம்/ஆர்த்திகம்)<br>-"பகவானுக்கு ஸர்வதேச/கால/உசித/விதகைங்கர்யம் எழவேணும்." **புருஷார்த்தபரம்** |
| 7. **ஸ்வரூப-புருஷார்த்தபரம்**<br>7.1. ப்ரணவம்<br>7.2. நம:(ஸ்யாம்/ ஸ்யாத்)<br>7.3. நாராயணாய(ஸ்யாம்) | -"அகாரவாச்யனான நாராயணனுக்கே, நான் உரியேன் ஆவேன்;" **ஸ்வரூபபரம்**<br>-"நானும் எனதும் எனக்குரியனல்லன்" இது **அநிஷ்ட நிவ்ருத்தி ப்ரார்த்தநாபரம்**<br>-"நாராயணன் பொருட்டு ஆவேன்" இது **இஷ்ட ப்ராப்தி ப்ரார்த்தநாபரம்** |
| 8. **ஸ்வரூப- உபாயபரம்**<br>8.1. ப்ரணவம்<br>8.2. நம:<br>8.3. நாராயணாய | -"அகாரவாச்யனான நாராயணனுக்கே, நான் *சேஷன்*". இது **ஸ்வரூபபரம்**<br>-"ரக்ஷணத்தில் எனக்குஸ்வாதந்த்ர்ய மில்லை; நீயேரக்ஷகன் } (கோப்த்ருத்வவரணத்தால்உபாய<br>-"நாரங்களின் ரக்ஷணத்தில் உபாயமானவன்". [பரம் |
| 9. **ஸமர்ப்பண-புருஷார்தபரம்**<br>9.1. ப்ரணவம்<br>9.2. நம: (ஸ்யாம்)<br>9.3. நாராயணாய(ஸ்யாம்) | -ரக்ஷகனுக்கே ஜீவன் ஸமர்ப்பணம்- **ஸமர்ப்பணபரம்.**<br>-"எனக்காக நான் அல்லன்." இது **அநிஷ்டநிவ்ருத்தி ப்ரார்த்தநாபரம்.**<br>-"நாராயணனின் சரண கைங்கர்யத்துக்கே ஆவேன்." இது **இஷ்டப்ராப்திபரம்.** |
| 10. **ஸ்வரூப-உபாய-புருஷார்த்தபரம்**<br>10.1. ப்ரணவம்<br>10.2. நம: (ஸ்யாம்/ஸ்யாத்)<br>10.3. நாராயணாய (ஸ்யாம்) | -"அகாரவாச்யனான நாராயணனுக்கே, நான் *சேஷன்*". இது **ஸ்வரூபபரம்**<br>-"அவனை முக்கரணங்களாலும் சரணமடைகிறேன்." இது **உபாயபரம்.**<br>-"ஸ்வாமித்வ-பரத்வ ஆகாரமுடைய நாராயணனுக்கு ஆவேன்." **புருஷார்த்தபரம்.** |

[திருமந்த்ரத்தை ஒரே வாக்யமாகக்கொண்டு 2 அர்த்தங்களும்; இரண்டு வாக்யங்களாக 3 அர்த்தங்களும்; மூன்று வாக்யங்களாக 5 அர்த்தங்களும்; இவ்வாறு மொத்தம் 10 அர்த்தங்கள் அநுஸந்திக்கப்பட்டன.]

## விசேஷ விஷயங்கள்

- அயந சப்தத்துக்கு வாஸஸ்தாநம் என்று பொருளாகும்போது – பஹுவ்ரீஹியால் பகவானின் அந்தர்வ்யாப்தி (இவையுள்ள இடத்தில், தன்னை இல்லை எனவொண்ணாதபடி கலந்து நிற்கை) தோற்றுகிறது. இங்கு, அந்தர்வ்யாப்திக்கு அநுகுணமான ப்ரதிகாத அநர்ஹத்வம் (தடைக்குத் தகுதியற்ற தன்மை)தான் சொல்லப்படுகிறது: **அணு பரிமாணத்வம் இல்லை.**

  - தத்புருஷத்தால், பஹிர்வ்யாப்தி (இவையில்லாதயிடத்திலும், தான் உளனாகை) தோற்றும்.

- நாராயணனைக் குறிக்கும் 'அ-நர-அயந' என்ற மூன்று சப்தங்களும் "ரக்ஷகத்வ-காரணத்வம், நியந்த்ருத்வ-நேத்ருத்வம், உபாயத்வ-உபேயத்வம்"என்ற ஆகாரபேதத்தாலே ப்ரயோஜகம்.

- ஜீவனைக்குறிக்கும் 'மகார- நார' என்ற இரு சப்தங்களும் முறையே "ஜ்ஞாந ஸ்வரூப- ஜ்ஞாந குணகன், அணு, க்ஷயமில்லாத நித்யன், பரஸ்பர பேதமுள்ளவன்" எனக் காட்டுகின்றன.

- *சேஷிப்ராதாந்யம்*, ப்ரணவத்தில் அர்த்தமாகவும், நாராயணவில் சப்தமாகவும் கிடைக்கும்.

- நாரசப்தம், வ்யாபன-பரண-நியமந-ஸ்வாம்யாதிகளால் நர-நாரங்களுக்கிடையான **பேத**த்தைக் காட்டுவதால், "*அவைகளுக்கு ஸ்வரூப ஐக்யம்*" என்னும் குத்ருஷ்டிமதங்கள் தள்ளப்படுகின்றன.

- ப்ரஹ்மத்தைக் குறிக்கும் வேதவாக்யங்கள்– (ஸ்வரூபத்தைக் காட்டும்) ***சோதக***; (அதனிடமிருந்து உண்டானவை எனும்) **காரண**; (விதிக்கும்) **உபாஸந வாக்ய**ங்கள் என மூவகையாம். அதுபோல் நாராயண சப்தமும்– (க்ஷயரூப தோஷ அபாவத்தைக்காட்டும் நரசப்தம்) ***சோதக***; (நராத் ஜாதாநி தத்வாநி நாராணி என்று) **காரண**; (ஈயதே அநேந என்பதால் அயந சப்தத்தால் உபாயம் சொல்லி **கதி/ புத்தி கர்மத்வ**ங்களைக் குறிப்பதால்) **உபாஸந வாக்யார்த்த**ங்களைச் சொல்கிறது.

- 'நாராயண' பதத்தை ஸ்வர-வ்யஞ்ஜனமாக (ந்+அ+ர்+ஆ+ய்+அ+ண்+அ) பிரித்தாலும் அஷ்டாக்ஷரமாம்.

- மந்த்ரத்தில், 'ந' முதலான ஏழு அக்ஷரங்களுக்கு பூர்வர்கள் இப்படிப் பொருள் சொல்வர் :-

  -**ந** என்பதால், க்ஷேமங்களைக் கொடுத்தலும், பரமபதத்தில் பற்றுஉண்டாக்குதலும், அதற்கு விரோதியான குணங்களை நாசம் செய்தலும்;

  -**ம** என்பதால், அடியவர்க்கு மங்களத்தைச் செய்தலும், ஞானவிகாஸம் செய்தலும், பிறர் வணங்கும்படி செய்தலும்;

-நா என்பதால், நாஸ்திகத் தன்மையை விடுதலும், எப்போதும் பகவானுக்கு கைங்கர்யம் செய்தலும், பரமபதம் சேர்க்கும் ஆசார்யத்வமும்;

-ரா என்பதால், பகவானிடம் உடனே ப்ரீதியுண்டாக்குதலும், மற்றவையில் ஆசை விடுதலும், உலகைக் காத்தலும்;

-ய என்பதால், பகவானை அடைவதில் ஊற்றமும்- பயனும்;

-ணா என்பதால், பகவானைத் துதிப்பதும், அதற்குத் தேவையான வாக்-ஸித்தியும்;

-ய என்பதால், யக்ஷ-ராக்ஷஸ-வேதாள-பூதங்கள் பயந்து ஓடுதலும், சொல்லப்பட்டன.

பலன் : திருமந்த்ரத்தில் யதார்த்தஜ்ஞாநமும் நிஷ்டையுமுடையவரை ஆதரிக்கும் தேசத்தில், "ப்ரதாந வ்யாதிகளாக எடுத்த ராகாதிகளும், ஸத்துக்களுக்கு ஸ்ரீ என்று ஓதப்பட்ட ஜ்ஞானஸம்பத்தில் குறைவும், ஆத்மாபஹாராதிகளைப் பண்ணும் மஹாதஸ்கரரான அஹங்காராதிகளும்" நடையாடாது.




திருபத்ரி நாராயணன் - திருவதரி

## 28. த்வயாதிகாரம்

"திருமால் பாதமிரண்டும் சரணெனப்பற்றி, அடிமை" கொள்ளுதல்

**த்வயம் எனப் பெயர் வந்தமை :**

- மந்த்ரத்தின் முதல் பகுதி பகவானை சரணமடைவதையும், இரண்டாவது அவனுக்கு கைங்கர்யத்தை செய்ய வேண்டுவதும், இப்படி பகவானையே **இரண்டு (உபாய-உபேய) மாகப் ப்ரதிபாதிப்பதால்;**
- சரணவரணாதி **அங்க**ங்களையும் ஸ்வரூப-பர-பலஸமர்ப்பணமான **அங்கி**யையும் **சொல்வதால் (-** அருளாளப்பெருமாள் எம்பெருமானார்**);**

**த்வயத்தின் பெருமை :**

- ✓ இது ச்ருதிமூலமான, 25 எழுத்தான **தாந்த்ரிக மந்த்ரம்** । ஸ்ரீப்ரச்நத்தில் ப்ரதமாசார்யனான பகவான் லக்ஷ்மீக்கு உபதேசித்ததால், இதை **பூர்வாசார்ய வாக்யம்** என்றும் சிலர் சொல்வர்.
- ✓ இம்மந்த்ரத்தின் **ஸக்ருதுச்சாரணமே உத்தாரகம்** என்பது சாஸ்த்ரஸித்தம் ।
- ✓ இம்மந்த்ரத்தால் **பரஸமர்ப்பணத்தோடு கூடிய ஆத்மஸமர்ப்பணம், விவக்ஷிதம்**
- ✓ மூலமந்த்ரம் சுருக்கியதை இது பூர்ணமாக ப்ரகாசிப்பதால், மற்ற மந்த்ரங்களுக்குள் **ப்ரதாநம்** ।
- ✓ ஸ்ரீ பாஷ்யகாரரின் **சரணாகதி கத்யம், த்வயத்தின் விவரணமே .**

| பத/ அக்ஷரங்கள் | விளக்கம் |
|---|---|
| (பூர்வகண்டத்தில்) ஸ்ரீமந்நாராயண = ஸ்ரீ +மதுப் ப்ரத்யயம் + நாராயண | - வேதங்கள் ஸர்வசரண்யமான பரதத்வத்தை, ச்ரிய:பதித்வ லிங்கத்தாலும் நாராயண சப்தத்தாலும் நிர்ணயித்தன. இந்த இரண்டையும் கொண்ட இப்பதத்தில் சொல்லும் **லக்ஷ்மீ விசிஷ்டத்வம்**, மந்த்ரத்தின் இரு ஸ்தலங்களிலும் **விசேஷணம்**தான்.<br>- த்வயத்தில் 'ஸ்ரீ' சப்தத்துக்கு – உத்தரகண்டத்தில் ப்ராப்யதைக்குத் தகுந்த உபய விபூதி சேஷித்வ-அதிசயகரத்வாதிகளும், பூர்வகண்டத்தில் பகவானின் உபாயபாவத்துக்குத் தகுந்த புருஷாகாரத்வ-உபாயவிரோதி அநிஷ்டநிவர்தகாதிகளும் (ஸ்வாமித்வ நிபந்தன **ஆநுகூல்ய ஸங்கல்ப- ப்ராதிகூல்யவர்ஜன**ங்களும்) அநுஸந்திக்க வேணும். |

| பத/அக்ஷரங்கள் | விளக்கம் (தொடர்ச்சி) | | |
|---|---|---|---|
| ஸ்ரீ | (தாது)<br>ச்ருட் = ச்ரவணே | (க்ரியாபதம்)<br>ச்ருணோதி | -ஆச்ரிதரின் ஆர்த்த த்வநியைக் கேட்கிறாள்.<br>-எம்பெருமானிடம் உபதேசம் பெறுகிறாள்.<br>-பகவானிடம் லோகஹிதம் கேட்கிறாள். |
| | | ச்ராவயதி | -நமக்காக பகவானிடம் ப்ரார்த்திக்கிறாள்.<br>- பகவானிடம் பெற்ற உபதேசத்தைத் தக்க தருணத்தில் அவனிடம்விண்ணப்பிக்கிறாள்.<br>-விபரீதரான ஜீவனுக்கும் உபதேசிக்கிறாள். |
| | ச்ரிஞ் = ஸேவாயாம் | ஸ்ரீயதே | -நம்மால் அடையப்படுகிறாள் (மாத்ருத்வ ப்ரயுக்த வாத்ஸல்யத்தாலே புருஷகாரபூதையாகிறாள் |
| | | ச்ரயதே | -பகவத்வால்லப்யம் தோற்ற அதிசயகாரிணியாய்/ சேஷியாய் பகவானை ஆச்ரயிக்கிறாள்.<br>-எல்லா வஸ்துக்களையும் ஆச்ரயித்திருக்கிறாள். |
| | ச்ரூ =ஹிம்ஸாயாம் | ச்ருணாதி | -உபாய/ கைங்கர்ய விரோதிகளான பாபங்களைக் கழிக்கிறாள். |
| | ஸ்ரீங் = பாகே | ஸ்ரீணாதி | ஆச்ரிதர்க்கு கைங்கர்ய பர்யந்தமான குண பரிபாகத்தை உண்டாக்குகிறாள். |
| மதுப் (ப்ரத்யயம்) | பிராட்டியை விட்டுப்பிரியாத நித்யயோகத்தைச் சொல்லும். இதனால் ஸாபராதர் ஸந்தேஹமின்றி/நினைத்தபோது பகவானை ஆச்ரயிக்கலாம். | | |
| நாராயண | -இதற்கு மூலமந்த்ரத்தில் சொன்ன அர்த்தங்களெல்லாம் சேர்க்கவும். பூர்வகண்டத்தில் வாத்ஸல்ய-ஸ்வாமித்வ-ஸௌசீல்ய-ஸௌலப்ய-ஸர்வஜ்ஞத்வ-ஸர்வசக்தித்வ-ஸத்ய ஸங்கல்பத்வ-பரம காருணிகத்வ-க்ருதஜ்ஞத்வ-ஸ்திரத்வ-பரிபூர்ணத்வ-பரமோதாரத்வாதிகளையும்; உத்தரகண்டத்தில், ஸமஸ்தகுண விபூதிவிசிஷ்டனாக- ப்ரதாநமாக-சேஷித்வ-நிரதிசய போக்யத்வாதிகளை அநுஸந்திக்கவேணும். | | |
| சரணௌ | -உபாயமான பகவத் க்ருபையைத் தூண்டுவதாலும், மிக போக்யமாவதாலும், அகிஞ்சநன் பகவானின் திருவடிகளையே பற்றுகிறான்.<br>-'சரணௌ' என்றது திவ்யமங்களவிக்ரஹத்துக்கு உபலக்ஷணம்.<br>-முமுக்ஷுவுக்கு முக்யம், ச்ரிய:பதியின் ஸர்வஸ்மாத் பரத்வமும் நித்ய யோகமும். 'ஸ்ரீமந்நாராயண'வில் ஸௌலப்யம்கூடிய பரத்வத்தையும், 'சரணௌ'வில் நித்ய விக்ரஹயோகத்தையும் அநுஸந்திக்கவேணும்.<br>- 'நாராயண'வில் குண-விபூத்யாதிகள் தெளியாதார்க்கு திவ்ய மங்கள விக்ரஹமே இலக்கு.<br>▪ தன் திவ்யமங்களவிக்ரஹம் பகவானுக்கேகூட போக்யமாயிருக்கும். | | |

| | |
|---|---|
| | ▪ விக்ரஹத்துக்கு மட்டும்தான் **சுபத்வம்** (பாபங்களைப் போக்கும் தன்மை), + **ஆச்ரயத்வம்** (தன் ரூபத்தை ஸகல மநுஜ நயந விஷய மாகப் பண்ணுகை) இரண்டும் உண்டு. |
| **சரணம்** | அஹிர்புத்ந்ய வசநப்படி, இதற்கு உபாயம் என்று பொருள். ந்யாஸ வித்யையில் விசேஷித்து, **உபாயாந்தரஸ்தாநத்தில் பகவானை நிறுத்துகை** என்பர். |
| **ப்ரபத்யே** | பத்ல் = கதி ➡ புத்தி = ரக்ஷிஷ்யதீதி விச்வாஸ: । ப்ரகர்ஷமான விச்வாஸம் என்றாகி, இம் **மஹாவிச்வாஸ**த்தை முன்னிட்ட **உபாய ப்ரார்த்தனை**யும் **கோப்ருத்வ வரண**மும் **கார்ப்பண்ய**மும் பொருளாம். |

இப்படி, **பூர்வகண்ட**த்தாலே ஸர்வ சரண்யத்வம், சரணாகதி ஸ்வரூபம், அதன் பரிகர ங்கள், அதிகாரி விசேஷம், அநந்யோபாயத்வம் ஆகியவை **சொல்லப்படுகின்றன**.

| | |
|---|---|
| **உத்தரகண்டத் தில் ஸ்ரீ** | பூர்வகண்டத்தில் **ச்ருண்= ஸேவாயாம்** என்றபடி ஸேவ்யாதிகளைச் சொல்லி **கைங்கர்யத்தைப் பெறுகிறாள்** என்பதை அநுஸந்திக்கவும். |
| **மதுப்** | உபயவிபூதிவிசிஷ்டமாய் ஆத்ம ஹவிருத்தேச்யமாய் சேஷத்வ ப்ரதி ஸம்பந்திகளாய் கைங்கர்யத்துக்கு **ப்ரதாந ப்ராப்யராய் இருப்பவர் இவ்விசிஷ்ட தம்பதிகள்தான்**" என்கிறது. |
| **நாராயணாய** | -ப்ராப்யதைக்குத் தகுந்த **ஸ்வாமித்வாதி**களையும் ஸர்வப்ரகார **நிரதிசய போக்யதை**யையும் காட்டுகிறது. -'ஆய', **பரிபூர்ணாநுபவ பூர்வக கைங்கர்ய**த்தை (இஷ்ட ப்ராப்தி) ப்ரார்த்திப்பதால் 'பவேயம்' என சேர்க்கவும். |
| **நம:** | **கைங்கர்யத்தில் ஸ்வாதீந-ஸ்வார்த்த கர்த்ருத்வ/ போக்த்ருத்வங்களை கழித்து**, "ந மம கிஞ்சித் ஸ்யாம்" என்கிறது. |

பூர்வகண்டத்தில் தோற்றின சரணாகதியால் கிடைக்கும், பகவத்ஸ்வரூபத்துகுத் தகுந்த பலவிசேஷத்தை, "தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே" என ப்ரார்த்திப்பதே **உத்தரகண்ட**த்தின் கருத்து.

<u>**த்வயத்தின் திரண்ட பொருள்**</u>: **"ஸர்வ ஸ்வாமியான ஸ்ரீமந்நாராயணன் திருவடிகளில் ஸர்வதேச-கால-அவஸ்தோசித ஸர்வவித கைங்கர்யத்துக்கும் விரோதியான ஸர்வமும் கழிந்து பரிபூர்ண கைங்கர்யம் பெறுகைக்கு, அகிஞ்சநனான அடியேன் ஸ்வரக்ஷா-பரணாதிகளில் எனக்கு அந்வயம் அறும்படி, ஸ்ரீமந்நாராயணன் திருவடிகளில் அங்கபஞ்சகமான ஆத்மரக்ஷாபர-பல ஸமர்ப்பணம் பண்ணுகிறேன்."**

<u>*பலம்*</u>: ஆக, **த்வயத்தை அநுஸந்திப்பதைக் காட்டிலும் ச்ரேஷ்டத்தையளிப்பது ஒன்றுமில்லை.**

## 29. சரம ச்லோகாதிகாரம்

*“மன்னருள் வாசகத்தால் மருளற்றமை”*

சரணாகதியை ஸ்பஷ்டமாக விதிக்கும் சரமச்லோகம் இங்கு விளப்படுகிறது.

**சரமச்லோகத்தின் அவதாரமும், பெயர் வரக் காரணமும் :**

ச்ரிய:பதியான ஸர்வேச்வரன் ஸாது ஸம்ரக்ஷண/ துஷ்ட நிக்ரஹத்துக்காகவும், தர்ம ஸம்ஸ்தாபநத்துக்காகவும் விபவாவதாரமாக துவராபதி மன்னனாகி, பாண்டவர்க்குத் தூதுபோய், அர்ஜுநனை ரதியாக்கித் தான் ஸாரதியாய் எளியனாம்படி நின்று, சரணாகதர் எல்லோரும் தன்னை அடைய ஒரு வ்யாஜத்தை எதிர்பார்த்திருந்தான். அத் தருணத்தில், போரில் நிச்சயமாக மடியப்போகும் தன் ஆசார்ய-பந்துக்களைக் கொல்வதால் “பாபம் நேரும்” என (தகாத தருணத்தில்/ தவறான பயத்தினால்) கலங்கின அர்ஜுநன், “தனக்கு ஹிதத்தைத் தெளிவிக்கவேணுமென” ப்ரார்த்திக்க, பகவானும் ஆத்மஸ்வரூபத்தின் நித்யத்வத்தையும், பரமபுருஷார்த்தம்பெற பரம் பரையாகக் காரணமான கர்ம-ஜ்ஞாந யோகங்களையும், நேர் உபாயமான பக்தியோகத்தையும் ஸபரிகரமாகச் சொன்னான்.

இந்த உபாயங்களுக்கு யோக்யதை இல்லாதவர்களுக்காக, கடைசியில் “**தன் திருவடிகளைப் பெறுகைக்கும் மற்றும் விரும்பியவை எல்லாவற்றுக்கும் பொதுவான ஸாதநமாய், அதற்குண்டான ஐந்து அங்கங்களைத் தவிர வேறு எந்த பரிகரமும் வேண்டாததாய், செய்வதற்கு எளியதாய், ஒரு நொடியில் பண்ணக்கூடியதான**” **ரஹஸ்யதம** உபாயத்தை உலகத்தோர் உய்யும் வகையாய் உபதேசித்தான். **இவ் விஷயத்தில் இதற்கு மேல் கேட்க வேண்டியது ஒன்றுமின்றி முடிவாய் விதித்ததனால்,** இதற்கு **சரம ச்லோக**மெனப் பெயர் வந்தது.

| பத/ அக்ஷரங்கள் | விளக்கம் |
|---|---|
| **ஸர்வ தர்மாந்** | தர்மமாவது- சாஸ்த்ரத்தினால்மட்டுமே அறியவேண்டிய புருஷார்த்த ஸாதநம். 'ஸர்வ' சப்தத்தாலே அங்கிகளான பல்வேறு தர்மங்களைக் குறித்த போதிலும், **இந்த ஸந்தர்பத்தில் ஸத்வித்யை- தஹர வித்யாதி பக்தி யோகமோ, அல்லது பரிகர-பஹுத்வமோதான் விவக்ஷிதம்.**<br>-'ஸர்வ' சப்தம், 'ஏக' சப்த ப்ரதிஸம்பந்தியான தர்ம கார்த்ஸ்நயமாம் |

| பத/ அக்ஷரங்கள் | விளக்கம் |
|---|---|
| **பரித்யஜ்ய** (பரி+ த்யஜ்ய) | -**த்யாக**மென்றால், அகிஞ்சந நிலைமையைக்கண்டு, வேறு எந்த உபாயத்திலும் உண்டாகும் **ஆசையின்மை** (நைராச்யம்) – ஒரு கார்யத்தில் ஆசையாலே ப்ரவ்ருத்தித்தால், அதில் ஆசையை விடுகை 'த்யாகம்'தானே ! <br> -**பரி** என்பதால் அத்யந்த அகிஞ்சனனுக்கு ஸர்வகால/ ஸர்வ ப்ரகாரத்தாலும் **ஆசையில்லாமையின் அதிசயம்** சொல்லப் படுகிறது. |

**ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய–**

**அதிகார பக்ஷம்** – முமுக்ஷுவின் **ஆகிஞ்சந்யாதிகாரத்தை** நினைத்து, மேலே 'மா சுச:' என்கிறது.

**அநுவாத பக்ஷம்** - ஏற்கனவே உள்ள முமுக்ஷுவின் நிலையை நினைத்து, மேலே 'மாம் ஏகம்' என்கிறது.

**விதி பக்ஷம்** – 'கார்ப்பண்யமாகிற **ப்ரபத்யங்க**த்தை விதிப்பது' [அதாவது 'ஸர்வ தர்மங் களும் யோக்யதா பர்யந்தமாகக் கழித்தபடியை நீ முன்னிட்டுக்கொண்டு'] என்பதிலோ; அல்லது "(ஆசமநம்/ *சௌசம்* போன்ற) வேறொரு தர்மாநுஷ்டாநத்தையும் எதிர்பாராத ப்ரபத்தியின் **நைரபேக்ஷ**த்திலே"யோ நோக்கு.

இவ்வளவால், *"கர்ம-ஜ்ஞாந-பக்தியோகங்களாகிற தர்மங்களின் ஸ்வரூபத்யாகம், ப்ரபத்திக்கு அங்கமாக விதிக்கப்படுகிறது"* என்று சொல்லும் *விதிபக்ஷம் (!)*, ***சாஸ்த்ர/*** **ஸம்ப்ரதாய விருத்தம்** என்பதால் நிராகரிக்கப்பட்டது.

| | |
|---|---|
| **மாம்** | -'மாம்/ ஏகம்' பதங்களில் பகவானின் **ஸௌலப்ய/ ஸ்வாதந்த் ரயங்கள்** அடைவே ப்ரதாநமாகவும், ந்யாஸவித்யையாம் ப்ரபத்தி க்கு விசேஷ ஆகாரமான நிரபேக்ஷ உபாயத்வத்துக்குத் தேவை யான "ஸர்வரக்ஷகத்வ-ஸர்வ சேஷித்வ- ச்ரிய:பதித்வ-நாராயண த்வ-ஸர்வஜ்ஞத்வ-ஸர்வ சக்தித்வ-பரம காருணிகத்வ-ஸௌசீல்ய/ வாத் ஸல்ய/ திவ்யமங்கள விக்ரஹவிசேஷத்வங்களும், விவக்ஷித ங்கள். <br> -'மாம்' என்பதில்,'என்றோ நம்மை இவர்கள் **அபேக்ஷி**ப்பது' என **ஆச்ரித ரக்ஷண**த்துக்கு ஸமயத்தை எதிர்ப்பார்த்து எம்பெருமான் **அபிமுக**னாய் நிற்கும் நிலை ஸூசிதம். |

| பத/ அக்ஷரங்கள் | விளக்கம் |
|---|---|
| (-சாதனமும் நற்பயனும் நானேயாவன்; -சாதகனும் என் வயமாய் என்னைப் பற்றும்; | ✓ ப்ராப்யனான பகவானே ப்ராபகனானபடிக்கு, **உபாய-பல ஐக்யம்** சொல்கிறது. |
| -சாதனமும் சரணநெறி அன்று -சாதநங்கள் இந்நிலைக்கோர் இடையினில்லா; | ✓ 'கேவலம்' என்ற பொருளில் **அவதாரணார்த்தம்** சொல்கிறது. இதனால் ஜீவன், *சாஸ்த்ர*ம்சொன்னபடி வசீகரணார்த்தம் உபாயம் அநுஷ்டிக்கையாலே ரக்ஷணத்தில் (ஜ்ஞாந-சிகீர்ஷா-ப்ரயத்நங்கள் மூன்றும் சேர்ந்ததான) கர்த்ருத்வம் தோற்றி, ஸ்வாதீந கர்த்ருத்வமுடைய *சரண்யனோடு ஒக்க தன்னையும் உபாயமாக எண்ணிவிடும்* உபாய த்வித்வம் கழிக்கிறது. [எம்பெருமானாலே ப்ரேரிதனாய், அவன் ஸஹகரியாதபோது நீட்ட-முடக்கமாட்டாதே, அவன் கொடுத்த கரணங்களைக் கொண்டு அவன் காட்டின உபாயத்தை அவன் துணைசெய்ய அநுஷ்டித்து, அவன் கொடுக்கப்போகும் *பல*த்துக்கு அண்ணாந்திருக்கும் ஜீவன், அவனுக்கு துல்யமென எண்ணுவது விவேகம் அல்லவே! ஆக, பகவானுக்குள்ள - ஒரு கார்யத்தில் ஜீவனை ப்ரவர்த்திப்பிக்கும் **காரயிதா**/ *பலப்ரதா*நாதிகளில் ப்ரவர்த்திக்கும் **கர்த்தா**/ ஒரு கார்யத்தில் ப்ரவருத்தனான ஜீவனை விலக்காத **உபேக்ஷகன்**/ இசைந்திருக்கும் **அநுமந்தா**/ இளந்தலை சுமப்பவனுக்கு, தான் பெருந்தலை சுமப்பவனாய் ப்ரவர்த்திக்கும் **ஸஹகாரீ** என்ற- ஐந்து நிலைகள் குறிக்கப்பட்டன.] |
| -வேறங்கம் இதனில் வேண்டா; | ✓ ஸாத்யோபாயமானதும்/ பகவதநுக்ரஹத்துக்குக் காரணமானதுமான **ப்ரபத்தி**யை ஸித்தோபாயனான **பகவானுக்கு ஸமமாக எண்ணுவதைத் தடுக்கிறது.** |
| -வேறெல்லாம் நிற்கும் நிலை நானே நிற்பன்) | ✓ அகிஞ்சனன்மேல் உபாஸநத்தைச் செய்யும் சுமையைச் சுமத்தாமல், தன் காருண்ய-வாத்ஸல்யங்களடியாக *பல*த்தைக் கொடுக்க **ஸங்கல்பி**க்கும் ***சரண்யன்* தனித்து நிற்கும் நிலை** சொல்கிறது. |
| ஏகம் | ✓ பரிபூர்ணனை *சரண*மாகப் பற்றும்போது (ஆநுகூல்ய ஸங்கல்பாதிகளைத்தவிர) **வேறு எந்த அங்கமும் ப்ரதாந உபாய கோடியில் சேராமை**யைக் குறிக்கிறது. |
| | ✓ சரமச்லோகத்தில் இரு இடங்களில் வரும் **ஸர்வ சப்த**த்துக்கு, ஏக *சப்*தம் **ப்ரதிஸம்பந்தி**யாய் நின்று, “உபாயாந்தரங்கள் கொடுக்கும் *பல*னையெல்லாம் **பகவான் ஒருவனேகொடுப்பன்**” என்றும்; “**உபாய/ ப்ராப்தி விரோதிகளைக் கழிப்பன்**” என்று பொருள் |

<table>
<tr><td></td><td>படுகிறது.<br>“பகவான் ஒருவனே உபாயம் என்றிருந்தபோதிலும், அவனுக்கு விசேஷணமாய் நின்று, பிராட்டியும் உபாயமாகிறாள்” என்பது ஸித்தோபாயசோதநாதிகாரத்தில் நன்கு விளக்கப்பட்டது.</td></tr>
<tr><td>சரணம்</td><td>த்வயாதிகாரத்தின் அர்த்தமெல்லாம் இங்கேயும் அநுஸந்திப்பது.</td></tr>
<tr><td colspan="2">மாமேகம் சரணம் என்பதால் முமுக்ஷுவின் அநந்யசரணத்வம் ஸித்திக்கிறது.</td></tr>
<tr><td>வ்ரஜ</td><td>-த்வயத்தின் 'ப்ரபத்யே' என்பதுபோல், ஸபரிகர ஆத்மநிவேதநம் பொருள்.<br>-இது, அர்ஜுனனைக்குறித்து விதிக்கப்பட்டாலும், ப்ரமாணங்களையொட்டி, “எல்லோர்க்கும்” பொருந்துமெனக்கொள்ளவேணும்.<br>-“எங்காவது சாஸ்த்ரஜந்ய-ஸம்பந்தஜ்ஞாந”மென இருந்தால், 'ஸம்பந்த அநுஸந்தான கர்ப்பமாக இருக்கவேணுமென்கைக்காகச் சொன்னது' என்பதே பொருள்.</td></tr>
<tr><td colspan="2">ஆக, பூர்வார்த்தத்தால் அகிஞ்சனந அதிகாரி க்ருத்யமான உபாயத்தை ஈச்வரன் விதித்தார், எனத் தேரும்.</td></tr>
<tr><td>அஹம்</td><td>'மாம்' என்றவிடத்தில் கீழே அநுஸந்தித்த அர்த்தங்களுடன், “அபராதம் பண்ணினவனை விலங்கிட்டுவைத்த ஸமாதிக தரித்ரனான நான், ஒரு வ்யாஜத்தாலே உல்லஸித காருண்யனாய் அபராதத்தைப் பொறுத்துவிடும்போது விலக்கவல்லாரில்லை; வேறொருவனாலே இவனை முக்தனாக்கவும் ஒண்ணாது” என்பதையும் கொள்ளவேண்டும். ஆக, ஸஹஜகாருண்யாதிகளை பேரணியாகவும் ப்ரபத்தியடியாக வந்த ப்ரஸாதவிசேஷத்தை 'அஹம்' சப்தம், பகவானின் அகடிதகடனா ஸாமர்த்யாதிகளை விவக்ஷித்துக் கொண்டு அவனுடைய ஸ்வாதந்த்ர்யமானது, ஸர்வ விரோதி நிராகரணார்த்தமாக முன்னே நிற்பதைக் காட்டுகிறது.</td></tr>
<tr><td>த்வா</td><td>“உபதேச பரம்பரையாலே சிதசிதீச்வர தத்வத்ரய விவேகம் பிறந்து ஐச்வர்யாதி புருஷார்த்தங்களின் அல்ப-அஸ்திரத்வாதி தோஷங்களைத் தெளிந்து, பகவத் ப்ராப்திரூபமான பரமபுருஷார்த்தத்தைப் பெற ஆவலுடன் இதற்கான கடின உபாயாந்தரத்தில் துவக்கற்று, பகவானிடம் பரந்யாஸம்பண்ணி க்ருதக்ருத்யனாய், கோரின பலலாபத்தைப்பற்ற இனி ஒரு கர்த்தவ்யாந்தரத்தில் ப்ராப்தியில்லாத உன்னை” எனப்பொருள்.</td></tr>
</table>

| பத/ அக்ஷரங்கள் | விளக்கம் |
|---|---|
| ஸர்வ பாபேப்ய: | -'அஹம்' என மோக்ஷப்ரதனையும், 'த்வா' என முமுக்ஷுவையும் சொல்லி, அடுத்து 'ஸர்வபாபேப்ய:' என பந்தகங்களைச் சொல்கிறது. முமுக்ஷு விஷயத்தில் பாபமாவது, சாஸ்த்ரத்தால் அறியும் ப்ரதிகூலப்ராப்தியும், அநுகூலநிவ்ருத்தியும், அநிஷ்ட பலமான ஸாம்ஸாரிக புண்யமுமாம்.<br>- பாபேப்ய: என்ற பன்மையினால், பாபங்களின் ஆநந்த்யம் சொல்கிறது;<br>- ஸர்வ சப்தத்தால், விரோதிவர்க்கமாக மூன்று சூர்ணிகையாலே சரணாகதிகத்யத்தில் விளக்கப்பட்டதும் ப்ராப்திவிரோதியான கர்மத்துக்கு காரண-கார்யமாக வருவதுமான ஸ்தூல/ ஸூக்ஷ்மரூப ப்ரக்ருதி ஸம்பந்தத்தையும் பாபராசியில் சேர்க்கிறது.<br>-ஸர்வபாப சப்தத்தில், உபாஸந பூர்த்திக்காக ப்ரபத்தி செய்தவனின் உபாயவிரோதிகள்; மோக்ஷார்த்தப்ரபந்நனின் ப்ராப்தி விரோதிகள்; ப்ரதிகூல அநுபவஹேதுக்கள் ஆகியவை சேரும்.<br>• **உபாயவிரோதி**யாவது – ' இவன் நம்மைத் தெளிந்து வசீகரிக்கக் கடவனல்லன்' என்ற ஈச்வர ஸங்கல்பம்;<br>• **ப்ராப்தி விரோதி**யாவது – 'தவறுசெய்த இவன் நம்மை அடையக் கடவனல்லன்' என்ற ஈச்வர ஸங்கல்பம்;<br>• **ப்ரதிகூல அநுபவஹேது**க்களாவன – அந்தந்த ப்ரதிகூல அநுஷ்டாநங்களினால் பகவானுக்கு உதிக்கும் பலப்ரதான ஸங்கல்பம். |
| மோக்ஷயிஷ்யாமி | பாபங்களினின்று விடுவிப்பது என்பது- பகவானைப் பொறுத்த வரையில் ஜீவனின் அநாதி விபரீத அநுஷ்டாநத்தாலே பிறந்த நிக்ரஹத்தை விடுதல் என்ற அபிப்ராய விசேஷம். இதனால் நிக்ரஹ கார்யமான அவித்யாதிகள் நிவ்ருத்தங்கள். ஜீவனைப் பொறுத்தவரையில், ஜ்ஞாநவிகாஸாதிகள் ஏற்படுவதும், விரும்பிய போது முக்தனாக்கப்படுவதுமாகும். முமுக்ஷு விஷயத்தில், நிக்ரஹங்கள் நிவ்ருத்தமானால் நிக்ரஹகார்யமான அசித் ஸம்ஸர்க்கம் கழிந்து, ஸ்வத:ப்ராப்தமான பரிபூர்ண பகவதநுபவம் ஆவிர்ப்பவிக்கிறது. |
| மா சுச: | "உபாயாநுஷ்டாநத்துக்கு முன் அதிகாரத்தைப்பற்றியதும், மத்யத்தில் ப்ரபத்தி உபாயத்தைப் பற்றியதும், உத்தரக்ருத்யத்தில் பல ஸித்தியைப்பற்றியதும்– இவ்விதமான எல்லா வருத்தங்களும் கழிந்து, பகவதநுக்ரஹபாத்ரமான ஜீவன், ப்ரபத்திக்குப் பிறகு |

| | |
|---|---|
| | சோகித்தால் ப்ரபத்திக்கு முன்பு வருந்தாதது போன்று அநிபுண க்ருத்யமாய், உபாய வைலக்ஷண்யத்துக்கும்/பரஸ்வீக்ருத ஸித்தோ பாயனின் ப்ரபாவத்துக்கும்/ ந்யஸ்த பரனான இவன் ஸ்வபாவ த்துக்கும் பொருத்தமில்லாததாம்" எனப்பொருள். இப்படிப்பட்ட :- |

| சோகங்களும் | அவை கழியும் படிகளும் |
|---|---|
| 1.சரணாகதி தர்மத்துக்கு ஜாதி-வர்ண -ஆச்ரமாதி நியமங்கள் இருக்குமோ ! | மோக்ஷம் பெற ஆசையும் ஸர்வேச்வரனிடம் பூர்ண விச்வாஸமும், தன் ஆகிஞ்சந்ய ஜ்ஞாநமு முள்ள எல்லோரும் அதிகாரி என்பதால். |
| 2.ப்ரபத்தி உபாயம், செய்ய கஷ்டமா யிருக்குமோ! | ப்ரபத்தி- நொடியில்/ ஒரேமுறை/ வேறு அங்க உதவியின்றி செய்வதாய், விரும்பிய பலனளிக் குமெனத் தெளிவதால். |
| 3.லகூபாயமான ப்ரபத்திக்கு பகவான் பலன் கொடுப்பானா ! | ப்ரபத்தியால் வசீகரிக்கப்பட்ட பகவான், ஸர்வ ஸுலபனும், மிக்க விச்வஸநீயனும், பரமகாரு ணிகனும், அளவுபடுத்தப்படாத ஸ்வதந்த்ரனும் ஸித்தோபாயனுமெனத் தெளிவதால். |
| 4. ஆஜ்ஞானுஜ்ஞா கைங்கர்யங்க ளில் குறையால் ப்ரபத்தி பலன் குறைவுபடுமோ ! | இந்த கர்மங்களெல்லாம் ப்ரபத்திக்கு அங்க மல்ல எனத் தெளிவதால். |
| 5.புத்திபூர்வ உத்தராகம் நேர்ந்தால் என்ன செய்வது? | ப்ரபத்தி அநுஷ்டிக்கும்போதோ, பிறகு தனியாக வோ ப்ரபத்தி செய்தால் கழியும் என்பதால். |
| 6. புத்திபூர்வ உத்தராகத்துக்கு நரகாதி க்லேசங்கள் உண்டோ ? | கிடையாது; ப்ரபந்நனுக்கு பகவான் அநுதாபம் உண்டாக்கி புந:ப்ரபத்தியில் மூட்டியோ, லகு சிக்ஷையாலோ, மேலே அபராதம் பண்ணவிடா மல் விலக்கியோ செய்வதால். |
| 7.நரகஸமாநமான இச்சரீரம் தொடருமோ? | ஆர்த்தப்ரபந்நனுக்கு அப்போதே சரீரம் கழியும் என்பதால். |
| 8.சில தீயசெயல்கள் ஸுக்ருத நாசங் களாவது போல், ப்ரபத்திக்குப் பின் நேரும் தீயவையால் ப்ரபத்தி பலன் அழிந்துவிடுமோ? | நிவ்ருத்தி தர்மங்கள் 'இட்டபடை கற்படை' எனும் கணக்கிலே, செய்த அளவு அழியாதவை; மேலும் பகவான் சரணாகதனை ஒருபோதும் கைவிடான் என்பதால். |
| 9.ப்ராரப்த கர்மத்தால், மேலே பிறப்புகள் நேருமோ ! | இந்த ஜன்மத்தின் முடிவிலேயே மோக்ஷம் வேண்டுமென காலம் குறித்துவிட்டால். |
| 10.சில வித்யைகளில், மோக்ஷத்து க்குமுன் கைவல்யாநுபவம் உண்டா | அநந்ய ப்ரயோஜநனான இவனுக்கு ஸர்வ பாபங்களும் நிச்சேஷமாகக் கழிவதால், |

| | |
|---|---|
| வது போலே, ப்ரபந்நனுக்கும் பலன் தாமதமாகுமோ ! | தாமதமாகாது. |

ஆக உத்தரார்த்தத்தால், த்வயத்தில் உத்தரகண்டத்தில் சொன்ன பலமானது, 'நம:' சப்த ஸம்க்ஷிப்த அநிஷ்ட நிவ்ருத்தி விவரண முகத்தாலே சொல்லப்படுகிறது.

சரம ச்லோகத்தின் திரண்ட பொருள் :

"சேதநனே! அல்பமான ஜ்ஞாந-சக்தி-ஆயுஸ் உடைய, ஆனால் மோக்ஷம்பெற விளம்பத்தைப் பொறுக்காத நீ, செய்ய அரிதாயிருக்கும் உபாயங்களில் அலையாதே, மிக எளியனாய், எல்லாவற்றிற்கும் அடைக்கலமாய் அதற்கு ஏற்ற எல்லா குணங்களையும் கொண்ட என்னை ஒருவனையே உபாயமாக வரித்து, ஐந்து அங்கங்களுடன் பரஸமர்ப்பணத்தைப் பண்ணு.

பரமகாருணிகனாய் ஸுப்ரஸந்நனாய் நிரங்குச ஸ்வாதந்த்ர்யனாய் ஸ்வார்த்த ப்ரவ்ருத்தனான நானே, க்ருதக்ருத்யனாய், எனக்கு அடைக்கலமாய், அத்யர்த்த ப்ரியதமனான உன்னுடைய, பலவகைப்பட்டதும், அளவற்றதும், உன்னால் ஒழிக்க முடியாததுமான விரோதி வர்க்கத்தை மேலும் தொடராதபடி, என் ஸங்கல்ப மாத்ரத்தாலே வேரறுப்பேன். என்னையும் என்னுடையவற்றையும் நீ அநுபவிக்கத்தந்து, உன்னை எனக்கு ஸமமான போகமுடையவனாக்கி, அந்த அநுபவத்தின் போக்கு வீடாக, எங்கும் எப்போதும் எந்நிலையிலும் செய்யத்தக்க எல்லாவகை கைங்கர்யத்தையும் உனக்குக் கொடுத்து மகிழ்வேன். நீ ஒன்றுக்கும் சோகிக்க வேண்டாம்" என்று பார்த்தஸாரதியான பகவான் அருளிச் செய்கிறார்.



ஸ்ரீரங்கநாயகி தாயார் - நம்பெருமாள் பங்குனி உத்திரம் சேர்த்தி சேவை

## *30.* ஆசார்ய க்ருத்யாதிகாரம்

*“அருளுற்ற சிந்தையினால் அழியாவிளக்கேற்றினர்”*

**ஸதாசார்யர்களின் செயல் :**

- வேத/ *சாஸ்த்ர*ங்களில் ஆங்காங்கேசொல்லப்பட்ட ரஹஸ்யங்களையெல்லாம் ஒன்று திரட்டுதல்;
- அவைகளின் அர்த்தங்களைத் தாங்களும் அநுஸந்தித்து, ஆஸ்திக்யம் முதலிய ஸத்வகுணமுடைய *சிஷ்ய*ர்களுக்கு, நன்கு பரீக்ஷை செய்தபின், அஷட்கர்ண மாக (மூன்றாம் நபர் கேளாவண்ணம்) உபதே*சி*ப்பது;
- குணநலம் இல்லாத ஆஸுரப்ரக்ருதிகளுக்கு, தெளிவிக்காமல் மறைப்பது;
- இப்படி, சீரிய தநத்தை சேமித்து வாழுமாப்போலே, *ப*லன் பெற்றவர்களாக வர்த்திப்பது:

ஆக, **ஸம்ப்ரதாய ப்ரவர்த்தனமே ஆசார்யனுடைய முக்ய செயல்** என்று சொல்லப்பட்டது.

**ஸதாசார்யர்கள் செய்யும் உபதேசம் :**

விசேஷ ஜ்ஞாநமில்லாத, ரஹஸ்யார்த்தங்களைத் தெளிவாய் உணரமுடியாதவர் களாய் தாம் உய்வதற்கு அவ*ச்ய*மான விஷயங்களை மட்டும் சுருக்கமாகத் தெரிந்து கொள்ள விரும்பும் ஸாதாரண அதிகாரிகளுக்கு :

“**தத்வ**மாவது - ஆத்மா என்பவன் தேஹ-இந்த்ரியாதிகளைவிட வேறுபட்டவன்; நித்யன்; இவை இரண்டையும்விட வேறான – *சேஷி*யான பரமாத்மா ஒருவன் உண்டு. இப்பரமாத்மாவை ஒழிய இவ்வாத்மாவுக்குத் தானோ/ பிறரோ ரக்ஷகராகமாட்டார்;

**ஹித**மாவது – அநாதிகாலம் ஸம்ஸரித்துப்போந்த ஆத்மாவுக்கு, இனி ஒரு பிறப் பின்றி ரக்ஷிக்கவேண்டுமென ஆசார்யர் உபதே*சி*த்த த்வயத்தாலே, ஸ்ரீமந் நாராயண னுடைய பாதங்களை *ச*ரணமாகப் பற்றி, ஆத்மாத்மீய பரஸமர்ப்பணம் செய்தல்;

**உத்தர க்ருத்ய**மாவது – ஆசார்யன் காட்டிக்கொடுக்க நம்மை ஏற்ற ஈ*ச்*வரன், இனி ஒருபோதும் கைவிடான் என்ற தேற்றத்தோடே, இங்கிருந்த காலம் அபவர்க்க பூர்வரங்கமான நிரபராத அநுகூல வ்ருத்தியோடு நடப்பது,”

**என்பவைகளை உபதே*சி*ப்பது.**

இப்படிப்பட்ட **ஸதாசார்யர்களைப்** பெற்றதுதான் நம் **மடப்பள்ளியாச்சான் ஸம்ப்ரதாயம்.** இதன் வரிசை, கீழே குருபரம்பராஸாராதிகாரத்தில் அநுஸந்திக் கப்பட்டது.

## *31.* *ஸிஷ்ய க்ருத்யாதிகாரம்*

*"இருளனைத்தும் மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறு"*

**ஸிஷ்யன் இருக்கவேண்டிய நிலை :**

| நிலை | பயன் |
|---|---|
| தன் அறியாமை இருளைப்போக்கின ஆசார்யனின் செய்நன்றியை மறவாமலும் அவர்க்கு த்ரோஹம் நினைக்காமலும் இருப்பது. | இதனால், பகவானின்/ லோகத்தாரின் நிந்தனைக்கும்/ தண்டனைக்கும் ஆளாகாமல் தப்பிக்கலாம். |
| சக்திக்கேற்ற குருதக்ஷிணை ஸமர்ப்பிக்க வேணும். | கர்தவ்யத்திலிருந்து பிறழாமல் தப்பிக்கலாம். |
| பகவானிடத்திற்போல் ஆசார்யனிடத்திலும் பக்தி-ச்ரத்தாதிகளுடன் வர்த்திக்க வேணும். | சாஸ்த்ரமெனும் கண்களைப் பெற்றும் குருடனாகாமலும், பகவதநுபவத்துக்கீடான ஆசார்ய அநுபவத்தை, பிறவி ஏழையான இவன், இழக்காமலும் இருக்கலாம். |

**ஸிஷ்யன் தவிர்க்கவேண்டியவை :** ஆசார்யன் அநுக்ரஹித்த தனமாகிற ரஹஸ்யார்த்தங்களை :

- ✖ தன் விபரீத அநுஷ்டாநங்களினால், பிறர்க்கு பயன்படாதபடி செய்வது;
- ✖ கற்றதே ப்ரயோஜநம் என்றிருப்பது;
- ✖ பணத்திற்காக மற்றவர்க்குச் சொல்வது;
- ✖ பொருளாசையினால் அறிவைப் பெருக்குவது/ பிறர்க்குப் பயன் படுத்துவது;
- ✖ அஸூயை உடையவனுக்கு உபதேசிப்பது;
- ✖ அத்யாத்ம ரஹஸ்யங்களை குரூபதேசமில்லாமல் தானே ஏடு பார்த்தோ, சுவரேறிக் கேட்டோ சொல்வது;
- ✖ தான் குருவாக நிற்கும்போது தன் ஸிஷ்யர்கள் – வணங்குதல், பணிதல், தனியனை ஸேவித்தல், சுச்ரூஷை செய்தல் ஆகியவை – செய்யாமல் இருக்கையில் உபதேசிப்பது;
- ✖ [ ஸ்வாசார்ய பஜநம் செய்யாதிருத்தல் என்பது 32 அபசாரங்களில் ஒன்றாகச் சொல்லப்பட்ட போதிலும்; அதனால் தெளிந்த பகவதநுபவம் என்ற ஸம்பத்தும், ஆத்மாவின் இருப்பு தொடர்வதற்குக் காரணமான சேஷத்வ அநுஸந்தான பூர்வக ஸ்வநிஷ்டையாகிற ஆயுளும் குலையும் ஆபத்து இருந்தும் ] தான் உபதேசிக்கும்போது, தன் ஆசார்யனைப் ப்ரகாசிக்காமல் இருப்பது.

## 32. நிகமனாதிகாரம்

*"நிலைகள் தானுளனாய் உகக்கும் தரம்"*

### இதுவரை சொன்னவைகள் . . . . .

- *ச்ருதி*-ஸ்ம்ருதி-ஸூத்ர-ஸம்ப்ரதாயங்களால் குறிப்பிடப்பட்டதும்;
- அவற்றைத் தழுவிய யுக்திகளின் துணைகொண்டதும்;
- ஆசார்யரிடம் கேட்டபடி சொல்லப்பட்டவையும்;
- (ஸ்வாமி தேசிகன்) உள்ளத்தில் ப்ராமாணிகமாய்த் தோன்றியபடியும்;
- அஜ்ஞாந-ஸம்சய-விபர்யயங்கள் தீர விளக்கப்பட்டவையுமாம்.

### இந்த அர்த்தங்கள் குற்றமற்றவை :

இவைகள் நம் **பூர்வாசார்யர்கள்** சென்ற வழியைப் பின்பற்றி சொல்லப் பட்டவையாதலால், தவறு நேர்வதற்கு ஸம்பாவனையே இல்லை.

### இவ் அர்த்தங்களைக் கேட்டறியவேண்டிய முறை :

இவைகளையெல்லாம், **ஸத்ஸம்ப்ரதாய**முடைய – **ஸதாசார்ய**னிடம் – சீரிய முறையில் அணுகி – வணக்கத்துடன் - கவனமாகக் கேட்டு - அவைகளை ஒட்டிய நல் வார்த்தைகளையும் ஆய்ந்தெடுத்து -**அப்யாஸ**த்தினால் தெளிந்துகொள்ளல் வேண்டும்.

### ஸத்ஸம்ப்ரதாயத்தைப் பின்பற்றுவோர் பெறும் பேறு :

- ✓ தனிவழியில் செல்லும் பயம் இல்லாமை;
- ✓ **கர்மப்ரவாஹ**த்துக்கு அஞ்சவேண்டாமை;
- ✓ எல்லாவற்றினும் உயர்ந்ததும், பரமபதத்தை அடைவிப்பதும், பரமபுருஷர்த்த-ஸந்தோஷ த்தைக் கொடுப்பதுமான **மார்க்கம்** அறிந்தவர் ஆதல்;
- ✓ அர்ச்சிராதிகதியிலே சென்றக்கால், "இருந்த நாள் இறைகொண்ட தேவதைக ளெல்லாம், காணிக்கையிட்டுக் கண்டு அநுவர்த்திக்கும்" **அநுபவம்** பெறுதல்;
- ✓ அவர்களுக்கும் எட்டவொண்ணாத எல்லைகளையெல்லாம் கடத்தல்;
- ✓ நித்யஸூரிகள் திரளில் சேர்ந்து, கலங்காப் பெருநகரில் திருவுடன் அமர்ந்த தெய்வநாயகனின் தாளிணைக் கீழ் ஸர்வதேச- ஸர்வகால- ஸர்வாவஸ்தோசித-ஸர்வவித கைங்கர்யங்களைப் பெற்று வாழ்வது.

ஆக, "**ஸம்ப்ரதாய காலக்ஷேப**ங்களால் **கால**த்தைக் கழித்துக்கொண்டு, எம்பெருமானின் **ஸங்கல்ப**த்தை எதிர்பார்த்து நின்றதாக" ஸாதிக்கும் ஸ்வாமி தே*சி*கன், அதன் மூலம் அதைப் பின் பற்றுமாறு நமக்கும் **உபதே*சி***க்கிறார்.

ரஹஸ்யத்ரயஸாரோயம் வேங்கடேச விபச்சிதா | சரண்ய தம்பதி விதாம் ஸம்மத: ஸமக்ருஹ்யத ||

கவிதார்க்கிக ஸிம்ஹாய கல்யாண குணசாலினே | ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்த குரவே நம: ||

*சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே* ***சரணம்***

*ஸ்ரீரஸ்து*

**ஸ்ரீ திருக்குடந்தை தேசிகன் என்று ப்ரஸித்தரான ஸ்ரீகோபாலதேசிகன்**



அருளிச்செய்த



ஸ்ரீவேதாந்த தேசிக திவ்ய ஸஹஸ்ரநாமாவளியில்

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார விஷய கர்ப்பமான நாமாவளி ஸ்தோத்ரம்

| அதிகாரம் | எண் | நாமாவளி |
|---|---|---|
| குருபரம்பரா ஸாரம் | 794 | ஓம் த்ரமிடோபநிஷத் த்ரஷ்ட்ரு ஸூரிப்ருந்த உபகாரவிதே நம: |
| | 795 | மோக்ஷைகஸாதந ஆசார்யவத்தா ஸாதந தத்பராயநம: |
| | 796 | ஸ்வாசார்யாதி சரண்யாந்த பக்திக்ரம விசேஷவிதே நம: |
| | 797 | ஸ்ரீமத் பகவதாசார்யபாவ பாதக பாதகாய நம: |
| | 798 | சடாரி நாத யோகீந்த்ர குருசிஷ்யத்வ ஸாதகாய நம: |
| | 799 | அபரீக்ஷ்ய ரஹஸ்யாதி ப்ரதாந பஹுதோஷவிதே நம: |
| | 800 | பக்தி ப்ரகாசித குருவம்ச சிஷ்ய நிபந்தநாய நம: |
| | 801 | அஸம்பாஷ்யாதி ஸம்பாஷண நிஷ்க்ருதி குருஸ்ம்ருதயே நம: |
| உபோத்காதம் | 802 | ஓம் மோக்ஷார்த்த சாஸ்த்ர அநாரம்பஹேதுதிக்க்ருதிதக்ஷிணாயநம: |
| | 803 | ஆசார்ய நிகட ப்ராப்தி ஹேதுஷட்க நிரூபகாய நம: |
| ஸாரநிஷ்கர்ஷம் | 804 | ஓம் ஸாரநிஷ்கர்ஷ குசலாய நம: |
| ப்ரதாநப்ரதி தந்த்ரம் | 805 | ஓம் ப்ரதாந ப்ரதிதந்த்ரவிதே நம: |
| | 806 | ஈச ஆதாரகதா சேஷித்வ நியந்த்ருத்வ போதகாய நம: |
| | 807 | ஜீவ ஆதேயத்வ சேஷத்வ நியாம்யத்வ நிரூபகாய நம: |
| | 808 | ஸங்கல்பாதீந நித்யாக்ய வஸ்துஸ்திதி விசேஷவிதே நம: |
| | 809 | சேஷ சேஷ்யாதி ஸம்பந்த பலிதார்த்த விசேஷவிதே நம: |
| அர்த்தபஞ்சகம் | 810 | ஓம் அர்த்தபஞ்சக தத்வஜ்ஞாய நம: |
| தத்வத்ரய சிந்தநம் | 811 | ஓம் தத்த்வத்ரய விசேஷவிதே நம: |
| | 812 | ஸ்வாதீந த்ரிவித அசித் சித் ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்தி த்ருசேநம: |
| | 813 | ப்ரமாணகம்ய தர்மி ஸ்வரூப ரூபக தர்மவிதே நம: |
| | 814 | ஜீவலக்ஷண தத்த்வஜ்ஞாய நம: |
| | 815 | பத்த லக்ஷண லக்ஷித்ரே நம: |
| | 816 | பத்த ஸ்திதி ப்ரவ்ருத்திஜ்ஞாய நம: |
| | 817 | முக்த லக்ஷண லக்ஷித்ரே நம: |
| | 818 | முக்த ஸ்திதி ப்ரவ்ருத்திஜ்ஞாய நம: |
| | 819 | நித்ய லக்ஷண லக்ஷித்ரே நம: |

| | | |
|---|---|---|
| | 820 | நித்ய ஸ்திதி ப்ரவ்ருத்திஜ்ஞாய நம: |
| | 821 | நித்யாதி அந்யோந்ய பேதத்ருசே நம: |
| | 822 | நித்ய முக்தாத்ம கைங்கர்யஸார்வவித்ய நிரூபகாய நம: |
| | 823 | த்ரிகுண ஸ்திதி ப்ரவ்ருத்திஜ்ஞாய நம: |
| | 824 | ஈச லக்ஷண லக்ஷித்ரே நம: |
| | 825 | அவதார ரஹஸ்யஜ்ஞாய நம: |
| | 826 | பர வ்யூஹாதி பேதத்ருசே நம: |
| | 827 | ஸ்ரீ ஜகத்கரணத்வாதி ஸாதக அநேக யுக்திமதே நம: |
| | 828 | ஸ்ரீமந் நாராயண பரதேவதா நிர்ணயக்ஷமாய நம: |
| | 829 | ஸர்வதேவ பரப்ரஹ்ம அபேத கண்டந தக்ஷிணாய நம: |
| | 830 | த்ரிமூர்த்தி ஸாம்ய தமநாய நம: |
| | 831 | த்ரிமூர்த்தி ஐக்ய விநாசகாய நம: |
| | 832 | த்ரிமூர்த்தி உத்தீர்ண பரமதேவதா கண்டந க்ஷமாய நம: |
| | 833 | த்ரிமூர்த்திஅந்தர்கத ப்ரஹ்ம ருத்ரபாரம்ய கண்டநாய நம: |
| | 834 | ப்ரஹ்மருத்ராதி கார்யத்வ கர்மவச்யத்வ ஸாதகாய நம: |
| | 835 | ப்ரஹ்ம ருத்ராதி பகவத் பாரதந்த்ர்ய விசாரகாய நம: |
| | 836 | ப்ரஹ்மாதி பகவந்மாயாயத்த தீஹ்ராஸவ்ருத்தி த்ருசே நம: |
| | 837 | விஷ்ணுதர்சித ஸர்கஉபஸர்காதி விதி சம்பு த்ருசே நம: |
| | 838 | சுபாச்ரயத்வ ரஹித ப்ரஹ்ம ருத்ராதி ஸாதகாய நம: |
| | 839 | ப்ரஹ்ம ருத்ராதி த்ரிகுண பாரவச்ய நிரூபகாய நம: |
| | 840 | ப்ரஹ்ம ருத்ராதி பகவதாச்ரிதத்வ விதாயகாய நம: |
| பரதேவதா பரமார்த்யம் | 841 | ப்ரஹ்ம ருத்ராதி பகவத் விபூதித்வ நிரூபகாய நம: |
| | 842 | ப்ரஹ்ம ருத்ராதி பகவத் ப்ரகாரத்வ அபிதாயகாய நம: |
| | 843 | ப்ரஹ்ம ருத்ராதி பகவச் சரீரத்வ ப்ரகாசகாய நம: |
| | 844 | ப்ரஹ்ம ருத்ராதி பகவத் தாஸத்வ ஸ்தாபந க்ஷமாய நம: |
| | 845 | ஸாத்விக உத்பத்திஹேது மதுஸூதந த்ருஷ்டித்ருசே நம: |
| | 846 | ரஜஸ் தமோகுணாஸக்தி ஹேது ப்ரஹ்மாதி த்ருஷ்டி த்ருசே நம: |
| | 847 | ப்ரஹ்ம ருத்ராதி மோக்ஷார்த்தி ஜநோபாஸ்யத்வ பாதகாய நம: |
| | 848 | ப்ரஹ்ம ருத்ராதி உபாஸ்யத்வ வசோ நிர்வாஹகாரகாய நம: |
| | 849 | ப்ரஹ்ம ருத்ராதி பாரம்யத்ருக் கர்ம அநர்ஹதாதி த்ருசே நம: |
| | 850 | ப்ரஹ்மாதி பகவத் ஸாம்யத்ருக் பாஷண்டித்வ ஸாதகாய நம: |
| | 851 | விஷ்ணு நிக்ராஹ்ய பாத்ருத்வ ரஹித இதர தைவத்ருசே நம: |
| | 852 | க்ஷிப்ரேதர பலப்ராப்தி ஸாதநேதர தைவத்ருசே நம: |
| | 853 | காம்யாத்யர்த்த ஆச்ரித அநந்த புருஷார்த்தத விஷ்ணுதியே நம: |

| | | |
|---|---|---|
| | 854<br>855<br>856<br>857<br>858 | அஜ்ஞ அந்யதேவ யஜந ப்ரீதவிஷ்ணு ப்ரகாசகாய நம:<br>அஜ்ஞ அந்யதேவ யஜந பல வைகல்ய ஸாதகாய நம:<br>விஷ்ண்வாத்மக அந்யதேவஜ்ஞ கர்மபௌஷ்கல்ய ஸாதகாய நம:<br>நிஷ்காம விஷ்ணுஸேவா அநுஷங்க அந்யபல ஸித்தி த்ருசே நம:<br>பராங்குசாதி ஸ்ரீஸூக்தி ஸாதித உத்க்ருஷ்ட மாதவாய நம: |
| முமுக்ஷுத்வம் | 859 | ஓம் முமுக்ஷாஹேது ஸாரஜ்ஞாய நம: |
| அதிகாரி விபாகம் | 860<br>861 | ஓம் அதிகாரி விபாகவிதே நம:<br>ப்ரபத்தி அவாந்தர பிதா வேத்ரே நம: |
| உபாய விபாகம் | 862 | ஓம் உபாய விபாகவிதே நம: |
| ப்ரபத்தியோக்யா | 863 | ஓம் ப்ரபத்தி அதிக்ரியா பஞ்சதச நிர்ணய தூர்வஹாய நம: |
| பரிகர விபாகம் | 864<br>865<br>866 | ஓம் ந்யாஸ வித்யாங்க பஞ்சத்வ உபகார வ்யாக்ருதி க்ஷமாய நம:<br>விச்வாஸ உத்கர்ஷ விஹதிகாரண வ்யாஹ்ருதி க்ஷமாய நம:<br>விச்வாஸ கோப்த்ருவரண சப்தார்த்தத்வ ப்ரகாரவிதே நம: |
| ஸாங்கப்ரபதநம் | 867<br>868<br>869<br>870<br>871 | ஓம் ப்ரபத்தி லக்ஷண அபிஜ்ஞாய நம:<br>ந்யாஸ வித்யாங்கி வேதித்ரே நம:<br>த்ரிவர்க்க மோக்ஷஜநக ந்யாஸவித்யா விசேஷவிதே நம:<br>ஸாங்கப்ரபத்தி அநுஷ்டாந ப்ரயோகவிதி ஸாதகாய நம:<br>ஸாங்கப்ரபத்தி அநுஷ்டாந ஸக்ருத்வ ஸ்தாபநக்ஷமாய நம: |
| க்ருத க்ருத்யம் | 872 | ஓம் ஸஹேது க்ருதக்ருத்யத்வ அநுஸந்தாந விசாரதாய நம: |
| ஸ்வநிஷ்டா-பிஜ்ஞாநம் | 873 | ஓம் ஸ்வஸ்வரூப உபாய பல நிஷ்டாத்ரய விவேகவதே நம: |
| உத்தரக்ருத்யம் | 874 | ஓம் ப்ரபத்தி உத்தர கர்த்தவ்ய க்ருத்யநிர்ணய தக்ஷிணாய நம: |
| புருஷார்த்த காஷ்டை | 875<br>876<br>877 | ஓம் பகவத்தாஸ கைங்கர்ய தாஸ்ய த்வைவித்ய வேதித்ரே நம:<br>பகவத்தாஸ தாஸ்யப்ராப்த அநந்யத்வ விரோதக்நே நம:<br>ஸ்ரீமத்பாகவத அந்யோந்யதாஸ்ய ஸாதந தத்பராய நம: |
| சாஸ்த்ரீய நியமநம் | 878<br>879<br>880 | ஓம் ப்ரபந்நாந்வஹ ஸம்பாவ்ய சாஸ்த்ரீய நியம ப்ரியாய நம:<br>பாஷ்யகாரோக்த சாஸ்த்ராநுமத கைங்கர்ய ஸாரவிதே நம:<br>உல்லங்கித ஆஜ்ஞாகரண அவைஷ்ணவத்வ ப்ரஸாதகாய நம: |
| | 881<br>882<br>883 | ஓம் ப்ரபந்ந ஆஜ்ஞாதிக்ரமாதி ப்ராயச்சித்த விசேஷவிதே நம:<br>ஏநோநிஷ்க்ருதி உதாஸீந ப்ரபந்ந லகுதண்டத்ருசே நம:<br>ஆஜ்ஞாதிலங்கி கடிந ப்ரபந்ந நரகாப்ரியாய நம: |

| | | |
|---|---|---|
| அபராத பரிஹாரம் | 884 | ப்ரபந்ந புத்திபூர்வைந: ப்ராயச்சித்த விசேஷவிதே நம: |
| | 885 | மஹாபாத ப்ரபந்ந ப்ரஸித்த நிஷ்க்ருதி வேதித்ரே நம: |
| | 886 | கடிந அநியதாயு: ப்ரபந்ந ஆயுர்வ்ருத்தி ஸாதகாய நம: |
| | 887 | மோக்ஷார்த்த ந்யாஸ ஸம்ஹார்ய தீபூர்வோத்தர பாபக்நே நம: |
| | 888 | க்ருதபாதக நாசார்த்த சரணாகதி வேதித்ரே நம: |
| ஸ்தாந விசேஷம் | 889 | ஓம் ப்ரபந்நாந்வஹ வாஸார்ஹ ஸ்தாந வ்யாக்யாந கோவிதாய நம: |
| நிர்யாணம் | 890 | ஓம் விகலாங்க ந்யாஸவித்யா பூர்ணஹேதுத்வ ஸாதகாய நம: |
| | 891 | தேவாந்தர த்ருடாஸக்த ப்ரபந்ந நரகோக்திமதே நம: |
| | 892 | வித்வதேகாந்த உத்க்ரமண க்ரமதர்சன தோஷிதாய நம: |
| | 893 | உபாயாரம்ப நஷ்டாச்லிஷ்ட பூர்வோத்தர பாபத்ருசே நம: |
| | 894 | இஷ்டாவதூத அந்யபல தீ வைமுக்ய ப்ரபந்நவிதே நம: |
| | 895 | விநஷ்டாச்லிஷ்ட புண்யாகஸுஹ்ருத்த்விட் ஸங்க்ரமோக்திவிதேநம: |
| | 896 | விநஷ்டாச்லிஷ்ட புண்யாக விதூநந பதார்தவிதே நம: |
| | 897 | புத புண்யாக மித்ராரி ஸங்க்ராந்தி வ்யாஜ போதகாய நம: |
| கதி சிந்தநம் | 898 | ஓம் அர்ச்சிராதி கதிஜ்ஞாத்ரே நம: |
| | 899 | ஸூக்ஷ்மதேஹ விஸர்க்கவிதே நம: |
| | 900 | திவ்யதேச ப்ராப்திபூர்வ க்ரமதர்சன தக்ஷிணாய நம: |
| | 901 | முக்த ப்ரபந்ந ஸாநந்த விபுஜ்ஞான துரந்தராய நம: |
| | 902 | மதுவித்யாதி அதீகாரி கத்யந்தர விசேஷவிதே நம: |
| பரிபூர்ண ப்ரஹ்மாநுபவம் | 903 | ஓம் முக்த்யவஸ்தா ஆநந்த தாரதம்யவாத விநாசகாய நம: |
| | 904 | ஜகத்ஸ்ரஷ்ட்ரு பரப்ரஹ்ம துல்யாநந்த விமுக்தி த்ருசே நம: |
| | 905 | பரிபூர்ண பரப்ரஹ்மாநுபவ ச்ருதிவேதித்ரே நம: |
| | 906 | ஸுநிச்சிதார்த்த பரப்ரஹ்மாநுபவ ரீதிகாய நம: |
| | 907 | ஸம்ஸார ப்ரதிகூலார்த்த முக்த்யவஸ்தா ஆநுகூல்ய த்ருசே நம: |
| | 908 | ஸ்ரீபதித்வ பரப்ரஹ்ம துல்ய ஆநந்த விமுக்தி த்ருசே நம: |
| | 909 | ஓம் ஸதாசார்யோபதேச ஏகாதிகாரி ஜ்ஞாபந க்ஷமாய நம: |
| | 910 | ஸத்தர்க்க உபதேசாதிகாரி வ்யாக்ருதி கோவிதாய நம: |
| | 911 | வ்யாஜ அநபேக்ஷ பகவத்ரக்ஷகத்வ உக்திவாரகாய நம: |
| | 912 | ஸ்ரீமத்ஸ்வாதந்த்ர்யகாருண்யோபயோகவ்யாக்ருதிக்ஷமாயநம: |
| | 913 | ப்ரபத்தி அதிக்ரியாவத் விசேஷணத்வ நிரோதகாய நம: |
| | 914 | மோக்ஷாநுபாய சரண வ்ரஜ்யாவாத விநாசகாய நம: |
| | 915 | ப்ரதிபந்த நிராஸைக உபயுக்த வ்யாஜ வேதித்ரே நம: |

| | | |
|---|---|---|
| ஸித்தோபாய ஶோதநம் | 916 | தேவஸ்வாதந்த்ர்ய கருணாமூல வ்யாஜ நிராஸக்நே நம: |
| | 917 | ஶ்ரீமத் ஸம்பந்தமூல வ்யாஜநிராஸ மதாந்தகாய நம: |
| | 918 | அவ்யாஜ பகவத் பாத்ரபாவ மாநோபபத்திக்நே நம: |
| | 919 | த்வயபூர்வ ஶ்ரீபத உபலக்ஷகத்வ விநாஶகாய நம: |
| | 920 | ஶ்ரீவிஶேஷண பாவோத்த உபாய த்வித்வ விபஞ்ஜகாய நம: |
| | 921 | நிர்வ்யூட ஶரணவ்ரஜ்யா விஶ்வாஸாபேத பூர்வவாசே நம: |
| | 922 | ப்ரபத்தி ப்ரார்த்தநாபேத வாங்நிர்வாஹ விசக்ஷணாய நம: |
| | 923 | வாக்யஜந்ய ஜ்ஞாந மோக்ஷோபாயத்வ மதபஞ்ஜகாய நம: |
| | 924 | ஸ்வரக்ஷணார்த்த வ்யாபார நிவ்ருத்தி உத்தூதி தூர்வஹாய நம: |
| | 925 | ப்ரபத்தி மோக்ஷோபாயத்வ பாதக வ்ராத நாஶகாய நம: |
| ஸாத்யோபாய ஶோதநம் | 926 | ஓம் சரமஶ்லோக நிகில தர்மத்யாக பரத்வக்நே நம: |
| | 927 | நிஷித்த வர்ஜந அதர்மபாவத்வ உக்தி அபநோதநாய நம: |
| | 928 | உபாஸந ஸ்வரூப உபாய ஸ்வரூப விரோதக்நே நம: |
| | 929 | வர்ணாஶ்ரமாதி தர்மஸ்வரூப ரோத விநாஶகாய நம: |
| | 930 | ஐகாந்த ச்சேத்யந்யதேவ பரவர்ணாதி தர்மக்நே நம: |
| | 931 | பக்தி வித்யாஸித்தஹேது ப்ரரோசநகரத்வக்நே நம: |
| | 932 | பக்தி வித்யா ஶிஷ்டலோக அபரிக்ரஹ நிவாரகாய நம: |
| | 933 | பரந்யாஸாதி ஸகலகால தர்மத்வ பஞ்ஜநாய நம: |
| | 934 | ந்யாஸ ப்ரஶம்ஸகாய நம: |
| | 935 | ந்யாஸ பக்த்யாதிக்ய ப்ரதர்ஶகாய நம: |
| | 936 | அநுகூலத்வ ஸங்கல்பாதி அவஶ்யம்பாவ வேதித்ரே நம: |
| | 937 | விஶ்வாஸாங்க மஹத்வாந்தராய பங்க விசக்ஷணாய நம: |
| | 938 | ப்ரபந்ந பகவத்ப்ரேம தாரதம்ய விதாயகாய நம: |
| | 939 | குருபக்தி லகுந்யாஸ ஃபலைக்யோக்தி விசக்ஷணாய நம: |
| | 940 | பூர்வபூர்வ அக்ருதாம்ஶார்த்த புந: ப்ரபதநோக்திமதே நம: |
| | 941 | ஐஹிகார்த்த ந்யாஸகர்த்ரு ஹேதுவைகல்ய ஸாதகாய நம: |
| | 942 | அபியாநாதி பஞ்சாவஸர க்ருத்ய ஃபலோக்திமதே நம: |
| ப்ரபாவ வ்யவஸ்தை | 943 | ஓம் விஷ்ணுபக்த சதுர்த்தாதி ப்ராஹ்மண்ய விநிவாரகாய நம: |
| | 944 | விதுராதி ஸ்வஜாத்யுக்த தர்மாலங்கந த்ருஷ்டிமதே நம: |
| | 945 | நிர்வ்யூட விதுரப்ரஹ்மமேத ஸம்ஸ்க்ருதி ஸூக்திகாய நம: |
| | 946 | யத்வீச விதுராந்ந ஆதநோக்தி நிர்வாஹ தக்ஷிணாய நம: |
| | 947 | அதிதேச அநர்ஹகாரி ஸூநுவ்ருத்த ப்ரகாஶகாய நம: |
| | 948 | பகவத் பக்த சூத்ராதி தீதாநாதி க்ருதி ப்ரியாய நம: |
| | 949 | சைத்தகாயிக சூத்ரத்வபேத வ்யாக்யாந தக்ஷிணாய நம: |

| | | |
|---|---|---|
| | 950 | நாராயணைக நிஷ்டேதி வசநார்த்த ப்ரதர்சகாய நம: |
| | 951 | நிஷித்த த்யாக தர்மாக்யா முக்யார்த்தத்வ விபஞ்ஜகாய நம: |
| ப்ரபாவ ரக்ஷை | 952 | ஓம் ஶ்ரீமத்ப்ரபாவ ஸந்த்ராத்ரே நம: |
| | 953 | உபாய மாஹாத்ம்ய ரக்ஷகாய நம: |
| | 954 | பகவத்க்ஷேத்ர மாஹாத்ம்ய த்ருசே நம: |
| | 955 | வைஷ்ணவ மஹத்வவிதே நம: |
| மூலமந்த்ரம் | 956 | ஓம் ஸௌளங்கார மூலமந்த்ர அஷ்டாக்ஷரத்வ த்ராணதீக்ஷிதாய நம: |
| | 957 | த்வய மூலமநுவ்யாக்யா ரூபத்வ பரிசோதகாய நம: |
| | 958 | மூல மந்த்ர அஷ்டாக்ஷர பத தத்வார்த்த விசேஷவிதே நம: |
| | 959 | மூலமந்த்ர மஹாவாக்ய யோஜநா தசகாதராய நம: |
| த்வயம் | 960 | ஓம் த்வய ப்ரபாவ விஜ்ஞாத்ரே நம: |
| | 961 | த்வய சப்த நிருக்திவிதே நம: |
| | 962 | த்வய த்ரயீமூல தாந்த்ர மந்த்ரத்வ ஸ்தாபந க்ஷமாய நம: |
| | 963 | லக்ஷ்மீ புருஷகாரத்வ மாநஜ்ஞாய நம: |
| | 964 | ஶ்ரீபதார்த்தவிதே நம: |
| | 965 | த்வயமந்த்ர பதவ்ராத ப்ரத்யேக வ்யாக்ருதி ப்ரியாய நம: |
| | 966 | ஶ்ரீச உபயாந்தர ஸ்தாநாபத்தி ஸாரார்த்த சோதகாய நம: |
| | 967 | கார்ப்பண்ய கோப்த்ருவரண ஸார்த்தோபாயத்வ யாசநாய நம: |
| | 968 | உபாய வரணாதி ஆத்மநிக்ஷேப அங்கித்வ ஸாதகாய நம: |
| | 969 | த்வயோத்தரார்த்த கம்யார்த்த புருஷார்த்த நிரூபகாய நம: |
| | 970 | த்வய மந்த்ர மஹாவாக்ய யோஜநா த்ரய ஸாதகாய நம: |
| | 971 | ஓம் ஶ்ரீக்ருஷ்ண சரமச்லோக அவதார வ்யாக்ருதி க்ஷமாய நம: |
| | 972 | சரமச்லோக தர்மோக்தி வேத்ய நிர்ணய கோவிதாய நம: |
| | 973 | புருஷோத்தம தீ மோக்ஷஹேதுத்வ மத பஞ்ஜநாய நம: |
| | 974 | அவதார ரஹஸ்ய ஜ்ஞாநாதி மோக்ஷகரத்வக்நே நம: |
| | 975 | சரமச்லோக தர்மத்யாக அநுவாத மதப்ரியாய நம: |
| | 976 | ப்ரபத்தி தர்மத்யாக அங்கோக்தி விதி பஞ்ஜகாய நம: |
| | 977 | க்ஷேத்ரஜ்ஞ உபாஸநோபாய நித்ய அசக்தத்வ பஞ்ஜகாய நம: |
| | 978 | ஏகவாக்ய விதித்வ அநுவாதத்வ அநுபபத்தி விதே நம: |
| | 979 | குரூபாய லகூபாய கீ: ப்ரரோசகதா ப்ரியாய நம: |
| | 980 | பக்திவித்யா மந்த தீக அதிகாரித்வ மதாந்தகாய நம: |
| | 981 | உபாஸநா மந்தவிச்வாஸ அதிகாரித்வ ஸாதகாய நம: |
| | 982 | உபாஸநா லோகஸங்க்ரஹார்த்த மத மாரகாய நம: |
| | 983 | ப்ரவ்ருத்திரூப ஸகல தர்மத்யாக மதாந்தகாய நம: |

| | | |
|---|---|---|
| சரம ச்லோகம் | 984 | ப்ரபத்தி அநுஷ்டாநகால ஸர்வதர்ம விமுக்திக்நே நம: |
| | 985 | ப்ரதக்ஷிண ப்ரணாமாதி அநுஜ்ஞா கைங்கர்ய ஹேதுத்ருசே நம: |
| | 986 | அவஜ்ஞாக்ருத பக்தாதி ஜந்மசிந்தாதி தோஷத்ருசே நம: |
| | 987 | சாஸ்த்ர வ்யவஸ்தா ஸித்த்யர்த்த பக்தஜந்மாதி சிந்தகாய நம: |
| | 988 | ஸாரகல்க ஸ்வரூப ஸ்ரீமத்கைங்கர்ய விபாகத்ருசே நம: |
| | 989 | ஸம்பந்த தீ முகாநேக மோக்ஷஹேது மதாந்தகாய நம: |
| | 990 | சரமச்லோக நிகில தர்மத்யாக ஷடர்த்தவிதே நம: |
| | 991 | சரமச்லோக ஏகசப்த ஷடர்த்தோக்தி விசக்ஷணாய நம: |
| | 992 | பரதந்த்ர ஸ்வபாவாத்ம வித்யநர்ஹத்வ பஞ்ஜகாய நம: |
| | 993 | பரதந்த்ர ஆத்மகர்த்ருத்வ ஸ்வரூப விசதோக்திமதே நம: |
| | 994 | ஸ்ரீமத்கர்த்ரு ப்ரேரக அநுமந்த்ரு காரயித்ருத்வ விதே நம: |
| | 995 | க்ரியமாணாக வித்வம்ஸி ப்ரபத்தி ப்ரதிபாதகாய நம: |
| | 996 | ப்ரஹ்மவித்யாரம்ப நஷ்டாச்லிஷ்ட கர்மஸ்வரூபவிதே நம: |
| | 997 | ப்ரியாப்ரிய உபஸங்க்ராந்த வித்வத் புண்யாக வேதித்ரே நம: |
| | 998 | ப்ராப்தி அந்தராய விதே நம: |
| | 999 | ஸாத்யோபாய ரோதி விசேஷவிதே நம: |
| | 1000 | ப்ரதிகூல அநுபூத்யாதி ஹேது பாப ஸ்வரூபவிதே நம: |
| | 1001 | குணாஷ்டக ஆவிர்பாவோக்தி வேத்யார்த்த பரிசோதகாய நம: |
| | 1002 | கைவல்யாக்ய புமர்த்த ஸ்வரூப நித்யத்வ பாதகாய நம: |
| | 1003 | மாசுசச்சப்த நிர்ணுந்ந சோக அநேகவிதத்வ விதே நம: |
| ஆசார்யக்ருத்யம் | 1004 | ஓம் ஆசார்ய க்ருத்யவிதே நம: |
| சிஷ்ய க்ருத்யம் | 1005 | ஓம் சிஷ்ய க்ருத்ய வேதநாய நம: |
| நிகமநம் | 1006 | ஓம் யதீந்த்ர மாஹாநஸிக ஸம்ப்ரதாய ஸுதாப்ரதாய நம: |

ஸ்ரீமதே ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகாய நம:



ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன்

ரத்னாங்கி சேவை - திருவஹீந்திரபுரம்

நூலாசிரியர் குறிப்பு: இந்த புஸ்தகத்தில் இடம்பெற்றுள்ள படங்கள் அனைத்தும் நெடுந்தெரு ஸ்ரீ முகுந்தன் ஸ்ரீநிவாசன் ஸ்வாமியால் தொகுகப்பட்டது.

ஸ்ரீ ஸ்ரீதர் லக்ஷ்மிநரஸிம்மன் ஸ்வாமி, ஸ்ரீ முரளி தேசிகாச்சாரி ஸ்வாமி, ஸ்ரீ ந.சந்தானகிருஷ்ணன், ஸ்ரீ திவாகர் கண்ணன் ஸ்வாமி, சௌ ர.சித்ரலேகா ஆகியோர் படங்கள் தந்துதவியுள்ளார்கள்.